
பாலைப் பூங்காற்றே
சத்யா இராஜ்குமார்
பாலைப் பூங்காற்றே
சத்யா இராஜ்குமார்

# பாலைப் பூங்காற்றே

## 1

“குட்மார்னிங் தன்யா.”

“வெரிகுட்மார்னிங் விமலா.”

“என்ன இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்க?”

“அப்படியா?”

“வாவ், ஹேப்பி பர்த்டே தன்யா.”

“தேங்க் யூ விமலா.”

“ஏய், என்ன சிரிக்கற...”

“அதெல்லாம் இல்லையே.”

“ம்கூம், என்னவோ இருக்கு சொல்லு.”

“இல்ல எம்.டி. சொன்ன ஒரு வேலைய நான் செய்யல அதான்...”

''என்னது?''

இவள் எம்.டி. சொன்ன வேலையைச் செய்யவில்லை யாமா,

இவளே செய்யாவிட்டால் பிறகு யார் சரியாகச் செய்வது,

''சும்மா சொல்லாத.''

''நிஜம்.''

''என்ன வேலய செய்யல?''

''எம்.டி. என்ன கேட்டார் ஞாபகமிருக்கா?''

''என்ன... ஓ! எம்.டி. பிரியாணி கேட்டாரில்ல அதுவும் உன் பார்த்டே ட்ரீட்டா?''

''ம், அதத்தான் நான் செஞ்சுட்டு வரல.''

''அட, எனக்கென்ன எம்.டி. கேட்டா நல்லா மாட்டிட்டு முழிக்கப் போற.''

''கேக்க மாட்டார்.''

''அதெப்படி இவ்வளவு உறுதியாச் சொல்ற?''

''இன்னைக்கு தான் சின்ன எம்.டி. வரப் போறாரே.''

''சரி''

''அதனால பெரிய எம்.டி. மறந்திருக்கலாம்.''

''தெரியல, ஆனா இன்னைக்கு சின்ன எம்.டி. வரப் போறாரில்ல!''

''அப்படிதான நேத்து பெரிய எம்.டி. லோகநாதன் ஸார் சொன்னார்,'' என்றாள் தன்யா.

சரியாக அதே நேரம் அவர்களுடன் வேலை செய்யும் மற்ற பெண்கள் ஐவரும் வர, அந்த இடமே கலகல



விமலா அப்பொழுது வந்தவர்களிடம் விஷயத்தைச் சொல்ல, ''அட ஆமாமில்ல'' என்று அனைவரும் தன்யாவை வாழ்த்தினார்கள்.

''நாங்கெல்லாம் நாலஞ்சு வருஷமா' வேலை செய்ய றோம், ஆனா லோகநாதன் ஸார் எங்ககிட்ட இந்த மாதிரி ட்ரீட்டெல்லாம் கேட்டதே இல்ல. நீ வேலைக்கு வந்து நாலு மாசந்தான் ஆச்சு ஆனா உங்கிட்ட ட்ரீட் அதுவும் உன் கையால செஞ்ச பிரியாணி கேட்டிருக்கார். அப்படி தான் கொண்டு வந்திருக்க வேண்டியது தான?'' என்று ஆளாளுக்கு ஒவ்வொன்றைச் சொன்னார்கள்.

''சரி அதெல்லாம் இருக்கட்டும், எல்லாரும் வேலை யப் பார்க்கலாமா?'' என்று அனைவரையும் பொதுவாகப் பார்த்துக் கேட்டாள் தன்யா.

''சரி லோகநாதன் ஸார் கேட்டதிருக்கட்டும் எங்களுக் கெல்லாம் என்ன ட்ரீட் தரப் போறீங்க?'' என்று அவர் களில் ஒருத்தியான வித்யா கேட்க, ''அதான?'' என்று கேட்டாள் வனிதா.

''அதையெல்லாம் டி ப்ரேக்ல பார்க்கலாம் இப்பப் போய் வேலையப் பாருங்கப்பா...''

''அட தன்யாப் பொண்ணே, பிறந்தநாள் வாழ்த் துக்கள்.''

அந்தக் குரலில் அனைவருமே திரும்பிப் பார்க்க, பெரிய எம்.டி. லோகநாதன் வந்து கொண்டிருந்தார்.

''குட்மார்னிங் ஸார்'' என்ற தன்யாவைத் தொடர்ந்து அங்கிருந்த அனைவருமே அவருக்குக் காலை வணக்கம் சொன்னார்கள்.

''இந்தா இதப் புடி'' என்று பெரிய எம்.டி. லோகநாதன் தன்யாவிடம் ஒரு கவரைக் கொடுக்க வர, அதை வாங்கிக் கொள்ளத் தயங்கினாள் அவள்.

''அடப் புடிமா.''

''எதுக்கு ஸார், இதெல்லாம் வேண்டாமே...''

''உன் பிறந்தநாளுக்கு என் சின்ன கிஃப்ட், வாங்கிக்கோம்மா...''

ஏனோ அதற்கு மேல் தயங்கினால் நன்றாக இருக்காதென்று தோன்றிவிட்டிருக்க மீண்டும் ஒரு நன்றியுடன் வாங்கிக் கொண்டாள் தன்யா.

''நீ இப்படித் தயங்கற. இதோ இந்தப் பொண்ணுங்களப் பாரு வருஷத்துக்கு ரெண்டு பர்த்டே வந்தா எவ்வளவு நல்லா இருக்கும்னு மனசுக்குள்ள ஃபீல் பண்ணிட்டிருப்பாங்க...''

லோகநாதன் சொல்ல, ''அப்படியெல்லாம் இல்ல ஸார்'' என்று அங்கிருந்தவர்கள் அனைவரும் கோரஸாக மறுத்தார்கள்.

''சரிதான் போய் எல்லாரும் இனி வேலையப் பாருங்க பொண்ணுகளா'' என்று அவர் நகரப் போக, ''ஸார்..'' என்று ஏதோ சொல்ல வந்தாள் விமலா.

அவள் என்ன சொல்ல வருகிறாளென்பது தன்யாவிற்குப் புரிந்தது.

வேண்டாமே என்று கண்களால் இறைஞ்சிய தன்யாவைக் கண்டு கொள்ளாமல், லோகநாதனிடம் விஷயத்தை சொல்லியே விட்டிருந்தாள் விமலா.

''அட, இத எப்படி நான் மறந்தேன்'' என்றவர் தன்யாவைத் திரும்பிப் பார்த்து ''எங்க நான் கேட்டது?'' என்று கேட்டார்.



''ஸார்...''

''ம் என்ன பொண்ணே...''

''நீங்க சும்மாதான் கேட்டீங்களோன்னு நினைச்சேன் ஸார்.''

''ம்கூம், ஸீரியஸா தான் கேட்டேன்.''

''அப்ப நாளைக்குக் கொண்டு வந்துடறேன்.''

''சரி தான்'' என்று புன்னகையுடன் லோகநாதன் அங்கிருந்து நகர, ''விமலா பயங்கரமான ஆளு தன்யா. எதுக்கும் இவங்ககிட்ட கொஞ்சம் பாத்தே நடந்துக்கோங்க'' என்றாள் அஞ்சலி.

ஆனால் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதவளாய், ''சரி போங்க போய் அவங்கவங்க கௌண்ட்டர ரெடி பண்ணுங்க'' என்று துரிதப்படுத்திய தன்யா, அவளும் தன்னுடைய வேலையைப் பார்க்கச் சென்றாள்.

அது ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோர்.

அங்கு கிடைக்காத பொருட்களே இல்லையென்னுமளவிற்கு ஓரளவு அனைத்துமே அங்கு விற்பனை செய்யப்பட்டன.

அந்தக் கடையின் பெயர் கலைவாணி டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்.

அந்தக் கடை அவர்களுடைய நான்காவது கிளையாக இருந்தது. அது மட்டுமல்லாமல் அந்தக் கிளை தான் அவர்கள் வைத்திருப்பவற்றிலேயே சிறிய கிளையாகவும் இருந்தது.

மற்ற மூன்று கிளைகளும் ஒரு மெயின் பிரேஞ்ச்சும் வேறு ஊரில் இருக்க, அதுதான் அவர்களுடைய சொந்த

அவற்றை லோகநாதனின் ஒரே மகனான ரகுநந்தன் நிர்வகித்துக் கொண்டிருந்தான்.

அந்த நான்கு ஸ்டோர்களுமே நவீனமயமாக்கப்பட்டு, விற்பனையில் ஒன்றுக்கொன்று சக்கை போடு போட்டுக் கொண்டிருந்தன.

இனிமேல் புதிதாகச் செய்ய ஒன்றுமே இல்லையெனும் நிலையில் அந்த நான்கு கடைகளுமே இருந்ததோடு, யாருடைய தொடர்ந்த மேற்பார்வையும் இனித் தேவை யில்லையெனும் அளவிற்கும் வளர்ந்திருந்தன.

அதாவது அந்த அளவிற்கு ரகுநந்தன் அந்தக் கடை களை மாற்றியிருந்தான் என்று தான் சொல்ல வேண்டும்.

அதற்காக அவன் எடுத்துக் கொண்ட முயற்சியும், அளவிடற்கரியதாகவே இருந்தது.

அப்படி அந்த நான்கு கடைகளையும் வளர்ச்சியடையச் செய்தவன் இப்பொழுது இங்கு வரவிருப்பதும் இந்த ஸ்டோரையும் அவற்றைப் போல வளர்ச்சியுறச் செய்யத் தான்.

அதோடு அங்கு சொந்த ஊரில் இருந்து பழகிவிட்டு இங்கு புது ஊரில் இருக்கச் சற்று சிரமமாக இருக்கிற தென்று லோகநாதன் மகனிடம் சொல்லிக் கொண்டே இருந்ததும் ஒரு காரணம்.

அங்கு தான் வந்து தந்தையிடமிருந்து அனைத்துப் பொறுப்புகளையும் வாங்கிக் கொண்டு அவரை மீண் டும் சொந்த ஊருக்கே அனுப்பி விட முடிவு செய்திருந் தான்.

அப்படி வந்து விட்டால் இப்பொழுது இருப்பதைப் போல இன்னும் கடையை நான்கைந்து மடங்கு பெரி தாக்குவது.



அதற்காகப் புதிதாகக் கட்டிடம் எழுப்புவது.

பிறகு அதைப் பழைய நான்கு கடைகளைப் போல நவீனமயமாக்கி, ஸிஸ்டமேட்டிக்காக மாற்றுவது.

இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ வேலை களிருக்க, அவற்றை சில வருடங்களானாலும் பொறுமை யாக இருந்து இங்கும் அனைவரையும் தயார் செய்து விட்டு வருவதாகச் சொல்லியிருந்தான்.

அதாவது தந்தையிடம்,

அதை லோகநாதன் தானும் தனது ஊழியர்களிடம் ஏற்கனவே சொல்லியிருந்ததோடு, மகன் வந்து விட் டால் அவன் பொறுப்பில் அனைத்தையும் ஒப்படைத்து விட்டுக் கிளம்பவும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

ஆனால் அனைவரும் எதிர்பார்த்ததைப் போல ரகுநந்தன் அன்று வந்திருக்கவில்லை.

போனில் லோகநாதனை அதாவது தந்தையை அழைத்து திடீரென்று ஒரு முக்கியமான வேலை அதை முடித்து விட்டு மறுநாள் வந்து விடுகிறேனென்று சொல்லி விட்டிருந்தான்.

## 2

மதிய உணவின் போது மீண்டும் பெண்கள் அனை வரும் ஒன்று சேர்ந்திருந்தார்கள்.

ஆனால் அவர்கள் அனைவரும் உணவு முடிந்து எழத் தயாராக இருந்த நேரத்தில் தான் சாப்பிடுவதற்காக வந்து சேர்ந்தாள் தன்யா.

தன்யாவைத் தவிர மற்ற அனைவருமே குறிப்பிட்ட நேரத்தில் மதிய உணவை எடுத்துக் கொள்பவர்களாகவே இருந்தார்கள்.

ஆனால் தன்யா அப்படியல்ல.

எப்பொழுது நேரம் கிடைக்கிறதோ, அதாவது எப்பொழுது விற்பனை சற்று மந்தமாகத் தெரிகிறதோ அப்பொழுது தான் உணவருந்த வருவாள்.

அதற்கான காரணமும் வேறொன்றுமல்ல.

மற்ற பெண்களைப் போல தனித்தனி விற்பனைப் பிரிவுகளைப் பார்த்துக் கொண்டிருக்காமல், அந்த மொத்தக் கடைக்குமே அவள் ஒட்டுமொத்த மேற்பார்வையாளராக இருந்தாள்.

வேலைக்கு வந்து சில மாதங்களே ஆன நிலையில் எம்.டி. அவளுக்கு அவ்வளவு பெரிய பொறுப்பைக் கொடுத்திருந்தில், தொடக்கத்தில் அனைவருக்குமே சற்று எரிச்சலும், பொறாமையும் தான்.

ஆனால் அதெல்லாம் தொடக்கத்தில் சில நாட்கள் தான்.

போகப்போக தன்யாவின் திறமை, படிப்பு, பொறுமை, முக்கியமாகத் தனக்குத் தான் அனைத்தும் தெரியும், அதிகாரம் தன் கையில் தான் என்றெல்லாம் பார்க்காமல் அவள் யதார்த்தமாகப் பழகிய விதம், அனைவரையும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றியிருந்தது.

இயல்பாக ஏற்றுக் கொள்ளத் தொடங்கி விட்டிருந்தார்கள்.

ஆனால் அதெல்லாம் வேலை என்ற அளவில் மட்டும் தான்.



அதைக் கடந்து அவள் யாருக்கும் துளி கூட இடம் கொடுத்ததில்லை.

என்னதான் தன்யா அங்கு வேலையில் சேர்ந்து நான்கு மாதங்களுக்கும் மேலேயே ஆகிவிட்டிருந்தாலும் கூட, அவளைப் பற்றி அதாவது அவளுடைய குடும்பத்தைப் பற்றி யாருக்கும் எதுவும் தெரிந்திருக்கவில்லை.

அவளாகச் சொல்ல மாட்டாள் என்பதோடு, கேட்டாலும் பேச்சை மாற்றி விடுவாள்.

அல்லது அதிலொன்றும் பெரிதாக சுவாரஸ்யம் இல்லையென்பதைப் போல இயல்பாக காட்டிக் கொண்டு போய் விடுவாள்.

எண்பது சதவிகிதத்திற்கும் மேலானோர் வெகு யதார்த்தமாக மேடம் என்றழைக்கும் அளவிற்கு அனைத்து திறமைகளையும் கை வரப் பெற்றிருந்தாள்.

ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற எண்ணமோ, வேலை எனும் எல்லையைத் தாண்டி அனைவரும் தனக்கு மரியாதை கொடுத்து மேலே தூக்கி வைத்துக் கொண்டாட வேண்டுமென்ற எதிர்பார்ப்போ துளியும் இல்லாமலிருந்ததால், அவள் நினைப்பதை விட அனைத்தும் இயல்பாகத் தான் சென்றன தன்யாவிற்கு.

அன்று காலையில் தன்யா வேலைக்கு வந்து சேர்ந்த போது வழக்கத்தை விடவும் பதினைந்து நிமிடங்கள் தாமதமாகி விட்டிருந்தன.

வழக்கமாகத் தாமதமாக வருபவர்கள் அனைவரும் கூட வந்து வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தது தெரிய, வேகமாகச் சென்று ஹேண்ட் பேக்கையும், கையிலிருந்து மற்றொரு பையையும் தன்னுடைய இடத்தில் வைத்து விட்டுத் திரும்பினாள்.

கிட்டத்தட்ட கால் மணி நேரமே தாமதமாகி விட்டதே எனும் குற்ற மனப்பான்மையுடன் திரும்பியவளை எதிரில் வந்த அஞ்சலி எதிர்கொண்டாள்.

''குட்மார்னிங் தன்யா. அப்புறம் என்ன இன்னைக்கு அபூர்வமா லேட்டா வந்திருப்பீங்க போல?''

''சரிதான் அஞ்சலி'' என்றவளாய் பிரியாணி செய்து பிறகு பேக் செய்து வரத்தான் தாமதமாகி விட்டதென்று சொல்ல முடிந்திருக்கவில்லை.

காரணம் எதுவானாலும் தாமதமாக வந்தது தவறு தான் அல்லவா.

''ஏன் லேட்? ஐயய்யோ நான் சாதாரணமா தான் கேக்க றேன். எனக்குத் தெரிஞ்சு நீங்க லேட்டா வந்து நான் பார்த்ததில்லைங்கறதால தான் கேட்டேன் வேறொன்னு மில்ல...''

''பரவாயில்ல, அதனாலென்ன, நாம வேலையைப் பார்க்கலாமே அஞ்சலி.''

தன்யாவின் வார்த்தைகளில் அவள் அங்கிருந்து நகர, தானும் சென்று தனது வேலையைப் பார்க்கலாமென்று திரும்பினாள் தன்யா.

அப்படி திரும்பியவள், அங்கு நின்று கொண்டிருந்த அந்த இளைஞனைக் கண்டாள்.

அதாவது தன்னையே பார்த்தபடி,

''வாங்க, என்ன வேணும்?''

..........

அந்த இளைஞனிடமிருந்து எந்த பதிலும் வராது போக ''உங்களை தான் என்ன வாங்க வந்திருக்கீங்



கன்னு தெரிஞ்சுக்கலாமா?'' என்று மீண்டும் கேட்டாள் தன்யா.

''மளிகைன்னா கீழ அண்டர்கிரவுண்ட்ல இருக்கு. இந்த ஃப்ளோர்ல புக்ஸ் ஸெக்ஸன், ஸ்டேஸனரி, லெதர் அண்...''

''உன் பேர் தெரிஞ்சுக்கலாமா?''

அதுவரை பேசாமல் நின்றிருந்த அந்த இளைஞன் இப்பொழுது பெயரைக் கேட்க, ''உங்களுக்கு என்ன வேணும்.. இல்லன்னா ஒரு நிமிஷம் வெயிட் பண் ணுங்க'' என்று அங்கு அருகில் புக்ஸ் ஷெக்ஸனில் இருந்த ஊழியர் ஒருவரைப் பெயர் சொல்லி அழைத்தாள்.

தன்யாவின் அழைப்பில் ''மேடம்...'' என்று பணிவாக வந்து நின்றிருந்தவன், அதற்கு பிறகு தான் அங்கு நின்றிருந்த தங்களுடைய சின்ன எம்.டி. ரகுநந்தனைக் கண்டான்.

''ஸார்... குட்மார்னிங் ஸார்...''

ஏன் இவ்வளவு பணிவாக யாரோ ஒரு இளைஞனுக்கு...

''நீ போய் வேலையைப் பாருப்பா'' என்று ரகுநந்தன் சொன்னதில் தன்யா அழைத்ததைக் கூட மறந்து உடனே தன்னுடைய இடத்திற்குத் திரும்பி விட்டிருந்தான் அவன்.

ஒன்றும் புரியாமல் தனக்கு எதிரே நின்றிருந்த இளைஞ னிடம் தன்யா மீண்டும் ஏதோ கேட்க எத்தனிக்க ''நீ இங்க இருக்கியா ரகு...'' என்று அவர்களை நோக்கி வந் தார் லோகநாதன்.

ரகு...

கடவுளே இவன் தான் சின்ன எம்.டி. ரகுநந்தனா.

அதாவது பெரிய எம்.டி. லோகநாதன் ஸாரின் மகனா.

அவள் குழம்பித் தெளிவதற்கு முன்பாகவே "அப்புறமா வந்து என்னப் பாரு" என்று அங்கிருந்து நகர்ந்திருந்தான் அந்த ரகுநந்தன்.

சரிதான்.

ஆறடிக்கும் உயரமாக தோரணையுடன் வந்து நின்றிருந்த போதே தானும் சற்று யூகித்திருக்கத்தான் வேண்டும்.

அதிலும் பெரிய எம்.டி. முதல்நாளே சொல்லத் தானே செய்தார்.

அது மட்டுமா,

பெண்கள் அனைவருமே கூட கடந்த சில நாட்களாகவே இவனுடைய வருகையைப் பற்றி மட்டும் தானே பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்படியிருந்தும் எப்படி இப்படி மறந்தோம்.

மறந்தது மட்டுமா. அதற்கு மேலும் கூட என்னவெல்லாம் சொல்லிவிட்டோம்.

அவனுடைய அறைக்கே வேறு வந்து பார்க்கச் சொல்கிறானே.

போனால் கோபப்படுவானோ...

அதே நேரம் அவளுக்கு அருகில் யாரிடமோ பேசிக் கொண்டு நின்றிருந்த லோகநாதன் "வா தன்யாமா, இப்ப தான் வந்தியா?" என்று அவளை நோக்கி வர, "குட்மார்னிங் ஸார்" என்றாள் தன்யா.

"ம், அப்புறம் இன்னையிலிருந்து இன்னும் கொஞ்சம் கூட நீ ஹார்ட் வொர்க் பண்ணியாகணும்மா" என்றவரைப் புரியாமல் பார்த்தாள்.



"சரிதான். இதுக்கும் மேல எப்படிப் பண்ண முடியும் இல்லையாம்மா?"

"நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு புரியல ஸார்."

"உங்க சின்ன எம்.டி. ரகுநந்தன் அதாவது என் மகன் வந்தாச்சு. இனிமேல் அவந்தான் இந்தக் கடையைப் பொறுப்பேத்துப் பாத்துக்கப் போறான். கண்ல விளக்கெண்ணெய விட்டுட்டுத் தப்புக் கண்டுபிடிப்பான். அவனத் தவிர மத்தவங்களுக்கும் கொஞ்சம் இருக்குங்கறத அழுத்தமா புரிய வெக்கற வரைக்கும் கஷ்டந்தான்."

விளையாட்டாகப் புன்னகையுடன் அதே சமயம் தாழ்ந்த குரலில் சொன்ன லோகநாதனை சற்று பயத்துடன் பார்த்தாள் தன்யா.

"அட என்ன பயந்துட்டியா? உன்ன மாதிரி நல்லா வேல செய்யறவங்களுக்கென்னமா? என்ன இத்தன நாளா ஜாலியா வேல செஞ்சுட்டிருந்தீங்க. இனிமேல் கொஞ்சம் பயத்தோடவும் செய்யணும் அவ்வளவுதான்."

"சரிதான் ஸார்."

"சரி தன்யாமா போய் வேலயப் பாரு."

"அப்புறமா ஸா..."

"என்னமா?"

"பிரியாணி செஞ்சு எடுத்துட்டு வந்திருக்கேன்."

"அடடா... திரும்பவும் வேண்டாம்னு சொல்லாம விட்டுட்டேனா..." என்று தனக்குத்தானே மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டவர்.

"பாவம் உனக்கு எதுக்கு சிரமம் ஒத்தையாகக் கஷ்டப்பட்டு செஞ்சுட்டு வந்திருப்பியேன்னு தான் பாத்தேன்

அங்க கொண்டு போய் வெச்சுடறியா கொஞ்சமாப் போதும்'' என்றார்.

''சரிதான் ஸார்.''

அன்று பெரிய எம்.டி. சற்று வித்யாசமாக நடந்து கொள்கிறாரோ என்ற எண்ணம் தன்யாவிற்கு.

# 3

பின்னே, அவருடைய மகனான சின்ன எம்.டியைப் பற்றி அவரே சொல்கிறாரே.

சரிதான் சற்று முன் அந்த ரகுநந்தன் தன்னை எப்படிப் பார்த்தான்.

ஏதாவது தவறு செய்து விட்டோமோ என்று தன்னையே ஒரு வினாடி கதிகலங்க வைத்து விட்டானே.

அதனாலென்ன,

பெரிய எம்.டி.யே சொன்னதைப் போல வேலையை சரியாகச் செய்யாமல் டிமிக்கி கொடுப்பவர்கள் தான் பயப்பட்டாக வேண்டும், தனக்கென்ன.

மேலும் சிறிது நேரமும் சென்றிருக்க, எம்.டி.யை பார்த்து விட்டு வருவதற்காகச் சென்றாள்.

அனுமதி கேட்டுக் கொண்டு உள்ளே வந்தவளை எதுவும் பேசாமல் பார்த்தான் ரகுநந்தன்.

''வரச் சொல்லியிருந்தீங்க ஸார்.''



''இன்னைக்குக் காலை ஏன் பதினைஞ்சு நிமிஷம் லேட்டா வந்த?''

..........

''எப்பவுமே இப்படித்தானா?''

..........

''அப்படி லேட்டா வந்ததுமில்லாம நேரத்துல வந்து வேல செஞ்சுட்டிருந்தவங்களையும் சேத்துக் கெடுத்துட்டிருக்க ஏன்?''

.......

''நீயெல்லாம் சூப்பர்வைஸர் வேற...''

எம்.டி. ரகுநந்தன் பாட்டிற்குக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டே போக, அதில் ஒன்றிற்குக் கூட தன்யாவால் பதில் சொல்ல முடிந்திருக்கவில்லை.

சொல்லப்போனால் அவள் வேலைக்கு சேர்ந்திருந்த இந்த நான்கைந்து மாதங்களில், அன்று தான் முதன் முறையாகத் தாமதமாக வந்திருந்தாள் எனலாம்.

அது கூட வழக்கமில்லாத வழக்கமாக அன்று செய்ய நேர்ந்த அதிகப்படி வேலையால் தான்.

அதையெல்லாம் ஞாயிற்றுக் கிழமை தவிர மற்ற நாட்களில் இதற்கு முன் அவள் செய்தது கிடையாது.

வேலை மும்முரத்தில் அவளையறியாமலேயே தாமதமாகி விட்டிருக்கிறது.

ஆனால் இவனிடம் அதையெல்லாம் சொல்ல முடியுமா என்ன.

''என்ன நான் பாட்டுக்குக் கேள்வி மேல கேள்வி கேட்டுட்டிருக்கேன்...''

''லேட்டா வந்தது தப்புதான் ஸார் ஸாரி.''

''எப்பவுமே இப்படிதான் கண்ட நேரத்துக்கு வருவியா?''

''நான் வேலைக்கு சேர்ந்த இந்த நாலஞ்சு மாசத்துல இன்னைக்கு தான் பதினஞ்சு நிமிஷம் லேட்...''

''அப்ப மத்த நாளெல்லாம் பர்மிஷனா? இல்ல லீவே தானா?''

''இல்லில்ல ஸார்...''

தயக்கத்துடன் மறுத்தவளை எதுவும் பேசாமல் பார்த்தான் ரகுநந்தன்.

அவனுடைய அந்தப் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் சற்றே பார்வையைத் தணித்து டேபிளின் மீதிருந்த ஃபைல்களைப் பார்த்தாள் தன்யா.

மனிதர்களிடம் நல்லதைக் காணவே தெரியாதோ. அப்படித்தான் இருக்க வேண்டும்.

''இதுதான் முதலும் கடைசியுமா இருக்கணும் இல்லன்னா கஷ்டம்...''

''இல்ல ஸார் இனிமேல் கரெக்டா வந்துடுவேன்.''

''நீ போலாம்.''

அவன் சொன்னது தான் தாமதம் ''தேங்க்யூ ஸார்'' என்று விட்டு வெளியே வந்திருந்தாள் தன்யா.

ஏனோ மனம் சலித்துப் போனது.

வந்த ஒரு நாளிலேயே இப்படியென்றால்,

மறுநாள் வழக்கத்தை விடவும் கூடப் பத்து நிமிடங்கள் முன்னதாகவே வந்து விட்டிருந்தாள் தன்யா.

அப்படி வந்தவளுக்கு எம்.டி. ரகுநந்தன் ஏற்கனவே வந்துவிட்டிருந்தது தெரிந்தது.



முதல்நாள் அவன் சொல்லியிருந்ததைப் போல கைப்பையை வைத்ததும் எம்.டி.யைப் பார்த்து விட்டு வருவதற்காகச் சென்றாள்.

''குட்மார்னிங் ஸார்.''

''நேத்து லேட்டா வந்தத இன்னைக்குக் காம்பன்ஸேட் பண்றியா?''

.......

''தப்பு செய்யறது எதுக்கு, அப்புறம் இப்படியெல்லாம் சிரமப்படறது எதுக்கு?''

இல்லை நான் எப்பொழுதுமே பதினைந்து நிமிடங்கள் முன்னதாகவே வந்து விடுவேனென்று தொண்டை வரை வந்திருந்த வார்த்தைகள் அதற்கு மேல் வரத் தயங்கின.

''நேரத்துலயே வந்துட்டா மட்டும் போதாது, வேலை செய்யணும். நாலு பேர் வாங்கிட்டிருக்கற சம்பளத்த நீ ஒருத்தி வாங்கிட்டிருக்க, அத மனசுல வெச்சு நடந்துக்கோ.''

அவன் அப்படிச் சொல்லி விட்டதற்குப் பிறகு ஏற்கனவே வினாடி கூட வீண் செய்யாது வேலை செய்து கொண்டிருந்த தன்யா இப்பொழுது டீ இடைவேளையைத் தவிர்த்திருந்ததோடு மதிய உணவு நேரத்தையும் பாதியாகக் குறைத்துக் கொண்டாள்.

ரகுநந்தனின் வார்த்தைகள் அவளை அவ்வாறு செய்ய வைத்திருந்தன.

ஒவ்வொரு சமயங்களில் வேலையே வேண்டாமென்று கூட சென்று விடத் தோன்றும்.

ஆனாலும் குடும்ப சூழ்நிலை அதற்கு இடம் கொடுக்காததால் பல்லைக் கடித்து சமாளித்துக் கொண்டாள்.

''தன்யாம்மா.''

லோகநாதன் வர, ''குட்மார்னிங் ஸார்'' என்றாள்.

''என்னமா, ஏன் டல்லா இருக்க?''

''அதெல்லாமில்ல ஸார்''

''அம்மாவுக்கு எப்படிமா இருக்கு?''

''வழக்கம் போல தான் ஸார்.''

''நல்லாப் பாத்துக்கோ தன்யாம்மா. ம், அப்புறம் சொல்ல மறந்துட்டேன் உன் பிரியாணி பிரமாதம்.''

''தேங்க் யூ ஸார்.''

''வேலைக்காரியோட சமையலையே சாப்பிட்டு சாப்பிட்டு ரொம்ப நாளைக்கப்புறம் அங்க நம்ம வீட்டு சாப்பாடு சாப்பிட்ட மாதிரி திருப்தியா இருந்தது. அப்புறம் தன்யாம்மா...''

''ஸார்''

''இன்னைக்கு ஈவினிங் நான் ஊருக்குக் கிளம்பறேம்மா.''

''இன்னைக்கேவா ஸார்?''

''ஆமாம் தன்யா, அந்த நாலு கடைகளையும் சும்மா அப்பப்ப போய் ஒரு கண் பாத்துக்கணும் அவ்வளவுதான். அப்புறம் விவசாயம் அது இதுன்னு பழைய மனுசனாயிடுவேன்...''

''ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க போலிருக்கு ஸார்?''

''அப்படியா, சந்தோஷங்கறத விடவும் கொஞ்சம் நிம்மதியா ஃபீல் பண்றேன் அவ்வளவுதான்.''

''சரிதான் ஸார், போய்ட்டு அப்பப்ப இங்கயும் வந்துட்டுப் போங்க.''



''அங்க ஊருக்கு நீயும் எப்பவாவது வா தன்யாம்மா.''

''நிச்சயமா ஸார்.''

''அப்புறம் நாளையிலிருந்து கட்டிட வேலைய ஆரம்பிக்கப் போறாங்க. உங்க சின்ன எம்.டி.க்கு அதப் பாத்துக்கவே நேரம் சரியா இருக்கும். நீ உள்ள எப்பவும் போல பாத்துக்கோமா.''

''கண்டிப்பா ஸார்...''

''இதக்கூட ஏன் சொல்றேன்னா ரகுநந்தன் தப்பப் பொறுத்துக்க மாட்டான், சுள்ளுன்னு கோபம் வந்து உன்ன ஏதாவது சொல்லிடுவாம்மா. பாவம் நீ தாங்க மாட்ட. அதோட இங்க எனக்கடுத்ததா இன்னைக்கு நிலைமைல நீதான் இருக்க. உன்னத்தவிர யாரையும் கேக்கவும் முடியாது.''

''புரியுது ஸார். நான் நல்லாப் பண்ணி உங்ககிட்ட மாதிரியே ரகுநந்தன் ஸார் கிட்டயும் நல்ல பேர எடுத்துடறேன் ஸார்.''

அது அவ்வளவு சுலபம் கிடையாது என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டவரால் அதை அப்படியே வெளியே சொல்ல முடிந்திருக்கவில்லை.

ஆனாலும் நம்பிக்கையூட்டும் விதமாக ''உன்னால் முடியாததா தன்யாம்மா நல்லாப் பண்ணு. உன் கஷ்டமெல்லாம் சீக்கிரம் சரியாக முடிஞ்ச அளவுக்கு நிம்மதியா வாழவாவது வழி கொடு கடவுளேன்னு நானும் அப்பப்ப வேண்டிக்கறேன்'' என்றார்.

தந்தையைப் போலத் தான் மனதிற்குள் எண்ணியிருந்த லோகநாதன் அப்படிச் சொன்னதில் கண்கள் கலங்கி விட்டிருந்தன தன்யாவிற்கு.

ஆனாலும் "நன்றி ஸார்" என்று ஒரு புன்னகையுடன் சமாளித்துக் கொண்டாள்.

"அதுக்கும் மேல ஏதாவது சின்னக் கஷ்டம்னாலும் அது எந்த மாதிரியானதா இருந்தாலும் சரி எனக்கொரு போன் பண்ணி உதவி கேக்கத் தயங்க வேண்டாம்."

"நிச்சயமா ஸார்."

மேலும் சில வினாடிகளும் பேசிக் கொண்டிருந்து விட்டுப் பெரிய எம்.டி. லோகநாதன் கிளம்பியிருக்க, அவர் சென்ற திசையையே பார்த்த வண்ணம் அப்படியே நின்று விட்டிருந்தாள் தன்யா.

ஏனோ இனி வரும் நாட்களை நினைத்துப் பார்க்கவே அவளுக்கு பயமாக இருந்தது.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

அதற்குப் பிறகு மீண்டும் வேலையில் மூழ்கிப் போய் விட்டிருந்தாள்.

# 4

அன்று மதிய உணவிற்குப் பிறகு சில நிமிடங்கள் ஓய்வு கேட்டுக் கெஞ்சிய உடலைப் பேசாமலிரு என்று அடக்கி விட்டு வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள் தன்யா.

மளிகை ஷெக்ஸனில் நிறையப் பொருட்கள் புதிதாக வந்து இறங்கியிருந்ததால் அவற்றையெல்லாம் வாடிக்கையாளர்களின் வருகை சற்று மந்தமாக இருக்கும் இந்த



மதிய நேரத்திலேயே எடுத்து அடுக்கச் செய்து விடலாமென்று அங்கு வந்தாள்.

என்னதான் மதிய நேரம் மந்தமாக இருக்குமென்றாலும் அன்று வெறிச்சோடிக் கிடந்தது தெரிந்தது.

"செல்வம்"

"மேடம்"

"என்ன திங்க்ஸ் எல்லாத்தையும் எடுத்து அடுக்கி யாச்சா?"

"நடந்துட்டிருக்கு மேடம்."

"அடுக்கி முடிய எவ்வளவு நேரமாகும்?"

"இந்த ஸிஃப்ட் ஸ்டாஃப்ஸ் வேலை முடிஞ்சு கிளம்பற துக்குள்ள முடிக்கச் சொல்லிடறேன் மேடம்."

"சொன்னாப் பத்தாது செல்வம்."

"பக்கத்திலிருந்து நீயும் கூட மாட எடுத்துக் குடுத்து பழைய சாமான்களை முன்னாடி கொண்டு வந்துட்டுப் புதுசையெல்லாம் பின்னாடி அடுக்கணும்."

"சரிதான் மேடம்."

"நிறைய உடைஞ்சு போன பாக்கெட்டுகள் இருக்கு. அதையெல்லாம் திரும்ப ஸ்டோர் ரூமுக்கே அனுப்பி விடு ரீபேக் ஆகி வரட்டும்."

"சரி மேடம்."

"முக்கியமா ஃப்ரீயா வர்ற திங்க்ஸையெல்லாம் அததுக்குப் பக்கத்துலயே வைங்க, முடிஞ்சா ஸெலோ டேப் வெச்சு அடுக்கி முடிச்ச கையோட மெயின் பாக்கெட்டுகளோட ஒட்டி விடுங்க."

"எப்பவுமே அப்படிதான் மேடம் செஞ்சுட்டிருக்கோம்."

"செய்யறீங்க இல்லன்னு சொல்ல முடியாது. ஆனா ஞாபகப்படுத்தலேன்னா மறந்துடறீங்களே...."

"அப்படியெல்லாம் இல்ல..."

"எது எப்படியோ, பிரச்சனைன்னு ஏதாவது வந்தாலே அது இந்த மளிகை ஷெக்ஸன்ல இருந்து மட்டும் தான் வருது. எல்லாமே சரியா நடந்தா அந்தப் பிரச்சனைகள் மட்டும் ஏன் வரப் போகுது சொல்லு?"

"சரிதான் இனிமேல் சரியாப் பாத்துக்கறேன் மேடம்" என்ற செல்வம் அந்த மளிகை ஷெக்ஸனின் இன்சார்ஜ். சொன்னதை சொன்னபடி செய்வதோடு, ஏமாற்றவோ பொய் சொல்லவோ அவனுக்குத் தெரியாது.

அதே சமயம் புதிதாக எதை எடுத்துச் செய்யவும் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை என்றாலும், அவன் கையில் பொறுப்பை ஒப்படைத்த பிறகு பிரச்சனைகள் பெருமளவு குறைந்து போயிருந்தன என்பதில் மட்டும் தன்யாவிற்கு எந்தவித சந்தேகமும் இருக்கவில்லை.

வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருக்க அதைப் பார்த்த வண்ணம் சில நிமிடங்கள் அருகில் நின்றிருந்து விட்டுப் பிறகு அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

அப்பொழுது தான் அதை கவனித்தாள் தன்யா.

அவ்வளவாக ஆள் நடமாட்டமில்லாத மளிகை ஷெக்ஸனின் அந்த டிஸ்போஸபிள் பொருட்கள், மதியடிகள் என அனைத்தும் அடுக்கி வைக்கப்பட்டுக் கடைசியாக இருந்த அந்த நீளமான சற்றே குறுகிய சந்தில் ஒரு சிறு பெண் குனிந்து வெகு மும்முரமாகப் பொருட்களைப் பார்த்துக் கொண்டிருக்க, வேண்டுமென்றே அந்த பெண்ணை இடித்து விட்டுப் போனான் அந்த வழியாகப் போன ஒருவன்.



அவன் வேறு யாருமல்ல, அந்தக் கடையில் வேலை செய்யும் கடைநிலை ஊழியர்களில் ஒருவனே.

அவன் இடித்ததில் நிலை தடுமாறி விட்டிருந்த அந்தப் பெண் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அந்த இரும்பு ரேக்கின் மீதே விழுந்து பின் சமாளித்து நின்றாள்.

அந்தப் பெண் திரும்பி இடித்தவனை சற்றே கோபத்துடன் பார்த்ததோடு சரி, மீண்டும் தனது வேலையில் கவனமாகி விட்டிருந்தாள்.

சரிதான் தெரியாமல் பட்டிருக்கிறதென்று அவள் நினைத்துக் கொண்டது புரிந்தது.

ஆனால் அது வேண்டுமென்றே நடந்தது தான் என்பதில் நேருக்கு நேராகப் பார்த்த தன்யாவிற்குத் துளியும் சந்தேகமிருக்கவில்லை.

அதோடு அப்படி இடித்தவன் இதற்கு முன்னரே இந்த மாதிரி கீழ்த்தரமான வேலைகளைச் செய்து சில முறை பிரச்சனையில் சிக்கியவனும் கூட...

அதையும் தன்யா அறிவாள்.

இந்த வேலை போய் விட்டால் பிழைப்பிற்கு வேறு வழியில்லையென்று அவன் வடித்த நீலிக் கண்ணீரால் தான் போனால் போகிறதென்று லோகநாதன் ஸாரால் மீண்டும் வேலைக்கு எடுக்கப்பட்டிருந்தான்.

இதெல்லாம் இப்படியிருக்க, அவன் மீண்டும் சில வினாடிகளிலேயே அதாவது திரும்பி வந்த போதும் அதே பெண்ணை முன்னை விட பலமாக இடித்திருந்

இப்பொழுது அந்தப் பெண் கடுங்கோபத்துடன் இடித்தவனைத் திரும்பிப் பார்க்க, அதற்குள் தன்யாவும் அங்கு வந்திருந்தாள்.

அந்தப் பெண்ணை விட அதிகமாக தன்யாவின் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது.

ஆனால் அதற்குள் அந்தப் பெண் இடித்தவனின் சட்டையைப் பிடித்திருக்க, அதற்கு அவனோ கீழ்த்தரமான வார்த்தைகளைப் பிரயோகித்து எதையோ கேட்டிருந்தான்.

நிலைமை மோசமாவது புரிய, இப்பொழுது லேசாக பயம் கூட வந்து விட்டிருந்தது தன்யாவிற்கு.

கடையின் பெயர் என்னாவது என்பதே அந்தப் பயத்திற்கான முக்கியக் காரணம்.

“என்னடா, உம் மனசுல என்னடா நினைச்சிட்டிருக்க?” என்று கடுங்கோபத்துடன் தன்யா அவனைப் பார்க்க, அவனோ இப்பொழுது தன்யாவையும் அதே போலப் பேசத் தொடங்கி விட்டிருந்தான்.

அந்த வார்த்தைகளைக் கேட்க முடியாமல் காதுகள் கூசிப் போய் விட்டிருக்க, ஓங்கி அறைந்து விட்டிருந்தாள் தன்யா.

ஆனால் அதற்கு அவனோ “என்னையே கை நீட்டியில் அடிச்சிட்டியா...” என்று மேலும் அவனுடைய பாணியில் வசை பாடத் தொடங்கிவிட்டிருக்க, இப்பொழுது சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாமல் தான் கற்ற தற்காப்புக் கலையின் மூலமாக அவனை எழ முடியாத அளவிற்கு அடித்து வீழ்த்தியிருந்தாள்.



அந்த அளவிற்கு எதிர்பார்த்திருக்காதவன் சுருண்டு தரையில் சாய்ந்திருக்க, அப்பொழுதும் அவனுடைய வாய் வசை பாடிக் கொண்டு தான் இருந்தது.

ஆனால் அதற்குள் அந்தப் பெண் வாடிக்கையாளர் “இரு போலீசை அழைத்து உள்ளே தள்ள வைக்கிறேன்” என்று அவளுடைய மொபைலை எடுத்திருக்க, அதற்கு விடாமல் தடுத்திருந்த தன்யா “கண்டிப்பா அந்த வேலையை எங்க நிர்வாகம் செய்யும் மேடம் இப்படி நடந்ததுக்காக நான் உங்ககிட்ட மன்னிப்புக் கேட்டுக்கறேன்” என்றெல்லாம் அந்தப் பெண்ணைச் சமாதானப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

ஆனால் அப்படி எதற்கும் அந்தப் பெண் சமாதானப்பட்டிருக்கவில்லை.

மாறாக, “இப்படிப்பட்ட ஊழியர்களை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே நீங்களும் கூட்டா” என்றாள்.

இதை இத்தோடு விட்டுவிட மாட்டேன். உங்கள் டிபார்ட்மெண்டல் ஸ்டோரின் பெயரையே நாறடிக்கிறேன் பாரென்று சற்றும் கோபம் குறையாமல் பேசிக் கொண்டே போனாள்.

அவளுடைய கோபத்திலிருக்கும் நியாயம் புரியவே செய்தாலும், அதற்காக கீழே இறங்கி வரவே மாட்டேனென்று இதே பாணியில் பேசிக் கொண்டே போனால் எப்படி என்றிருந்தது.

“எங்க உங்க எம்.டி. கூப்பிடு நான் பேசறேன். என்னால இத இப்படியே விட முடியாது.”

“வேண்டாமே, தயவுசெஞ்சு நான் சொல்றதைக் கேளுங்க மேடம். இந்த விஷயம் அதுவும் உங்களை

மாதிரி வாடிக்கையாளர் வழியா எம்.டி.க்குத் தெரியப் போனா அப்புறம் என் வேலையும் போயிடும் அதுக்காகக் கூட நான் கவலைப்படல, ஆனா அடிப்பட்டுக் கிடக்கிறவன் ரொம்ப மோசமானவன். அவனால எந்த விதத்துல வேணும்னாலும் எனக்கும் பிரச்சனை வரலாம். அவன வேற மாதிரி தண்டிக்காம விட மாட்டோம். நீங்க என்ன நம்பலாம்...''

மேலும் சில நிமிடங்களும் கூட தன்யா பேச, அதற்குப் பிறகே சரிதானென்று சென்றாள் அந்தப் பெண்.

அதற்குள் நடந்தது அனைவருக்கும் தெரிந்து விட்டிருந்தது.

மளிகை ஷெக்ஸனின் சற்று பொறுப்பான அதே சமயம் வயதிலும் சற்று மூத்தவரான அந்த ஊழியரிடம் சென்று விஷயத்தைச் சொல்லி விட்டு எம்.டி.யைப் பார்க்கப் போனாள் தன்யா.

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததைப் போல பெரிய எம்.டி. லோகநாதனே வர, அவரிடம் விஷயத்தைச் சொன்னாள்.

''சரிதான் தன்யாம்மா நீ ஒன்னும் ஃபீல் பண்ணாமப் போ நான் பார்த்துக்கறேன்'' என்று கோபத்துடன் மளிகை ஷெக்ஸனுக்குப் போனார்.

போனால் போகிறதென்று மீண்டும் வேலைக்கு எடுத்தவருக்குப் பாவம் எப்படியிருக்குமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நிலைமை இப்படியிருக்க, தனது அறையிலிருந்த கேமிராவின் வழியாக ரகுநந்தன் அனைத்தையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தான்.



தன்யா தவறு செய்திருந்த அந்த ஊழியனைப் பிடித்துத் துவைத்துப் பிழிந்திருக்க பரவாயில்லையே விஷயமும் கொஞ்சம் இருக்கும் போலத்தான் தெரிகிறதென்று அவள் மீது இப்பொழுது சற்று சுவராஸ்யம் கூட வந்திருந்தது அவனுக்கு.

தந்தை மளிகை ஷெக்ஸனுக்கு சென்றிருப்பது கேமராவில் தெரிய, அவரை மொபைலில் அழைத்து மேலே செய்ய வேண்டியதைச் சொன்னான்.

சரிதான் தான் எடுத்துச் செய்ய இங்கு பொறுப்புகள் நிறையத் தான் இருக்கும் போலிருக்கிறதென்று நினைத்துக் கொண்டே மீண்டும் தனது வேலையைத் தொடர்ந்தான்.



## 5

''குட்மார்னிங் ஸார்.''

காலை வணக்கம் சொன்ன தன்யாவைப் பார்த்தான் ரகுநந்தன்.

''நான் ஏதாவது தப்பாப் பேசியிருந்தாலும் தயவுசெஞ்சு மன்னிச்சுடுங்க மேடம்.''

சம்பந்தமே இல்லாமல் அப்படிச் சொன்னவனை ஒன்றும் புரியாமல், கேள்வியாகப் பார்த்தாள் தன்யா.

''உங்களத்தான் மேடம்'' என்ற ரகுநந்தனின் கண்களும் இப்பொழுது சிரிக்க ''நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குப் புரியல ஸார்'' என்று தயக்கத்துடன் சொன்னாள் அவள்.

''காரத்தேல ப்ளாக் பெல்ட்டா இல்ல...''

''ஓ. அதக் கேக்கறீங்களா?'' என்று தன்னையறியாம லேயே கேட்டு விட்டிருந்தவள், ''அது உங்களுக்கு எப்படித் தெரி...'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

ஆனால் அதற்குள் அவளை இடைமறித்திருந்த ரகுநந்தன், ''எதுக்கும் ஒரு நாலடி தள்ளியே நில்லுங்க மேடம்'' என்று பயந்தவன் போலச் சொன்னான்.

அதற்குப் பிறகு தன்யா நடந்தவற்றைப் பற்றிச் சொல்ல அதாவது அவன் பேசியவற்றையெல்லாம் சொல்லக் கூசியவளாக மேலோட்டமாக விஷயத்தை மட்டும் சொன்னாள்.

தன்யா சொல்லா விட்டாலும் அதை ரகுநந்தனால் புரிந்த கொள்ள முடிந்தது.

''பரவாயில்ல நேத்து மதியம் நடந்தத இப்பவாவது சொல்லத் தோணுச்சே, அது கூடக் கேட்டதுக்கப்புறம்....''

''பெரிய எம்.டி.கிட்ட சொன்னேன் ஸார் அதான்...''

''பரவாயில்ல, ஆனா இனிமேல் எந்த சின்ன விஷய மானாலும் என் காதுக்கு வந்தாகணும். முக்கியமா ஒவ் வொரு நாள் காலைலயும் ஈவனிங் வீட்டுக்குப் போகும் போதும் என்ன வந்து பாத்துட்டுப் போக மறந்துடாத.''

''சரிதான் ஸார்''

அப்பொழுது அவர்கள் நின்று பேசிக் கொண்டிருந் தது இரண்டாவது மாடியில்.

அவர்களுக்குப் பக்கத்திலிருந்த எலக்ட்ரானிக்ஸ் டிபார்ட்மெண்டில் ஊழியர்களிடம் ஒரு வாடிக்கையாளர் ஏதோ சந்தேகம் கேட்டுக் கொண்டிருக்க, அதற்கு அவர்



களால் அதாவது அந்த ஊழியர்களால் பதில் சொல்ல முடிந்திருக்கவில்லை.

அதற்கு காரணம் அந்த வாடிக்கையாளருக்கு ஹிந்தி தவிர வேறு எந்த பாஷையும் தெரிந்திருக்காததே.

அதே போல ஊழியர்களில் ஒருவருக்குக் கூட ஹிந்தி தெரிந்திருக்காததும்.

அதை ரகுநந்தன், தன்யா என இருவருமே ஒரு சேர கவனித்திருந்தாலும் அந்த இடத்தில் தனது வேலையைச் செய்ய எண்ணி முதலில் வாடிக்கையாளரை அணுகிப் பேசியது தன்யாவே.

வாடிக்கையாளர்கள் கேட்ட சந்தேகங்களுக்கெல்லாம் அவள் ஹிந்தியில் வெகு சரளமாக பதில் சொன்னதை ஒருவித ஆச்சரியத்துடன் கண்டான் ரகுநந்தன்.

ஆனாலும் அவன் அதை வெளியே காட்டிக் கொண் டிருக்கவில்லை.

வாடிக்கையாளரும் தன்யாவும் சரளமாக ஹிந்தியில் பேசிக் கொள்வதை மார்பின் குறுக்கே கைகளைக் கட் டியபடி நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அந்த வாடிக்கையாளர் தனக்குத் தெரி யாத வேறு ஒரு சாதனத்தைப் பற்றி விளக்குமாறு கேட்க, இப்பொழுது என்ன செய்வது என்பதைப் போல அருகில் நின்றிருந்த ரகுநந்தனைப் பார்த்தாள் தன்யா.

''பரவாயில்ல அதப்பத்தி நான் சொல்றேன்'' என்று ஹிந்தியிலேயே தொடங்கியவன், தன்யாவைப் போலவே வெகு சரளமாக ஹிந்தியில் விளக்கம் கொடுக்கத் தொடங்கி விட்டிருந்தான்.

ஆனால் ரகுநந்தனைப் போல அதில் தன்யாவிற்கு ஆச்சரியமெல்லாம் எதுவும் இருக்கவில்லை.

வேறு சில சாதனங்களைப் பற்றித் தனக்கிருந்த சந்தேகத்தை வெகு இயல்பாக ரகுநந்தனிடம் கேட்டுத் தெரிந்துக் கொண்டாள்.

தெரியாத ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதைத் தவிர எந்த ஒரு அனாவசிய அலட்டலோ பந்தாவோ இல்லாத தன்யாவின் அணுகுமுறை இப்பொழுது அவள் மீது மதிப்பையும் வரவழைத் திருந்தது.

கண்டு ஆச்சரியப்படும் விதமாக இனியும் இவளிடம் என்னென்ன சுவாரஸ்யங்களெல்லாம் இருக்கிறதோ என்று தனக்குத்தானே நினைத்துக் கொண்டான்.

''ரகு''

தந்தை வர, ''வாங்கப்பா'' என்றான் ரகுநந்தன்.

''இனி நான் கிளம்பினா சரியா இருக்கும்பா.''

''சரிதான் நான் சொன்னதையெல்லாம் மறந்துட வேண்டாம்.''

''சரிதான், அந்தக் கடைகளையெல்லாம் இந்த நிலைமைக்குக் கொண்டு வர்றதுக்கு நீ எடுத்துக்கிட்ட சிரத்தை நான் அறியாததா? உனக்கு எந்த...''

''அதையெல்லாம் விடுங்கப்பா. பழையபடி உங்க வள்ளல் குணத்தத் தொடர்ந்துட வேண்டாம். அவ்வளவுதான்.''

தந்தை மகனின் பேச்சுக்கிடையில் தன்னை அங்கு அதிகப்படியாக உணர்ந்தாள் தன்யா.



''நேத்தே கிளம்பியிருக்கணும். இன்னைக்கு எந்தக் காரணத்த முன்னிட்டும் தாமதம் வேண்டாம்.''

''சரிதான், ரகு. நான் அங்க போய்ட்டு முடிஞ்சா நைட்டு கூப்பிடறேன் இல்லன்னா...''

''வேண்டாம்பா காலைலயே கூப்பிடுங்க. ஒன்னும் பிரச்சனையில்ல. முடிஞ்சா இந்த சன்டே வருவேன்னு அம்மாகிட்ட சொல்லிடுங்க.''

''சரிதான்பா'' என்றவர் தன்யாவை நோக்கித் திரும்பினார்.

''சரி தன்யாம்மா எப்பவும் போல எல்லாத்தையும் நல்ல விதமா செய்.''

''நிச்சயமா ஸார்.''

''அம்மாவ நல்லாப் பார்த்துக்கோம்மா. உனக்கிருக்கற ஒரே ஆதரவு..'' என்றவரிடம் சரி என்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

''நல்ல திறமையான பொண்ணுப்பா, சின்னச்சின்ன குறைகள் இருந்தாலும் போகப் போக நல்லாக் கத்துக்குவா. வேலைக்கு சேந்தும் நாலஞ்சு மாசந்தான் இருக்கும் இல்லையாம்மா?''

தான் எங்கே தன்யாவை அங்கு வேலைக்கு அதிகப்படி யென நினைத்து விடுவோமோ என்று தந்தை பயப்படுவது புரிந்தது.

ஒருவருக்கு ஒரு கஷ்டமெனும் முன் இளகி உதவத் தொடங்கிவிடும் தந்தையின் குணத்திற்குத் தொடக்கத்தில் அவனும் அப்படித்தான் எண்ணியிருந்தான்.

அதை இந்தப் பெண்ணும் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறாளோ என்றும்,

''சொல்ல முடியாத கஷ்டங்கள்ல இருந்து பாவம் இப்பதான் மீண்டிருக்கா'' என்று மெல்லிய குரலில் தனக்குத்தானே சொல்லிக் கொண்டவர், ''உனக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் சின்ன எம்.டி. கிட்டயும் நீ கேக்கலாம் தன்யா'' என்றார்.

''சரிதான் ஸார்...'' என்றவளின் குரல் சற்று தாழ்ந்து ஒலித்ததோ என்ற எண்ணம் ரகுநந்தனுக்கு.

தனக்கு முன்பாக இதையெல்லாம் சொன்னால் பிறகு இந்தப் பெண்ணுக்கும் தான் எப்படியிருக்கும் என்றிருந்தது.

ரகுநந்தன் எண்ணியது சரியே.

லோகநாதனைப் போல ஏனோ தன்யாவால் அவனைப் பார்க்க முடியவில்லை.

எதுவோ தடுத்தது.

முக்கியமாக அவனிடமிருந்து சற்று தள்ளி நிற்கவே விரும்பினாள்.

மகனிடம் விடைபெற்றுக் கொண்ட லோகநாதன் ''சரிமா நான் கிளம்பறேன்'' என்று தன்யாவிடமும் சொல்ல, ''சரி ஸார்'' என்று சிறு புன்னகையுடன் தானும் விடை கொடுத்தாள்.

சிறு ஏக்கத்துடன் தந்தைக்கு விடை கொடுத்தவளைப் பார்த்த ரகுநந்தனுக்கு, ஏனோ அவனையறியாமலேயே மனம் இளகி விட்டிருந்தது.

ஆனாலும் அதை தன்யாவிற்கு முன்பாகக் காட்டிக் கொள்ளாமல், வேறு வேலைகளைப் பற்றிப் பேசுவதில் முனைந்தான்.



# 6

ரகுநந்தனின் யதார்த்தமான அணுகுமுறை தன்யாவிற்கும் பிடித்திருந்தது.

முதலில் சில நாட்களைப் போலல்லாமல் இப்பொழுதெல்லாம் சின்ன எம்.டி. ரகுநந்தன் இயல்பாகப் பேசியது அவளுக்குச் சற்று நிம்மதியையும் கொடுத்திருந்தது.

எங்கே அவன் ஏதாவது சொல்லிக் கொண்டே இருக்கப் போய் தான் வேலையை விட நேர்ந்து விடுமோ என்று மனதிற்குள் அஞ்சிக் கொண்டிருந்தவளுக்கு அப்படியெதுவும் நடக்க வாய்ப்பில்லையென்பது இப்பொழுது தெளிவாகி விட்டிருந்தது.

ஆனாலும் வேறு விதத்தில் சற்று நிம்மதியில்லாமல் தவித்துக் கொண்டிருந்தாள் என்று கூடச் சொல்லலாம்.

இப்பொழுதெல்லாம் ரகுநந்தன் தன்னிடம் சற்று அதிகப்படி உரிமையை எடுத்துக் கொள்கிறானோ என்ற சந்தேகம் தன்யாவிற்கு.

ம்கூம், அப்படியிருக்கவே கூடாது.

அது முதலில் தான் எண்ணி அஞ்சியதை விடக் கூட அபாயகரமானதாயிற்றே என்றும்.

அன்று காலையில் வேலைக்கு வந்தவளைப் பாதி வழியிலேயே எதிர்கொண்ட ரகுநந்தன் ''குட்மார்னிங் தன்யா'' என்றான்.

''குட்மார்னிங் ஸார்.''

"கொஞ்சம் வெளிய போய்ட்டு வரலாம், வர முடியுமா?"

இதென்ன இப்படியொரு கேள்வி, எம்.டி.யாக இவன் அழைக்கும் போது தன்னால் முடியாதென்று சொல்ல முடியுமா என்ன.

"போலாம் ஸார்."

"போய்ட்டு பன்னிரெண்டு மணிக்குள்ள திரும் பணும். சீக்கிரம் கிளம்பு."

"எங்க போறோம்னு தெரிஞ்சுக்கலாமா ஸார்?"

ரகுநந்தன் இடத்தைச் சொல்ல, "அங்க தான் முதல்ல எங்க வீடு இருந்தது. அதாவது ஒரு வருஷத்துக்கு முன்னாடி வரைக்கும்" என்றாள்.

சொல்லிவிட்டுப் பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டாள். என்ன சொல்கிறாள்.

அது மிகவும் வசதி படைத்தவர்கள் மட்டுமே இருக்க முடியுமென்ற இடமாயிற்றே.

அப்படியானால் தன்யாவும்.

கஷ்டங்களிலிருந்து இப்பொழுது தான் கொஞ்சம் மீண்டு வரத் தொடங்கியிருக்கிறாளென்று தந்தை சொன்னதும் நினைவிற்கு வர, கூட்டிக் கழித்துப் பார்த்தவனுக்கு ஏதோ புரிவதைப் போலத்தான் இருந்தது.

"என்ன ஸார்?"

"இல்ல அது ரொம்ப காஸ்ட்லியான ஏரியாங்கறதுக்கு மேல எனக்கொன்னும் தெரியாது."

"சரிதான் அங்க என்ன வேலைன்னு தெரிஞ்சுக்க லாமா ஸார்?"

ரகுநந்தன் விஷயத்தைச் சொல்ல, "போய்ட்டு வந்துடலாம் வாங்க ஸார்" என்றாள்.



தந்தை சொன்னது மட்டுமா,

முதல்நாள் இவளைப் பார்த்த போதே கூட மிகுந்த வசதி படைத்த பெண்ணைப் போலவும், இந்த வேலைக்கும் அவளுக்கும் துளியும் பொருந்தாதைப் போலவும் தனக்குமே தோன்றத் தானே செய்தன. முதல் தடவையான அப்பொழுது அவளிடம் தான் சற்று கடுமையாகப் பேசியதற்கான காரணமும் கூட அதுதான் அல்லவா.

அது மட்டுமா,

பார்ப்பவர்களை மற்றொரு முறை திரும்பிப் பார்க்க வைத்து விடும் அவளுடைய அழகும், பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக நேர் கொண்ட பார்வையும் ஏன் விட்டால் மேலும் மேலும் சொல்லிக் கொண்டே போகலாமே.

"கிளம்பலாமா ஸார்?"

சரியாக அந்த நேரம் பார்த்துத் தனது மொபைலுக்கு அழைப்பு வர, கடிகாரத்தில் நேரம் பார்த்தான் ரகுநந்தன்.

சரியாக நேரம் ஒன்பது மணி.

"அடடா..."

"என்ன ஸார்?"

"ஊர்ல லேண்ட் ஒன்ன சேல் பண்றதுக்காக புக்ஸ், பேப்பர்ஸ்னு எல்லாத்துலயும் விளம்பரம் குடுக்கச் சொல்லியிருந்தேன்..."

"அதுக்கு ஏன் ஸார் உங்க மொபைல் நெம்பரைக் குடுத்தீங்க. வேற யாராவது நம்பரைக் குடுத்திருக்கலாமே... இல்லன்னா உங்க போனை வேற யார் கிட்ட யாவது குடுத்து அட்டெண்ட் பண்ணச் சொல்லுங்க."

"இங்க நீ தான் இருக்க, குடுத்தா உங்கிட்ட தான் குடுக்கணும்."

"ஆனா எனக்கு உங்க லேண்டப் பத்தின டீடெய்ல்ஸ் எதுவும் தெரியாதே."

"சரிதான், நானே பேசறேன்."

"சரி நீங்க உக்காந்து பேசிட்டே வாங்க, காரை நான் ஓட்டறேன்" என்று கார் சாவிக்காக ரகுநந்தனை நோக்கிக் கையை நீட்டினாள் தன்யா.

"நீயா?"

"ம்"

"லைஸன்ஸ் இருக்கா?"

"இல்லாமலா நான் ஓட்டறேன்னு சொல்லுவேன். ஒருவேளை எம்மேல உங்களுக்கு நம்பிக்கையில்லையோ."

"கார் ஓட்றதுக்கும் தெரிஞ்சு லைஸன்சும் இருந்தா எனக்கென்ன சொல்லு?" என்று புன்னகையுடன் பார்த்தான்.

"ஹலோ கார் ஓட்டத் தெரியாம லைஸன்ஸ் குடுப்பாங்களா?"

"யாருக்குத் தெரியும்" என்று மீண்டும் புன்னகையுடன் பார்த்தவனை, "ம்கூம் வேண்டாம்" என்றாள் தன்யா.

"அதோட..."

"ம் சொல்லுங்க?"

"என் காரை இதுக்கு முன்னாடி ட்ரைவ் பண்ணியிருக்கியோ என்னவோ..."

"ஏன் உங்க கார் மட்டும் ரோட்ல போகாம வானத்துல பறக்கற வகையோ" என்று தானும் புன்னகையுடன் சரிக்கு சரி கேட்டிருந்த தன்யா, உடனே தனது தவறை உணர்ந்து "ஸாரி" என்றாள்.



"ஏன் அதுக்குள்ள என்னாச்சு?"

"ஒன்னுமில்ல ஸார் முக்கியமான கால்ஸ் வரும்னு சொன்னீங்க. கார்ல ஏறி உக்காந்து பேசிட்டே வந்தீங்கன்னா நான் ட்ரைவ் பண்ணுவேன்."

மனதிற்குள் லேசான தயக்கத்துடன் தான் ரகுநந்தன் தன்யாவை ஓட்டச் சொல்லி விட்டுக் காரில் ஏறி அமர்ந்ததும்.

ஏனென்றால் அவனுடைய காரின் ஸி.ஸி. அப்படிப்பட்டது.

ஆனால் அவன் எண்ணியதற்கு நேர் மாறாகப் பிரமாதமாகக் காரை ஓட்டினாள் தன்யா.

எந்த விதமான பயமோ தயக்கமோ எதுவுமில்லாமல் அவ்வளவு கூட்ட நெரிசலிலும் போக்குவரத்து விதிகளை மதித்து லாவகமாக ஓட்டியவளை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

ஆனால் முதல்நாளைப் போலல்லாமல் அதை வெளிப்படுத்தவும் செய்தான்.

அதற்கு "அப்படியா" என்று சிறு புன்னகையுடன் கேட்டவள், "பத்துப் பதினைஞ்சு வருஷத்துக்கு முன்னாடி டாடி இந்த மாடல் காரையும் வெச்சிருந்தார் நான் ஓட்டக் கத்துக்கிட்டது கூட அதே கார்ல தான்" என்று சாதாரணமாகச் சொன்னாள்.

அதைக் கேட்ட ரகுநந்தனுக்கு மிகுந்த ஆச்சரியம்.

சற்று முன் எண்ணியது உறுதியாகியிருந்தது.

பெரிய குடும்பத்துப் பெண், ஏதோ தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறாள்.

அனைத்திற்கும் மேலாக மிகுந்த திறமைசாலி, முக்கியமாக வெகு அழகான...

''நீங்க சொன்ன இடம் வந்துடுச்சு ஸார்.''

''சரிதான், நீயும் வர்றியா இல்ல...''

''இல்ல ஸார் நீங்க மட்டும் போய்ட்டு வாங்க, நான் இங்கயே இருக்கேன்.''

''சரிதான் வந்துடறேன்...''

''நான் வேணும்னா உங்க மொபைலுக்கு வர்ற கால்ஸ அட்டெண்ட் பண்ணட்டுமா ஸார்?''

''வேண்டாம். அப்பா ஃப்ரீயாயிட்டார். அவர் மொபைலுக்கு டைவர்ட்டாயிடும்.''

............

''சரி வெயிட் பண்ணு வந்துடறேன்'' என்று இறங்கிச் சென்ற ரகுநந்தன், சிறிது நேரத்தில் வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்திருந்தான்.

வந்தவன் காரில் தன்யாவைக் காணாமல் சுற்றிலும் பார்த்தான்.

நன்கு உற்றுப் பார்த்தவனுக்கு, அவள் சற்று தொலைவில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

அருகில் சென்றவன் ''தன்யா'' என்று அழைத்தான்.

பின்னாலிருந்து கேட்ட குரலில் சில வினாடிகளுக்குப் பிறகு திரும்பினாள்.

''இங்க என்ன பண்ணிட்டிருக்க?'' என்று கேட்டவனின் கவனத்தில் லேசாகக் கலங்கியிருந்த அவளுடைய கண்கள் பட்டன.

''சும்மாதான். அப்படியே நடந்துட்டிருந்தேன்.''



''இங்க தான எங்கயோ உங்க வீடு இருந்ததா சொன்ன?''

ரகுநந்தன் கேட்க தனக்கு நேராக இருந்த வீட்டை நோக்கிக் கையை நீட்டினாள் தன்யா.

அவள் காட்டிய அந்த இடத்தில் கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் நிலத்தில் மிகப்பெரிய பங்களா ஒன்று கட்டப்பட்டிருந்தது தெரிந்தது.

நன்கு உற்றுப் பார்த்தவனுக்கு அதற்குப் பிறகு தான் பளிங்கில் பெரிதாக தன்யா இல்லம் என்று செதுக்கப்பட்டிருந்ததும் தெரிந்தது.

ஏதேதோ கேட்கத் தோன்றினாலும் அப்போதைக்கு வேண்டாமென்று தன்யாவை நோக்கித் திரும்பினான்.

அவளுடைய கண்கள் கலங்கியிருப்பது இப்போது நன்றாகவே தெரிய, ''ஸாரிமா'' என்றான்.

அதற்குள் தன்னை நன்றாகவே சமாளித்துக் கொண்டு விட்டிருந்த தன்யா காரை நோக்கி நடந்தாள்.

இருவரும் காரை அடைந்திருக்க, இப்பொழுது காரை ஓட்டியவன் ரகுநந்தன்.

அடுத்த அரை மணி நேரத்தில் இருவரும் கடையை வந்தடைந்திருந்தனர்.

# 7

இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத வண்ணம் ரகுநந்தன் வந்ததற்குப் பிறகு தன்யாவிற்கு அவளுடைய இழப்புகள் அடிக்கடி நினைவிற்கு வரலாயின.

அதற்குக் காரணமும் ரகுநந்தனை சந்தித்த அன்றும் அதற்கடுத்த சில நாட்களும் அவன் அவளை ஒரு மாதிரி நடத்தியிருந்ததே.

என்னதான் ஒரு முதலாளியாக அவன் சரியாகத் தான் செய்திருந்தான் என்றாலும், அந்த மாதிரியொரு நிலையை அதற்கு முன் சந்தித்திராத தன்யாவின் மனதை அது சற்றுப் பாதித்து விட்டிருந்ததென்று தான் சொல்ல வேண்டும்.

தன்யாவின் நிலை இப்படியிருக்க, ரகுநந்தனுக்கோ நாளுக்கு நாள் வித்யாசமான கோணத்தில் தெரிந்த தன்யாவின் மீது இப்பொழுது மிகுந்த சுவாரஸ்யம் வந்து விட்டிருந்தது.

அதிலும் அன்று காலையில் வெளியே சென்று வந்ததிலிருந்து அவனது மனக்கண்களில் தன்யாவின் கலங்கிய முகம் தான் திரும்பத் திரும்ப வந்து போனது.

அவ்வளவு வசதியாகப் பிறந்து வளர்ந்த ஒரு பெண் இந்த மாதிரியொரு நிலைக்குக் கீழிறங்க நேர்ந்தால் பிறகு சொல்லவும் வேண்டுமா.

இதே போக்கில் யோசித்துக் கொண்டிருந்தவனால் ஏனோ வேலையில் கூட முழுமையான கவனத்தைச் செலுத்த முடிந்திருக்கவில்லை.

மேலும் சில நாட்களும் சென்றிருந்தன.

இப்பொழுதெல்லாம் தன்யாவை சற்றுக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கியிருந்தான்.

அவளறியாமல் தான்.

இதுவே வேறொரு பெண்ணென்றால் தான் இருந்த நிலைக்குத் தனக்குத் தான் அனைத்தும் தெரியும் என்



றெல்லாம் கூடப் பெருமை பீற்றிக் கொண்டு பந்தாவாக நடந்து கொண்டிருக்கலாம்.

ஆனால் தன்யா அப்படியெல்லாம் எதுவும் செய்யாததோடு மிகுந்த அடக்கத்துடன் முக்கியமாக அவளை விடப் பெரியவர்களிடம் பணிவுடன் நடந்து கொள்வதைக் கண்டான்.

பந்தா எதுவுமில்லாமல் அனைத்து விதமான வேலைகளையும் எடுத்துச் செய்தவள், முக்கியமாகத் தான் உண்டு தனது வேலையுண்டு என்றிருந்ததையும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவசியமின்றி அவளாக யாரிடமும் ஒரு வார்த்தை கூடப் பேசாததும் அவனுடைய கவனத்திலிருந்து தப்பவில்லை.

ஞாயிற்றுக் கிழமை.

விடுமுறை நாள்.

காலையில் சற்று நேரங்கழித்துப் படுக்கையிலிருந்து எழலாம் என்பதாலேயே அந்த நாளை தன்யாவிற்கு எப்பொழுதும் பிடிக்கும்.

ஆனாலும் வார நாட்களில் நேரத்தில் எழுந்து பழகியிருந்ததால், விடுமுறை நாளான அன்றும் நேரம் வரை படுத்திருக்கப் பிடிக்காமல் போனது.

வழக்கம் போல ஆறு மணிக்கு முன்னரே எழுந்திருந்தவள், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சென்று தனது வேலைகளைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

முதலில் காபியைக் கலக்கியவள் தாய்க்கு எடுத்து வந்தாள்.

வந்தவள் அருகில் சென்று மம்மி என்று மென்மையாகத் தாயின் கையைத் தொட்டு அழைத்தாள்.

தனது அழைப்பில் கண் திறந்து பார்த்தவரை "காபி குடிக்கலாம் எழுந்திருங்க" என்று தானும் ஒரு கை பிடித்து எழுப்பி அமர வைத்தாள்.

உடனே கையில் தயாராக இருந்த பிரஸ்ஸைக் கொடுத்துப் பல் துலக்கச் செய்தவள், பிறகு தண்ணீரையும் பேஸினையும் எடுத்து வந்து வாய் கொப்புளிக்க உதவினாள்.

பிரஷ் செய்து முடித்ததும், ஃப்ளாஸ்க்கிலிருந்த காபியை டம்ளரில் ஊற்றித் தாயின் கைகளில் கொடுத்தாள்.

தாய் குடித்து முடிக்கும் வரை அருகிலேயே அமர்ந்திருந்தவள், குடித்து முடித்ததும் டம்ளரை வாங்கிக் கொண்டு மீண்டும் படுத்துக் கொள்வதாக ஜாடையில் சொன்ன தாயை ஒரு கை பிடித்துப் படுத்துக் கொள்ள உதவினாள்.

பிறகு தானும் வந்து காபியை எடுத்துக் கொண்டவள், இட்லி சட்னியென எளிதாகக் காலை டிபனை முடித்தாள்.

"அம்மா"

வீட்டு வேலைக்காரி பொன்னம்மா வர "வா பொன்னம்மா, என்ன இன்னைக்கும் நேரத்துலயே வந்துட்ட?" என்று வரவேற்றாள்.

அந்தப் பொன்னம்மாவை தன்யாவிற்கு அவளுக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்தே தெரியும்.

அந்த அளவிற்கு முப்பது வருடங்களுக்கும் மேலாக தன்யாவின் வீட்டில் வேலைக்காரியாக இருந்து வருகிறாள்.

வேலைக்காரியென்று பாராமல் தன்யாவின் வீட்டினர் தொடக்கத்திலிருந்தே அவளுக்கு அனைத்து விதத்திலும் உதவியிருந்ததால், இப்பொழுது கஷ்டமென்று வந்து விட்டதற்குப் பிறகு முன்னிலும் அதிகமாகத் தனது



முதலாளியின் குடும்பத்திற்காக உழைக்கத் தொடங்கி விட்டிருந்தாள், பொன்னம்மா.

அதிலும் இப்பொழுது தானிருக்கும் நிலைக்குப் பொன்னம்மாவின் உதவி மட்டும் கிடைக்காமல் போயிருந்தால்,

அந்த மாதிரியொரு நிலையை தன்யாவால் ஏனோ கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை.

அந்த அளவிற்குத் தலையிலும் இடுப்பிலும் அடிபட்டு ஐம்பது சதவிகிதத்திற்கும் மேல் உணர்வற்று மருந்துகளின் உதவியால் மட்டுமே உயிர் பிழைத்துக் கொண்டிருக்கும் தனது முதலாளியம்மாவை அதாவது தன்யாவின் தாயை குளிப்பாட்டி உடை மாற்றி விடுவதில் தொடங்கி பெட்ஃபேன் வைப்பது வரை அனைத்து வேலைகளையும் நாள் தவறாது வந்து இன்முகத்துடன் செய்து வந்தாள் பொன்னம்மா.

அதனாலேயே தனது சம்பாத்தியத்தில் ஒரு கணிசமான தொகையைப் பொன்னம்மாவின் சம்பளத்திற்காக ஒதுக்கி விட்டிருந்தாள் தன்யா.

ஆனால் பொன்னம்மாவோ அதற்கும் ஒருபடி மேலே போய் சம்பளமே வேண்டாமென்று விட்டிருந்தாள்.

எப்படியிருந்த குடும்பம்.

அதிலும் தனது சின்ன முதலாளி தன்யாம்மா எவ்வளவு செல்லமாக வளர்ந்த ஒற்றைப் பெண்.

அவளொன்றை மனதில் நினைத்து விட்டாலே அதை உடனே செய்து கொடுத்து விடும் அன்பான பெற்றவர்கள்.

நினைத்தால் வெளிநாட்டுப் பயணம்.

ஏன் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு வரை ஒரு நான்கைந்து வருடங்கள் தன்யாம்மா இருந்து படித்தது கூட வெளிநாட்டில் தானல்லவா.

அப்படிப்பட்ட பெண்ணுக்கா முற்றிலுமாகத் தொழில் நொடித்து போய், தந்தையை இழந்து தாயையும் இப்படி யொரு நிலையில் வைத்துப் பார்த்தாக வேண்டிய நிலையா வர வேண்டும்.

இப்படி தன்யா அறியாமல் தான் மனதிற்குள் நினைத்து நினைத்து மருகுவாள் பொன்னம்மா.

இவ்வளவிற்கும் ஓய்ந்து போய் விடாமல் துணிந்து நின்று போராடிக் கொண்டிருக்கும் பெண்ணிடம் அதை யெல்லாம் துளி கூடக் காட்டிக் கொள்ளாமல் நல்ல விஷயங்களைப் பற்றியே பேசுவாள்.

ஆனாலும் பெற்றவர்களின் குணம் எங்கே போகும், எவ்வளவு மறுத்தும் கேட்காமல் வாங்கிக் கொண்டு தான் ஆக வேண்டுமென்று தான் வழக்கமாக வாங்கும் சம் பளத்தை விட அதிகமாகவே கொடுத்து விடும் தன்யா விடமிருந்து வேறு வழியில்லாமல் பொன்னம்மாவும் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு தான் இருந்தாள்.

வேலைக்கு வந்திருந்த பொன்னம்மா வழக்கம் போலத் தனது வேலைகளை செய்யத் தொடங்கியிருக்க, தன்யா தன்னளவில் கவனத்தை செலுத்தத் தொடங்கி விட்டிருந் தாள்.

அந்த வாரம் முழுவதற்குமான துணிகளை எடுத்து அயர்ன் செய்து தயாராக அடுக்கி வைத்தாள்.

அடுத்தாக அந்த வாரம் முழுவதற்குமான மளிகை பொருட்கள் முதல் அனைத்தையும் சென்று வாங்கி வருவதற்கான அட்டவணையைத் தயார் செய்து எடுத்து வைத்தாள்.

பிறகு முகம் மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கான வற்றில் கவனத்தை செலுத்தினாள்.



கடைசியாகத் தனது அறையை ஒழுங்குபடுத்தி விட்டுச் சென்று காலை டிபனை எடுத்துக் கொண்டாள்.

''அம்மா''

''வா பொன்னம்மா''

''அம்மா சாப்பிடாச்சுங்கம்மா, ரெண்டு இட்லி தான் சாப்டாங்...''

''போதும் பொன்னம்மா, அதுக்கு மேல ஜூஸ் ஹார் லிக்ஸ்னு கலக்கிக் குடு உடம்புக்கும் நல்லது.''

''சரிங்கம்மா''

''நீயும் சாப்புடு பொன்னம்மா.''

''நீங்கமா?''

''நான் ஆச்சு, இனி நீ மட்டும் தான் பொறுமையா உக்காந்து சாப்பிட்டு அதுக்கப்புறம் மத்த வேலைகளைப் பாரு.''

''சரிங்கம்மா.''

''நான் போய் குளிச்சுட்டு வந்துடறேன்.''

''தலைக்கு எண்ணெய் தேய்ச்சுக் குளிங்கம்மா, எவ் வளவு நீளமான தலைமுடி உங்களோடது. நல்லா அக் கறை எடுத்தா இன்னும் அடர்த்தியா நல்லா வளரும்மா.''

''அதுசரி, ஏற்கனவே பாதி முடியக் கட் பண்ணிட லாங்கற எண்ணத்துல இருக்கேன்.''

''ஏம்மா இப்படி சொல்றீங்க?''

''ஆமாம் பொன்னம்மா, மெயிண்டெய்ன் பண்றதுக்கு ரொம்ப சிரமமா இருக்கு.''

''அச்சச்சோ, அதுக்காக முடிய வெட்றதா?''

''அப்புறம் என்னதான் பண்றது பொன்னம்மா, தினமும் காலைல வேலைக்குப் போற அவசரத்துல இந்த முடி

மட்டும் அரை மணி நேரத்த முழுங்கிடுது. சரி பொன்னம்மா முதல்ல போய் குளிச்சுட்டு வந்துடறேன். வெளிக் கதவு திறந்திருக்கு பாத்துக்கோ'' என்று உள்ளே வந்திருந் தாள் தன்யா.

குளிப்பதற்காக ஏற்கனவே அனைத்தையும் தயாராக எடுத்து வைத்திருந்ததால் குளித்து முடித்து அரை மணி நேரத்தில் வெளியே வந்திருந்தாள்.

தன்னைப் பார்த்ததும், ''வேண்டாம்மா முடிய தயவு செஞ்சு வெட்டாதீங்கம்மா'' என்று மீண்டும் தொடங்கி விட்டிருந்த பொன்னம்மாவிடம், ''சரிதான் பொன்னம்மா முடிய உனக்காக வெட்டாம விட்டுடறேன் போதுமா?'' என்றாள்.

''ரொம்ப சந்தோஷம்மா'' என்றவளின் குரலில் உண்மை யிலேயே தெரிந்த சந்தோஷம் தன்யாவிற்கு சிறு புன்ன கையைக் கூட வரவழைத்திருந்தது.

சரியாக அதே நேரம் காலிங் பெல் ஒலிக்க சென்று பார்த்தாள்.

அப்படி பார்த்தவளுக்கு மிகுந்த ஆச்சரியம்.

ஏனென்றால் வந்திருந்தது ரகுநந்தன்.

உடனே வெளியே வந்திருந்தவள், ''வாங்க ஸார்'' என்று புன்னகையுடன் கேட்டைத் திறந்து கொண்டே வரவேற்றாள்.

''சன்டே அதுவுமா தொல்லை குடுத்துட்டேன்...''

''அப்படியெல்லாமில்ல ஸார், நீங்க வந்ததுல ரொம்ப சந்தோஷம் வாங்க.''

தொடர்ந்து வீட்டிற்குள் வந்திருந்தவனை ''உக்காருங்க ஸார்'' என்று உபசரித்தாள்.



''என்ன திடீர்னு.. ஓ இங்க பக்கத்துல எங்கயோ கட பிரேஞ்ச்சுக்கு இடம் பாக்க வர்றதா சொல்லிட்டிருந் தீங்களே...''

''ஆமாம்மா அதேதான்.''

''பாத்துட்டீங்களா?''

''ஆச்சு. முதல்லயே அப்பா பாத்து நல்லார்க்குன்னு சொல்லிட்டார். வந்து பாத்ததுல எனக்கும் பிடிச்சது. டோக்கன் அட்வான்ஸ் கூடக் குடுத்தாச்சு.''

''சந்தோஷம் ஸார். சரியா எந்த இடம்...''

''இதேதான் இந்த வீட்டுக் காம்பவுண்ட்ல தொடங்கி கிட்டத்தட்ட ஒரு ஏக்கர்.''

''அப்படியா!''

''ம், என்ன இவ்வளவு ஆச்சர்யம்?''

''இல்ல இவ்வளவு பக்கமா இருக்கும்னு நினைக்கல.''

''அம்மா, கூப்டீங்களா?''

''ஆமாம் பொன்னம்மா, ரெண்டு கப் காபி எடுத்துட்டு வா.''

தன்யா சொல்ல, ''இதோ எடுத்துட்டு வர்றேனுங்கமா'' என்று பணிவுடன் சொல்லிவிட்டு நகர்ந்தாள் பொன்னம்மா.

''டிபன் சாப்பிடலாம் வாங்க ஸார்.''

''ஆச்சு தன்யா காபி கூட எனக்கு வேண்டாம்னு நினைக்கறேன்.''

''நோ, நோ, ஃபர்ஸ்ட் டைம் வந்திருக்கீங்க. காபி மட்டுமாவது எடுத்துக்கத்தான் வேணும்'' தொடர்ந்து சில நிமிடங்களில் பொன்னம்மா காபியுடன் வர இருவரும் எடுத்துக் கொண்டனர்.

# 8

அப்படியே புதிதாகத் தொடங்கவிருக்கும் கடையைப் பற்றி சிறிது நேரம் பேச்சு சென்றது.

''வீட்ல யார் யார் இருக்கீங்க. நீ அப்புறம்...''

''அம்மா''

''எங்க, வெளிய போயிருக்காங்களா?''

''இல்ல உள்ளதான் இருக்காங்க. அவங்களால நடக்க முடியாது.''

ரகுநந்தனின் பார்வையில் ''ஒரு விபத்துல முதுகெலும்புல பலமான அடி. தலைலயும். யாராவது உதவி இருந்தா தான் அவங்களால எழவே முடியும்'' என்றாள்.

''ஸாரிமா''

''அது பழகிடுச்சு ஸார்'' என்றவளின் வார்த்தைகள் அது ஒன்றுமில்லை மறந்துவிடு என்று சொல்லாமல் சொல்வதைப் போலிருந்தது.

''அம்மாவப் பார்க்கலாமா?''

ரகுநந்தன் கேட்க ''வாங்க'' என்று எழுந்தாள்.

''தூங்கிட்டிருந்தா டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்.''

''அது ஒன்னும் பிரச்சனையில்ல வாங்க'' என்றவளைப் பின் தொடர்ந்தான் ரகுநந்தன்.

வந்தவன் மெலிந்த ஒல்லியான உடல்வாகுடன் படுக்கையில் கிடந்த தன்யாவின் தாயை இயன்ற அளவு இயல்பாகப் பார்த்தான்.



பார்த்த அளவில் தன்யா தாயின் ஜாடையில் இருப்பது தெரிந்தது. இந்த அளவிற்கு உருவ ஒற்றுமை இருக்க முடியுமா என்று ஆச்சரியமாகக் கூட இருந்தது.

அதே எலுமிச்சை நிறம், ஒல்லியான உடல்வாகு என அனைத்தும்,

ஆனாலும் ஒரு பெரிய வித்யாசம் இருக்கவே செய்தது.

அது தன்யாவின் தாயின் முகத்தில் உயிர்ப்பு துளியும் இருக்கவில்லை.

எப்பொழுதுமே இப்படித்தானா இல்லை இப்பொழுது தான் மிகவும் முடியவில்லையா.

நினைப்பதை ரகுநந்தனால் அப்படியே கேட்க முடிந்திருக்கவில்லை.

பேசாமல் தன்யாவுடன் வெளியே வந்திருந்தான்.

''டாக்டர்ஸ் என்ன சொல்றாங்க?''

சில வினாடிகள் எடுத்துத் தன்னை சமாளித்துக் கொண்டு அவனுடைய கேள்விக்கு பதில் சொன்னாள் தன்யா.

''ஹோப் தர மாட்டேங்கறாங்க. அம்மாகிட்டயும் நாளுக்கு நாள்.. மாசத்துக்கு மாசம் ரெஸ்பான்ஸ் குறைஞ்சுட்டு தான் வந்துட்டிருக்கு...'' தொடர்ந்து பேச முடியாமல் தன்யாவின் கண்கள் கலங்கி விட்டிருக்க ''ஸாரிமா'' என்று உணர்ந்து சொன்னான் ரகுநந்தன்.

அதற்கு மேல் என்ன சொல்வதென்று அவனுக்கும் புரிந்திருக்கவில்லை.

தான் ஏதாவது பேசி அது தன்யாவின் மனதை மேலும் புண்படுத்தி விடுமோ என்ற பயம் ரகுநந்தனுக்கு.

தொடர்ந்து சில வினாடிகள் மௌனமாகக் கழிந்தன.

''சன்டே அதுவுமா உன்ன டிஸ்டர்ப் பண்ணிட்டிருக்கேன்...''

"அப்படியெல்லாம் இல்ல ஸா..."

"முதல்ல இந்த ஸார விடு தன்யா."

"பின்ன எப்படிக் கூப்பிடறது?"

"பேர் சொல்லிக் கூப்பிடு."

"பேர் சொல்லியா?!"

"ஏன் அதுக்கேன் இவ்வளவு ஆச்சரியம்?"

"பாஸப் போய், ம்கூம் அது தப்பு..."

"நாலு டிகிரி முடிச்ச பொண்ணு, அதுவும் ஃபாரின்ல போய்ப் படிச்சுட்டு வந்துட்டு இப்படி சொல்றது எனக்கு ஆச்சரியமா இருக்கு..."

"ஆனாலும்..."

"என்ன ஆனாலும்? சரிதான், இனிமேல் ஸார் மோரெல்லாம் கூடாது சொல்லிட்டேன்."

"சரிதான் ரகு" என்று புன்னகையுடன் பார்த்த தன்யாவை "ம் இது சரி" என்று தானும் புன்னகை புரிந்தான்.

"சரிமா நான் கிளம்பறேன்."

"உங்க இடத்தப் பார்க்கலாமா..."

"இது என்ன கேள்வி, தாராளமாப் பாக்கலாம் காசு பணமெல்லாம் கூட எதுவும் வேண்டாமாக்கும்" என்ற ரகுநந்தனை "அடடா என்ன பெருந்தன்மை" என்று பார்த்தவள், "அப்ப ஒரு நிமிஷம் வெயிட் பண்ணுங்க வந்துடறேன்" என்று உள்ளே சென்றாள்.

சென்றவள் சில நிமிடங்களில் வெளியே செல்லத் தயாராக வந்தாள்.

"பொன்னம்மா."

"சொல்லுங்கமா."



"அம்மாவப் பாத்துக்கோ இப்ப வந்துடறேன்."

"சரிங்கம்மா."

அடுத்த சில வினாடிகளில் ரகுநந்தனுடன் வெளியே வந்திருந்தாள் தன்யா.

"நடந்தே போகலாமே."

தன்யா கேட்க "சரிதான்" என்றான்.

ஏனோ அவனுடன் நடப்பது, ஏன் அவனைப் பார்ப்பது அவனுடன் பேசுவது என அனைத்துமே ஒருவித ஆறுதலைக் கொடுத்திருந்தன தன்யாவிற்கு.

ஏதோ பிடிப்பு கிடைத்தாற் போல, தனிமையின் கொடுமையிலிருந்து சற்று விடுதலை கிடைத்தாற் போல, புது நம்பிக்கை வந்தாற் போல இப்படி இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம் போலிருந்தது.

ரகுநந்தனுடன் சந்தோஷமாக நடந்தாள்.

ஆனாலும் வெளியே தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாள்.

"ம், இந்தக் காம்பவுண்ட்ல தொடங்கி அப்படியே அந்தக் கடைசி வரைக்கும்" என்று ரகுநந்தன் தான் புதிதாக வாங்கவிருக்கும் இடத்தை தன்யாவிடம் காட்டினான்.

"என்னமா?"

"இல்ல மரம் செடி கொடிகளோட சோலைவனம் மாதிரியிருக்கற இந்த இடத்தை எனக்கு ரொம்பப் பிடிக்கும் மனசுக்கு ஏதாவது கஷ்டமா இருந்தாக் கூட நான் இங்க தான் வந்து கொஞ்ச நேரம் உலாவிட்டுப் போவேன்" என்றாள்.

"அப்படியா."

"ம்."

"அப்ப விடு இந்த இடத்துல கட்ட வேண்டாம்."

"அப்புறம்?" தன்யா கேட்க,

"என்ன அப்புறம்?" என்றான் ரகுநந்தன்.

"எனக்கு இங்க உலாவப் பிடிக்கறதுக்கும், நீங்க இங்க கட்ட வேண்டாம்னு சொல்றதுக்கும் என்ன சம்பந்தம்?"

"உனக்காக உன் பேர்ல இந்த இடத்த எழுதிக் குடுத்துடறேன்."

ரகுநந்தனின் பார்வையில் தெரிந்த புன்னகை அவன் விளையாட்டாகப் பேசுவதை உறுதிப்படுத்த, தானும் அவனை ஒட்டியே பேசினாள் தன்யா.

"சரிதான், என் பேருக்கே எழுதிக் கொடுத்துடுங்க" என்றாள்.

"செஞ்சுடுவேன்."

இப்பொழுது ரகுநந்தனின் குரலில் தெரிந்த உறுதி அவளைச் சற்றே நடப்பிற்குக் கொண்டு வந்திருந்தது.

என்னதான் தெரிந்தவன், நல்லவனே என்றாலும் கூடத் தான் ஏன் ஒரு ஆடவனுடன் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறோமென்று நினைக்க வைத்திருந்தது.

இது தவறல்லவா.

"என்னமா?"

ரகுநந்தனின் அக்கறையுடனான கேள்வியும், பார்வையும் தன்னை என்னவோ செய்ய மனதை முழுவதுமாக நடப்பிற்குக் கொண்டு வரச் சற்று சிரமப்பட்டுத் தான் போனாள் தன்யா.

தொடர்ந்து சில வினாடிகள் மௌனத்தில் கழிந்தன.

இதற்கு முன் இந்த மாதிரி யாரிடமும் பேசியிருக்கா தவள் என்பதால், எதுவோ ஒன்று தன்யாவை உறுத்தியது.



"தன்யா."

"ம்."

"நான் ஒன்னு சொல்லட்டுமா?"

ரகுநந்தனின் கேள்வியில் அவனை நிமிர்ந்து பார்த்தாள் தன்யா.

"எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு" என்ற ரகுநந்தனின் வார்த்தைகளில் இப்பொழுது அவள் அதிர்ச்சியுடன் பார்க்க, உங்கூடப் பேச, அதுவும் இயல்பா எந்தத் தடையுமில்லாமப் பேசப் பிடிச்சிருக்குன்னு சொல்றேன்" என்றான்.

ரகுநந்தனின் யதார்த்தமான விளக்கத்தில் இப்பொழுது மனம் சற்று லேசாகியிருந்தது.

சரிதான், தனக்கும் அப்படித்தானே இருக்கிறது.

அப்படி நினைத்ததோடல்லாமல், அதை வெளிப்படையாகவே சொல்லவும் செய்தாள்.

"அது தான் தெரியுமே."

அப்படிச் சொன்னவனை ஆச்சரியத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தாள் தன்யா.

"எப்படி?"

"மத்தவங்கிட்ட நீ நடந்துக்கற விதத்தப் பார்த்துட்டு தான இருக்கேன்."

"அப்ப உங்ககிட்ட வேற மாதிரி நடந்துக்கறேன்னு சொல்றீங்களாக்கும்?"

"நிச்சயமா."

"......"

"என்ன பாக்கற. உன் லெவலுக்கு சமமானவங்க கிட்ட, அதுவும் மனசுக்குப் பிடிச்சவங்ககிட்டப் பழகற

............

''என்னமா?''

............

''தன்யா என்னாச்...''

''கிளம்பலாமா?''

''ஏன் அதுக்குள்ள என்னாச்சு, வா அப்படியே கடைக் வரைக்கும் நடந்துட்டு வரலாம்.''

''இல்ல நான் போகணும்.''

''ஏன் தன்...''

''வீட்ல தேடுவாங்க.''

''அதுக்குள்ள ஏன்...''

''ஸாரி ரகு'' என்ற தன்யா அவனுடைய பதிலுக்காகக் காத்திருக்காமல் வீட்டை நோக்கி நடக்கவே தொடங்கி விட்டிருந்தாள்.

தன்யா திடீரென்று அப்படிச் சென்றது மிகுந்த கோபத்தை வரவழைத்திருந்தது ரகுநந்தனுக்கு.

காரை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டிருந்தான்.

அப்படிக் கிளம்பி வந்திருந்தவனால் ஏனோ சற்றும் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

மீண்டும் மீண்டும் தன்யாவின் நினைவு வந்து கொண்டே இருந்தது.

அன்று மட்டும் தான் என்றில்லாமல் தன்யாவைப் பார்த்த முதல் நாளிலிருந்தே இன்னது தானென்று சொல்ல முடியாத வண்ணம் அவனுடைய உள்ளம் தவித்துக் கொண்டு தான் இருந்தது.

மிகவும் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் இதற்கு முன் எந்தப் பெண்ணிடமும் அவன் இந்த மாதிரி உணர்ந்திருக்கவில்லை என்பது தான்



இனம் புரியாத அந்தத் தவிப்பு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே தான் சென்றதே தவிர சற்றும் குறைந்திருக்கவில்லை.

தன்யாவைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அவளுடன் பேசிக் கொண்டே இருக்க வேண்டும்.

அவளைத் தன்னவளாக்கித் தன்னுடனேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம்.

வெகு தீவிரமாகத் தோன்றத் தொடங்கிவிட்டிருந்தன.

தான் ஏன் இப்படி மாறி விட்டோமென்று அவனுக்கே புரிந்திருக்கவில்லை.

அதே சமயம் தன்யாவையும் மறந்திருக்க முடியவில்லை.

ஒரு பெண் தன்னை இந்த அளவிற்கு மாற்றி விட்டாளே என்ற எண்ணம் புன்னகையை வரவழைத்திருக்க, அதை வெளியில் காட்டிக் கொள்ளாவிட்டாலும் மனதிற்குள் நிம்மதியின்றித் தவித்தான்.



## 9

என்னதான் அப்படிக் கிளம்பி வந்திருந்தாலும் வீட்டிற்கு வந்து சேர்ந்திருந்த தன்யாவாலும் நிம்மதியாக இருக்க முடிந்திருக்கவில்லை.

எனக்கு உன்ன ரொம்பப் பிடிச்சிருக்கு என்று ரகுநந்தன் சொன்ன வார்த்தைகளே மீண்டும் மீண்டும் அவளுடைய காதுகளுக்குள் ஒலித்துக் கொண்டே இருந்தன.

எவ்வளவு கம்பீரமான ஆண் மகன்.

பார்வையில் கூட கண்ணியத்துடன் நடந்து கொள்பவனாயிற்றே.

இதற்கு முன்பெல்லாம் எத்தனை ஆண்கள் எப்படியெல்லாம் பார்த்திருப்பார்கள்.

அந்தப் பார்வைகளில் உடல் கூசிப் போகுமே.

ஆனால் இவனுடைய பார்வையில் மட்டும் ஏன் உடல் சிலிர்த்துப் போகிறது.

அது மட்டுமா,

அவனைப் பார்க்க மாட்டோமா, தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்க மாட்டோமா என்றெல்லாம் மனம் தவிக்க வேறு செய்கிறதே.

ஏன் அதையெல்லாம் கவனித்திருந்ததோடல்லாமல் அதைத் தன்னிடமே சொல்ல வேறு செய்கிறானே.

ஏதேதோ எண்ண ஓட்டங்கள் நெஞ்சுக்குள் அலைமோத இன்னதென்று சொல்ல முடியாத வண்ணம் நிலை கொள்ளாமல் தவித்தாள்.

அன்று காலையில் வேலைக்கு வந்திருந்த தன்யாவால் வழக்கம் போல இயல்பாக ரகுநந்தனிடம் பேச முடிந்திருக்கவில்லை.

''குட்மார்னிங் ஸார்...''

முதல்நாள் தானே பெயர் சொல்லி அழைக்க வைத்திருந்தான். இப்பொழுது மீண்டும் ஸாரென்றதில் கோபித்துக் கொள்வானோ என்பது ஒரு புறமிருக்க, நேற்று அவன் அழைக்க அழைக்க நிற்காமல் சென்று விட்டோமே முதலில் தன்னிடம் பேசுவானா என்றொரு சந்தேகமும் வந்திருந்தது.



ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

எங்கிருந்து அவ்வளவு தைரியம் வந்ததோ மீண்டுமொரு முறையும் ''குர்மார்னிங் ரகு'' என்று அழுத்தமாகவே சொல்லியிருந்தாள்.

அப்படிச் சொன்னவளை இப்பொழுது எதுவும் பேசாமல் நிமிர்ந்து பார்த்தான் ரகுநந்தன்.

அதுவும் சில வினாடிகள் தான்.

பிறகு மீண்டும் தனது வேலையில் கவனத்தை செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான்.

ரகுநந்தனின் செய்கையில் இப்பொழுது கண்கள் கலங்கி விட்டிருந்தன தன்யாவிற்கு.

ஃபைல்களை அடுக்குவதைப் போலத் திரும்பிக் கொண்டாள்.

தன்யாவின் நிலை ரகுநந்தனுக்கும் புரியவே செய்தது.

''நீ நேத்து அப்படி சொல்லாமக் கொள்ளாம கிளம்பிப் போனத என்னால மறக்க முடியாது. ஏன் மன்னிக்கவும். அத மறந்துட்டு வேணும்னா இயல்பா பேசலாம்'' என்றவன் ''குட்மார்னிங்'' என்றான்.

ரகுநந்தன் சொன்னது காதில் விழவே செய்தாலும் தன்யா அதற்கு பதிலெதுவும் சொல்லியிருக்கவில்லை.

டெய்லி ரிப்போர்ட்டை சப்மிட் செய்துவிட்டு வெளியே வந்திருந்தாள்.

''ஹாய் தன்யா!''

''விமலா, எப்படியிருக்க?''

''எனக்கென்ன, நீயேன் டல்லாக்க?''

''அதெல்லாம் இல்லையே...''

''ஏன் எம்.டி. ஏதாவது சொல்லிட்டாரா?''

''அப்படியெல்...''

''சரிதான் நீதான் ஸின்ஸியர் சிகாமணியாச்சே, உன்னை ஏன் அவர் திட்டப் போறார். ஏனோ உன்னப் பார்த்து எனக்கு பொறாம வரல. ஏன்னா எல்லார விடவும் இந்தக் கடைக்கு ஸினியர் ஸ்டாஃப் நாந்தான். ஆனா என்னையே மிரட்டி வேலை வாங்கற அதிகாரம் உனக்குக் கிடைச்சிருக்கே அதனால சொல்றேன்...'' என்று தனக்குத் தானே சிரித்துக் கொண்ட விமலாவை ஸ்நேக பாவனையில் பார்த்தாள் தன்யா.

நேற்று ரகுநந்தன் சொன்னது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது.

ஏனோ அவனிடம் பேசுவது தன்யாவிற்கு இயல்பாக வந்தது. அவனே சொன்னதைப் போல தனக்கு சமமானவர்களிடம் பேசுவதைப் போன்ற ஒரு உணர்வைக் கொடுத்திருந்ததும்.

ஆனால் நேற்று இதை அவன் சொல்லக் கேட்ட போது மட்டும் ஏன் தனக்கு அப்படிக் கோபம் வந்தது.

உண்மையைக் கண்டுபிடித்து விட்டான் என்பதாலா.

எந்த அளவிற்கு கவனித்திருந்தால் இதை உணர்ந்திருக்க முடியும்.

''ஏய் தன்யா என்னாச்சு?''

''இல்ல எம்.டி. சொன்ன வேலைகள்ல எத முதல்ல செய்யலாம்னு யோசிச்சுட்டிருந்தேன்.''

''சரிதான், ஆனாலும் மனுஷன் செம ஸ்மார்ட் தன்யா. நீ குடுத்து வெச்சவ மேக்ஸிமம் டைம் கூடவே இருக்க.''

''எதுக்கும் கொஞ்சம் பாத்து நடந்துக்கோ தன்யா. எம்.டி.க்கு கோபம் பயங்கரமா வரும்னு இங்க எல்லாரும் அவரப் பாத்தாலே நடுங்குவாங்க. ஏன் நான் இவ்வளவு



பேசறேன். நாலஞ்சு வருஷமா இங்கதான் வேலையும் செஞ்சுட்டிருக்கேன். ஆனா எம்.டி.கிட்ட நான் இன்னும் ஒரு தடவ கூடப் பேசினதில்லை. வேறென்ன பயம் தான் காரணம். முடிஞ்ச அளவுக்கு அவரப் போய்ப் பார்க்கறத அவாய்ட் பண்ணிடுவேனாக்கும்.''

''சரிதான், எம்.டி. ஃபைல் ஒன்னு கேட்டார்...''

''ஐயய்யோ இத முதல்ல சொல்ல வேண்டியது தான, போம்மா சீக்கிரம் போய் எடுத்துட்டுப் போ.''

விட்டால் போதுமென்பதைப் போல விமலா நகர்ந்திருக்க, ஷ் அப்பாடா என்பதைப் போல சில பெரிய மூச்சுக்களை எடுத்துத் தன்னை சமனப்படுத்திக் கொண்டாள் தன்யா.

தன்னிடத்திற்கு வரவும் தனது டேபிளில் இருக்கும் இண்டர்க்காம் ஒலிக்கவும் சரியாக இருக்க, அட்டெண்ட் செய்து பேசினாள்.

விமலாவிடம் சொன்னதைப் போலவே ரகுநந்தன் ஒரு முக்கியமான ஃபைலைக் கேட்க எடுத்துக் கொண்டு போனாள்.

உள்ளே வந்தவள் ரகுநந்தனின் டேபிளில் ஃபைலை வைத்தாள்.

''உம் மனசுல நீ என்னதான் நினைச்சுட்டிருக்க?''

''உன்னத்தான் பேசு...''

..........

''நேத்தும் அப்படி உன் பாட்டுக்குப் பேசாமப் போன, இப்பவும்...''

''நான் என்ன பேசணும்னு நீங்க எதிர்பார்க்கறீங்கன்னு

''கேக்கற கேள்விக்கு பதில் சொன்னாப் போதும்.''

அப்படிச் சொன்னவனைப் பார்த்தாள் தன்யா.

அப்பொழுதும் அவன் தனது பதிலை எதிர்பார்த்துக் காத்திருப்பது புரிய ''நீங்க கேள்வி கேட்டிருந்தா பதில் சொல்லியிருப்பேன்'' என்றாள்.

''இப்படியொரு பதில சொன்னதுக்கு நீ பேசாமலே இருந்திருக்கலாம்'' என்றான் ரகுநந்தன்.

''என்ன சொல்றது, எப்படிப் பேசறதுன்னு ஒன்றுமே புரியலை ரகு. முதல்ல என்னப் பத்தி என்ன தெரியும் உங்களுக்கு? பாக்கறதுக்கு நல்லா அழகா இருக்கேன்...''

''போதும். இதுக்கு மேல ஒரு வார்த்த கூடப் பேசாத.''

''இருங்க...''

''வேண்டாம்மா, விட்டுடு.''

''தயவுசெஞ்சு நான் சொல்ல வர்றதக் கேளுங்க ரகு. என்னப்பத்தி ஒன்னுமே தெரியாது உங்களுக்...''

''ஏன் தெரியாது, ஒரு சில சின்னப் பொண்ணுங்க மாதிரி வீண் கற்பனைகளையும், ஆசைகளையும் வளர்த்துட்டிருக்காம நடப்புக்கு யதார்த்தமா இருக்க. உன் வயசுக்கு நீ ஏத்துட்டிருக்கற பொறுப்புகள் ரொம்ப அதிகம். ரொம்பப் பெரிய குடும்பத்துல பிறந்து வளர்ந்த பொண்ணு ஏதோ பிரச்சனைகளால வசதி, வாய்ப்புகளையெல்லாம் இழந்து அனாதரவா கஷ்டப்பட்டுட்டிருக்க...''

''இழந்தது தந்தையையும் சேர்த்தே அல்லவா, அது மட்டுமா பாதி உயிராகத் தாயையும்...''

''என்னமா...''

''அதுவரைக்கும் சரியாதான் யூகிச்சிருக்கீங்க. ஆனா அதுக்கப்புறம் நடந்ததப் பத்தியெல்லாம் என்ன



தெரியும் உங்களுக்கு? பிஸினஸ்ல எல்லாத்தையும் இழந்துட்டு நிக்கற நேரத்துல ஒரு ஆக்ஸிடெண்ட்ல அப்பாவ இழந்து, பாதி உயிரா அம்மாவ மீட்டு, அதுக்கு மேலயும் புதுசு புதுசா வந்து முளைச்ச கடன்காரங்களுக்கெல்லாம் மிஞ்சினதையெல்லாம் வித்துக் கடனத் தீர்த்து, அதுக்கப்புறமும் தனியாளா அம்மாவ ஹாஸ்பிடல்ல வெச்சு மாசக்கணக்கா பாத்துக்கிட்டது. அதுக்கு செலவுக்குக் கொஞ்சம் மிஞ்சின நகைகள், கார், வீலான்னு எல்லாத்தையும் வித்தது. அப்பவும் இதுக்கு மேல முடியாதுன்னு டாக்டர்ஸ் கை விரிச்சுட்டது. சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாம அம்மாவோட நான் நடுத்தெருவுல நிக்க நேர்ந்தது. அதுக்கப்புறம் இங்க வேலைக்கு வந்ததுன்னு இன்னும் சொல்லிக்கிட்டே போகலாம்.''

''இப்படியெல்லாம் நடக்கறதுக்கு முன்னாடி நான் எப்படி இருந்தேன் தெரியுமா, ஏன் சின்ன வயசுலிருந்தே ஒரே பொண்ணா ரொம்ப செல்லமா வளர்ந்தவ நான்.''

''சுதந்திரப் பறவையா நான் நினைச்சத செஞ்சுட்டு, ஃபாரின்ல போய்ப் படிச்சுட்டு, எவ்வளவு ஜாலியா லைஃப் போயிடிருந்தது. அப்பெல்லாம் கஷ்டம்னு ஒரு வார்த்த இருக்கறதாக் கூட நான் நினைச்சுப் பார்த்தது கிடையாது.''

''ஏன் வேற வழி தெரியாம நிக்க நேர்ந்ததப் பார்த்துட்டு என்னத் தப்பாப் பயன்படுத்திக்கக் கூட எத்தன பேர் தயாரா இருந்தாங்க தெரியுமா.''

''தன்யா...''

''எல்லாத்தையும் இழந்தேன் ரகு. ஆனா மானத்த இழக்கத் தயாரில்ல. அதுக்கு பதிலா உயிர வேணும்னா இழந்துடலாம்னு இருந்தேன். ஆனா அதுக்கு அவசியம் வரல. தொடர்ந்து வந்து விழுந்த இடி மேல இடில

சாப்பாட்டுக்குக் கூட எவ்வளவு சிரமப்பட்டோம் தெரியுமா?''

''யார் நல்லவங்க, யார நம்பலாம்னு எதுவுமே தெரியல. எத்தன நாள் கண்ணீரால என் தலையணை முழுக்க நனைஞ்சு போயிருக்கு தெரியுமா?''

''அப்படியிருந்த நேரத்துல தான் கடவுள் புண்ணியத்துல உங்கப்பா லோகநாதன் ஸார் மூலமா எனக்கிந்த வேலை கிடைச்சது. என்னவோ தெரியல அவரப் பார்த்ததும் எனக்கு எங்கப்பா ஞாபகம் தான் வந்தது. உலகத்துல நல்ல மனுஷங்களும் இருக்காங்கன்றது புரிஞ்சது. என் கஷ்டத்தையெல்லாம் சொன்னேன்.''

''நான் எதிர்பார்த்தத விடவும் நல்ல சம்பளத்துல இந்த வேலையைக் குடுத்ததோட, இப்ப நாங்க இருக்கற வீட்டையும் ஸார் தான் அட்வான்ஸ் குடுத்து எனக்கு ரொம்ப வேண்டியவங்கன்னு சொல்லி வாடகைக்குப் பிடிச்சுக் கொடுத்தார்.''

''லோகநாதன் ஸார் இந்த உதவிய செஞ்சிருக்கலேன்னா மேல என்ன நடந்திருக்குங்கறத என்னால கற்பனை கூடப் பண்ணிப் பார்க்க முடியல.''

''முக்கியமா அம்மா இருக்கற கண்டிஷனுக்கு எங்களுக்கு யாருமே வீடு குடுத்திருக்க மாட்டாங்க.''

''அதுக்கு மேல பாவமேன்னு யாராவது குடுக்கத் தயாரா இருந்தாலும் அதுக்கு செலவு பண்ண எங்கிட்டப் பைசா பணம் கிடையாது...''

''வேண்டாம் ரகு. எல்லாத்துக்கும் மேல நானும் உணர்ச்சிகளோட இருக்கற சாதாரண மனுஷி தான். உங்கள மாதிரியொரு பெர்ஃபெக்டான ஆண் மகன்கிட்ட



அதுவும் நீங்க இவ்வளவு ஃப்ரேங்காப் பேசும்போது எனக்கும் மனசு மாறிப் போகலாம். ஆனா வேண்டாம்...''

''பேசி முடிச்சுட்டயா?''

........

''இனி நான் பேசலாமா?''

''இவ்வளவு நேரமும் நானென்ன கதையா சொல்லிட்டிருந்தே...''

''நீ இதையெல்லாம் சொன்னதுக்கப்புறம் தான்மா உன்ன மனசார விரும்பணும்னு தோணுது. பொறு... நானும் இதுக்கு முன்னாடி எத்தனையோ பொண்ணுங்கள பாத்துப் பேசியவன் தான். ஆனா அவங்க யார்கிட்டயுமே தோனாததெல்லாம் உங்கிட்ட மட்டும் ஏன் தோனணும் சொல்லு?''

''இப்ப சில நாளா தான்னு இல்ல. உன்னப் பாத்த முதல் நாளே விழுந்துட்டேன்டா. ஆனாலும் அப்ப சொல்ல முடியல, எதுவோ தடுத்த...''

''தொடர்ந்து இப்படியே பேசிட்டிருந்தீங்கன்னா அப்புறம் நான் வேலையை ரிஸைன் பண்ண வேண்டியதிருக்கும்.''

தன்யாவின் வார்த்தைகளில் ஓங்கிக் கன்னத்திலேயே அறை வாங்கியதைப் போலாகி விட்டிருந்தது ரகுநந்தனுக்கு.

மனமும் இறுகிப் போய் விட்டிருந்தது.

அதற்கு மேல் அவன் வேலையைத் தவிர தன்யாவிடம் வேறு எதற்குமே பேசியிருக்கவில்லை.

ஏன் அதைக் கூட பெருமளவு தவிர்க்கவே முயன்றான்.

# 10

ஒரு வாரம் சென்றிருந்தது.

அன்றைய நாளின் பேச்சுக்குப் பிறகு ரகுநந்தன் வெகுவாக மாறி விட்டிருந்தது வெளிப்படையாகவே தெரிந்தது.

ஒரு விதத்தில் மனதிற்குக் கஷ்டமாக இருந்தாலும் இன்னொரு விதத்தில் நிம்மதியாக உணர்ந்தாள் தன்யா.

ரகுநந்தன் மட்டும் இந்த மாதிரி மாறியிருக்காமல் இயல்பாக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அவனிடம் உதவியொன்றைக் கேட்க வேண்டுமென்று கடந்த ஒரு வாரமாகத் தொடர்ந்து முயன்றும் ஏனோ அது அவளால் முடிந்திருக்கவில்லை.

அதற்கு மேல் தள்ளிப்போட முடியாதென்ற நிலை வந்திருக்க, தயக்கத்துடன் ரகுநந்தனுக்கு முன்னால் வந்து நின்றாள்.

கடந்த சில நாட்களாகவே தீவிரமாக எதையோ கேட்க வருவதும், பிறகு வேண்டாமென்று சென்று விடுவதுமான தன்யாவின் தயக்கம் அவனுக்கும் புரியவே செய்தது.

ஆனாலும் என்னவென்று கேட்கத் தோன்றியிருக்கவில்லை.

அவளுக்கே அவசியமென்று பட்டால் கேட்கட்டுமென்று பேசாமல் இருந்து விட்டிருந்தான்.

தாயின் மருத்துவத்திற்காகக் கையிருப்பையெல்லாம் செலவு செய்திருந்த தன்யாவிடம் இப்பொழுது மருந்து மாத்திரைகள் வாங்கக் கூட பணம் இருக்கவில்லை.



ஆனாலும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போன நோயின் வாதனை, முன்னை விட நான்கைந்து மடங்கு மருத்துவச் செலவினை அதிகப்படுத்தியிருந்தது.

இன்னும் சில நாட்களில் சம்பளமே வந்து விடுமென்றாலும், அதற்குள் பணம் தேவைப்பட்டது.

தன்யா ரகுநந்தனிடம் கேட்க முயன்று கொண்டிருப்பதும் தனது சம்பளத்தை அன்றே கொடுக்க முடியுமா என்பதைத் தான்.

கடைசியில் ஒரு வழியாக வாயைத் திறந்து கேட்டே விட்டிருந்தாள் தன்யா.

ஒருமுறை கேட்டும் பேசாமல் பார்த்தவனிடம் மீண்டுமொரு முறையும் கேட்டாள்.

''எனக்கு சம்பளம் இன்னைக்கே கிடைக்குமா?''

.........

''அவசரமில்லேன்னாக் கேக்க மாட்டேன்...''

''உன் பிரச்சனை எனக்கு அவசியமில்லாதது. அதோட இப்படியெல்லாம் பாவம் பாத்துட்டிருந்தா உன்ன மாதிரி இன்னும் எத்தன பேர்...''

''சரிதான் ஸார், ஆனா ரொம்ப அவசியங்கறதால தான்...''

ஏற்கனவே அன்று தன்யா கடைசியாகச் சொன்ன வார்த்தைகளினால் மிகுந்த கோபத்திலிருந்தவனுக்கு இப்பொழுது ஸார் என்று அவள் விளித்திருந்தது அந்தக் கோபத்தை இன்னும் அதிகப்படுத்தியிருந்தது.

''இது வேல செய்யற இடம், இங்கெல்லாம் பாவம் புண்ணியம் பாத்துட்டிருந்தா அப்புறம் நானும் உன்ன மாதிரி எங்காவது போய்க் கையேந்த வேண்டியதுதான்...''

''சரிதான் ஸார்...''

''இதுக்கு மேல ஒரு வார்த்தை கூடப் பேசாத, போ போய் வேலையப் பாரு.''

ரகுநந்தன் அப்படிச் சொல்லி விட்ட பிறகும் தொடர்ந்து அங்கேயே நின்றிருந்தாள் தன்யா.

''ஒரு தடவ சொன்னாப் புரியாதா உனக்கு நீ இன்னும் எவ்வளவு நேரம் இப்படியே நின்னுட்டிருந்தாலும் அதனால எந்தப் பலனும் இருக்கப் போறதில்ல. சொகுசா வந்துட்டு ஜாலியாப் போயிட்டிருக்கறதுக்கு இது ஒண்ணும் உன் சொந்தக் கட கிடையாது. முதல்ல எனக்கு முன்னாடி நின்னுட்டிருக்காமப் போயிடு...''

அதற்கு முன் இந்த மாதிரியொரு நிலையை எதிர் கொண்டவள் இல்லையென்பதால் செய்வதறியாது திகைத்துப் போனாள் தன்யா.

தொடர்ந்து நின்று கொண்டே இருந்தால் இன்னும் என்னென்ன சொல்லி விடுவானோ என்று தன்னுடைய இடத்திற்கு வந்திருந்தாள்.

ரகுநந்தன் அப்படியெல்லாம் பேசியிருந்தது அவளுக்குப் பெரிய ஏமாற்றமே என்றாலும், அதை விடத் தாயின் மருந்து செலவுகளுக்கு என்ன செய்வது என்ற எண்ணம் அவளுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்திருந்தது.

செய்வதறியாது விழித்தாள்.

ஆனால் ரகுநந்தனே சொன்னதைப் போல அது வேலை நேரமென்பதால், முயன்று கவனத்தை வேலையில் செலுத்தினாள்.

ஆனாலும் அவ்வப்பொழுது பிரச்சனை நினைவிற்கு வந்து, மனதைக் கலங்கச் செய்து கொண்டே இருந்ததை



என்ன முயன்றும் அவளால் தடுக்க முடிந்திருக்கவில்லை.

மாலையானதும் வழக்கம் போலக் கிளம்பி விட்டிருந்தாள்.

ஏனோ வீட்டிற்கு செல்லவே பயமாக இருந்தது.

மருந்து மாத்திரைகளை சரியாகக் கொடுக்க முடிந்தாலே பாதி வலி தான் கேட்கும், இப்பொழுது அதற்கும் வழியில்லையென்றால்,

சரிதான்.

தன் நிலைக்கு அனைத்தையும் பொறுத்துக் கொண்டு தான் ஆக வேண்டும்.

இன்னும் சில நாட்கள் மட்டும் எப்படியோ பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து விட்டால் பிறகு சம்பளம் வந்துவிடும்.

அதற்கு மேல் தொடர்ந்து இந்தப் பணப் பிரச்சனை வராதிருக்க, செலவுகளை இன்னும் குறைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

கொஞ்சம் சாதம் மட்டும் வைத்து மோர் ஊறுகாயுடன் சாப்பிட்டாவது தாயின் மருந்து செலவுகளுக்கான பணத்தைத் தனியாக எடுத்து வைத்து விடத் தான் வேண்டும்.

வீடு வந்து சேர்ந்திருந்த தன்யா, அதற்குப் பிறகு தான் அதை உணரவே செய்தாள்.

ஏதேதோ எண்ண ஓட்டங்களின் ஆக்கிரமிப்பில், எப்படி வீடு வந்து சேர்ந்தாளென்பது அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்.

வந்ததும் வழக்கம் போல சென்று கை கால் முகம் சுத்தம் செய்து கொண்டு வந்தாள்.

அதற்குள் அவளைத் தேடி வந்திருந்தாள் பொன்னம்மா.

''வா பொன்னம்மா, அம்மா தூங்கறாங்களா?''

''இல்லமா.''

''ஏன்?''

''காலைலிருந்து ஒரு நிமிஷங் கூட அவங்க கண் மூடவே இல்ல, வலி ரொம்ப அதிகமாயிருக்கும் போலம்மா, ரொம்பவும் முடியாம முனகிட்டே இருக்காங்க.''

..............

''மருந்தெல்லாம் சுத்தமாத் தீந்துட்டது. இப்ப வாங்கிட்டு வந்துட்டிங்க தானம்மா?''

''இல்ல பொன்னம்மா, அதெல்லாம் வாங்கறதுக்கு இன்னும் ஒரு வாரமாகும்.''

''ஐயோ அம்மா... இப்பவே இப்பிடித் துடிக்கறாங்களே இன்னும் ஒரு வாரம் எப்படி...''

''எப்படியாவது வாங்கிடுங்கமா...''

''சரிதான் பொன்னம்மா, இனி நீ கிளம்பிக்கோ வழக்கம் போல காலைல வந்துடு.''

''மருந்து சீட்டக் குடுங்கம்மா, நான் வாங்கிட்டு வர்றேன்...''

''வேண்டாம் பொன்னம்மா நானே வாங்கிடறேன். நீ கிளம்பு நேரமாகுதில்லையா?''

தன்யாவின் வார்த்தைகளில் வேறு வழியில்லாமல் முக்கியமாக மனமே இல்லாமல் கிளம்பினாள் பொன்னம்மா.

அவள் வெளியேறியதும் வெளிக்கதவைத் தாளிட்டு விட்டு தாயை நாடி வந்தாள் தன்யா.

வலி தாங்க முடியாமல் அவர் படுக்கையில் புரண்டு கொண்டிருப்பது தெரிய, செய்வதறியாது அப்படியே நின்று விட்டிருந்தாள்.



தாயுடைய வலியின் வேதனையைக் கூடக் குறைக்க முடியாத கையால் ஆகாதவளாகி விட்டோமே என்ற எண்ணம் தோன்றியதில், அதுவரை அடக்கி வைத்திருந்ததற்கெல்லாம் சேர்த்து ஓவென்று வந்திருந்தது.

ஆனாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு ''அம்மா'' என்று அழைத்தாள்.

எப்பொழுதும் சற்றேனும் கண்ணைத் திறந்து பார்க்கும் தாய் அன்று அதுகூட இல்லாமல் புழுவாய்த் துடித்துக் கொண்டிருக்க மீண்டும் சில முறையும் அழைத்தாள்.

அப்பொழுதும் அது தாயின் காதுகளை எட்டியிருக்காதது தெரிந்தது.

ஏனோ அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் போயிருக்க வெளியே வந்திருந்தாள்.

எவ்வளவு ஆனந்தமாக இருந்த அழகான குடும்பம்,

யார் கண் பட்டதோ, இப்படியொரு நிலை வந்து விட்டிருக்கிறதே.

வந்து விட்டிருப்பது மட்டுமா, எதையும் செய்ய முடியாதவளாய் கையைக் கட்டி சும்மா பார்த்துக் கொண்டு நின்றாக வேண்டிய நிலையல்லவா வந்து விட்டிருக்கிறது.

தான் அறியவே, தன்னைப் பெற்றவர்கள் எத்தனையெத்தனை பேருக்கு எப்படியெல்லாம் உதவியிருப்பார்கள்.

அப்படிப்பட்டவருக்கா இன்று இந்த நிலை வர வேண்டும்.

இதையெல்லாம் பார்க்க என்னை ஏன் இன்னும் உயிருடன் வைத்துக் கொண்டிருக்கிறாய் கடவுளே.

என்னையும் அம்மாவையும் இப்படித் தவிக்க விட்டு நீங்கள் மட்டும் நிம்மதியாகப் போய்ச் சேர்ந்து விட்டீர்களே அப்பா.

எங்களையும் உங்களுடனே அழைத்துப் போயிருக்கக் கூடாதா.

என்னால் ஒன்றும் முடியவில்லையே அப்பா...

சரியாக அதே நேரம் காலிங் பெல் ஒலிக்க, இதோ வெளியேறத் தயார் என்றிருந்த கண்ணீர் கொஞ்சம் மட்டுப்பட்டது.

மேலும் சில வினாடிகள் எடுத்துத் தன்னை சமாளித்துக் கொண்டவள், அதற்குப் பிறகே சென்று கதவைத் திறந்தாள்.

திறந்து பார்த்தவளுக்கு கேட்டைத் திறந்து உள்ளே வந்து கொண்டிருந்த ரகுநந்தன் கண்களில் பட்டான்.

இப்பொழுது முழுமையாக நடப்பிற்கு வந்திருந்த தன்யா ''வாங்க'' என்று வரவேற்றாள்.

அடுத்த சில வினாடிகளில் வீட்டிற்குள்ளேயே வந்திருந்த ரகுநந்தன், அவளுடைய முகத்தை ஏறிட்டான்.

''உன் சம்பளம்.''

ரகுநந்தன் ஒரு கவரை எடுத்துக் கொடுக்க, எதுவும் பேசாமல் பார்த்தாள் தன்யா.

''வாங்கிக்கோ தன்யா.''

..................

''வேண்டாம், சம்பள நாளன்னைக்கே வாங்கிக்கறேன்.''

''பரவாயில்ல, இப்பவே வாங்கிக்கோ.''

...............

''புடி தன்யா.''

''பரவாயில்ல ஸார். என் பிரச்சன உங்களுக்கு அவசியமில்லாதது. அதோட என்ன மாதிரி இன்னும் எத்தன பேர்...''



''போதும் தன்யா, உன் சம்பளம் தான் வாங்கிக்கோ.''

''இல்ல வேண்டாம், இப்படியெல்லாம் பாவ புண்ணியம் பாத்துட்டிருந்தா அப்புறம் நாளைக்கு உங்களுக்கு...''

''வேண்டாம்மா, ஏற்கனவே படாதபாடு பட்டுட்டிருக்கேன் இனியும் கொல்லாத.''

''தயவு செஞ்சு இந்த விஷயத்துல என்னைக் கம்பல் பண்ணாதீங்க.''

''புரிஞ்சுக்கோ தன்யா.''

''ஏற்கனவே ரொம்பப் புரிஞ்சுக்கிட்டேன் ரகு. இதுக்கு மேல எப்படி...''

''அப்படியெல்லாம் பேசினது தப்புதாம்மா, மன்னிச்சுடு.''

ரகுநந்தனின் வார்த்தைகள் தன்னை ஏதோ செய்திருக்க, ''பரவாயில்ல விடுங்க'' என்றாள்.

''அப்ப மன்னிச்சுட்டியா?''

''பெரிய வார்த்தையெல்லாம் எதுக்கு ஸார்?''

''உத. அந்த ஸாங்கற வார்த்ததான் எனக்கு அவ்வளவு கோபத்த வர வெச்சிருந்தது. அப்படியிருக்க திரும்பவும் ஸாரா?''

''சரி வேண்டாம் விடு...''

அதற்குள் ''இந்தாம்மா'' என்று சம்பளப் பணக் கவரை தன்யாவின் கைகளில் வைத்திருந்த ரகுநந்தன் ''எதுக்கு அவ்வளவு அவசரமாகக் கேட்ட?'' என்றான்.

ரகுநந்தனின் கேள்வியில் மீண்டும் நடப்பிற்கு வந்தவளாய் ''எனக்கொரு உதவி செய்ய முடியுமா ரகு?'' என்று கேட்டாள்.

''ப்ரிஸ்கிரிப்ஷன் குடுக்கறேன், அம்மாவுக்கு மருந்து வாங்கிட்டு வர்றீங்களா?''

''சீக்கிரம் எடுத்துட்டு வா, போன வேகத்துல வந்துட்றேன்.''

''உங்களுக்கு சிர...''

''மறுபடியும் உத கேக்குதா? உனக்காக இதக் கூடச் செய்ய மாட்டேன்னா அப்ப இன்னும் நீ நினைச்சுட்டிருக்க?'' என்றவன் ''சீக்கிரம் ப்ரிஸ்கிரிப்ஷன் எடுத்துட்டு வா'' என்றான்.

சில வினாடிகளில் தன்யா கொண்டு வந்து கொடுக்க, அடுத்த பதினைந்து நிமிடங்களில் மருந்துகளுடன் வீடு திரும்பியிருந்தான் ரகுநந்தன்.

''உக்காருங்க ரகு, அம்மாவுக்குக் குடுத்து சாப்புட வெச்சுட்டு வந்துட்றேன்'' என்று விட்டு மருந்து மாத்திரைகளுடன் தாயின் அறையை நாடி வந்தாள்.

வந்தவள் தாய் நன்கு உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

சீரான மூச்சின் ஒலி மனதை லேசாக்கியிருக்க, இது போலத் தாய் நிம்மதியாக உறங்கி எவ்வளவு நாட்களாயிற்று என்று மனம் உருகி விட்டிருந்தது.

போன வேகத்தில் திரும்பி வந்தவளைப் புரியாமப் பார்த்தான் ரகுநந்தன்.

''என்னமா?''

''அம்மா நல்லாத் தூங்கிட்டிருக்காங்க ரகு, அதான் எழுப்ப வேண்டாம்னு வந்துட்டேன்.''



''என்ன சாப்புட்றீங்க?''

''புரியல.''

''காபி, டீ...''

''இருந்து டிபனே சாப்டுட்டுப் போலாம்னு பாத்தா நீ டீ, காபின்னு இப்பவே அனுப்பப் பாக்கறியா?''

''அச்சச்சோ அப்பிடியெல்லாமில்ல ரகு நீங்க செஞ்சிருக்கற உதவிக்கு...''

''என்ன மன்னிச்சுடுமா.''

''ஏன் அதுக்குள்ள என்னாச்சு?''

''என்னக் கோபக்காரன்னு மத்தவங்க சொல்லக் கேக்கும்போது எரிச்சல் தான் வரும், ஆனா அத நானே இன்னைக்கு நேர்ல உணர முடிஞ்சப்பதான் புரிஞ்சுக்க முடிஞ்சது.''

..................

''எவ்வளவு முக்கியமான செலவுக்காக நீ பணம் கேட்டிருக்க, அதுவும் உன் சம்பளத்த தான் ஆனா எதையே மனசுல வெச்சுட்டு உன்ன நான் என்னவெல்லாம் சொல்லிட்டேன்.''

''அது பரவாயில்ல விடுங்க'' என்றவளுக்கு ரகுநந்தன் மனதார வருந்துவது புரிந்தது.

தன்னால் எத்தனை பேருக்குத் தான் சிரமம் என்றிருந்தது.

''நான் உன் சம்பளத்தக் குடுக்க முடியாதுன்னு சொன்னப்ப உனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்திருக்குமில்லையா?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல...''

''என்னமா?''

"அம்மா துடிச்சதப் பாக்கும்போது தான் கஷ்டமா இருந்தது ரகு" என்றவளின் கண்கள் இப்பொழுது கலங்கி விட்டிருக்க, உண்மையிலேயே ஒரு மாதிரியாகி விட்டிருந்தது ரகுநந்தனுக்கு.

"என்ன மன்னிப்பியா தன்யா..." என்று அவளை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்திருந்தவன், பிறகு என்ன தோன்றியதோ "நான் கிளம்பறேன்" என்று விட்டு அதற்கு மேல் ஒரு நிமிடம் கூட இருக்காமல் கிளம்பி விட்டிருந்தான்.

அப்படித்தான் இன்னும் சிறிது நேரம் இருந்து பேசி விட்டுச் சென்றிருந்தால் என்னவாம் என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மனதிற்கு சற்று ஆறுதலாகவாவது இருந்திருக்குமே என்றும்,

ரகுநந்தனை ஒரு நல்ல நண்பனாக ஏற்றுக் கொள்ள தன்யாவின் மனம் தயாராக இருந்தது.

ஆனால் அதற்கு மேல் ரகுநந்தன் எதிர்பார்ப்பதையெல்லாம் அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

அப்படித்தான் என்றால் பிறகு ஏன் அவன் கிளம்பிச் சென்றதும் மனம் இவ்வளவு வெறுமையாக உணர்கிறது

மனம் கேள்வி கேட்க, ஏன் பிறகு தாய் இருக்கும் நிலைக்கு வேறு எப்படி இருக்க முடியுமாம் என்று தனக்குத்தானே நினைத்துக் கொண்டாள்.

அந்த எண்ணம் வந்ததுமே, தாய் எப்பொழுது விழித்து மீண்டும் வலியில் துடிப்பாரோ என்று பயமாகி விட்டிருந்தது.



தொடர்ந்து அதே போக்கில் எண்ணத் தொடங்கியிருந்தவளுக்கு இன்னதென்று சொல்ல முடியாத வண்ணம் மனம் பாரமாக விட்டிருந்ததென்று தான் சொல்ல வேண்டும்.

ஆனால் அதையே நினைத்துக் கொண்டிருக்க வழியில்லாமல் மாலை டிபன் வேலையைப் பார்க்க எழுந்து சென்றாள்.

தாய் விழிப்பதற்கு முன்னரே தயார் செய்து விட்டால் இரவு உணவிற்குப் பிறகே மாத்திரைகளைக் கொடுத்து விடலாமென்று வேலைகளைப் பார்க்கத் தொடங்கினாள்.

## 11

"குட்மார்னிங் ஸார்."

"வா தன்யா, குட்மார்னிங்."

"ஸாரி ஸார்... ஒரு பைவ் மினிட்ஸ் லேட்டாயிடுச்சு."

"பரவாயில்லமா, அம்மா நைட் மருந்து எடுத்துட்டாங்களா?"

"ம், நைட் பத்து மணிக்கு தான் தூக்கம் கலைஞ்சு எழுந்தாங்க. டிபனுக்கப்புறம் மாத்திர குடுத்தேன்."

"அதுக்கப்புறம் திரும்பவும் தூங்கினாங்களா?"

"இல்ல ஸார் வலில புரண்டுட்டே இருந்தாங்க. அப்ப அவங்களையே அறியாம தூங்கவும் செஞ்சாங்க."

"நீ?"

"நான் வழக்கம் போல அம்மா ரூம்ல இருக்கற சோபாலையே படுத்துட்டேன்."

''தூங்கிலியா?''

''அப்பப்பத் தூங்கறதும், முழிக்கறதுமா அம்மாவப் பாத்துட்டே இருந்தேன்.''

தன்யா சொல்லச் சொல்ல, நெஞ்சு உருகி விட்டிருந்தது ரகுநந்தனுக்கு.

அப்படியே அவளைத் தனது மார்போடு அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டும் போல மனம் துடித்தது.

இந்த சிறு வயதில் எவ்வளவு பெரிய துன்பம்.

அதுவும் தனியாளாக முக்கியமாக ஒரு பெண்ணாக.

அந்த அளவிற்கு உடல் நலமில்லாதவரை இரவெல்லாம் கண் விழித்து, அதுவும் ஒற்றையாகப் பார்த்துக் கொள்வதென்றால் சாதாரணமான விஷயமா.

எவ்வளவு வசதியாகப் பிறந்து, வளர்ந்த பெண்.

''என்ன ஸா... ரகு?''

''பர்மிஷன் வேணும்னாக் கூட எடுத்துக்கோ தன்யா, தினமுமே.''

''ஐயய்யோ, வேண்டான்டா சாமி...''

''ஏன்... என்னமா?''

''என்னு கேட்டா என்னப்பா சொல்றது. நீ என்ன வேணும்னாலும் சொல்லலாம். ஆனா என் பாஸ் ரொம்பக் கோபக்காரராக்கும். டைமானா என்னையே அறியாம ஹேண்ட்பேக்க எடுத்துத் தோள்ல மாட்டிட்டுக் கிளம்பிடுவேனாக்கும்...''

தன்யா அந்த அளவிற்கு விளையாட்டாகப் பேசியது பிடித்திருந்தது ரகுநந்தனுக்கு.

அவளை ஒட்டியே தானும் பேசினான்.



புன்னகையுடன் தான்.

''அப்ப ஏன் மேடம் இன்னைக்கு லேட்டாம்?''

''அது...''

''ம், என்னமா?''

''ஒரு பஸ்க்காக வெயிட் பண்ணிட்டிருந்ததால்...''

''புரியல.''

''ஒண்ணுமில்ல ரகு.''

''ம்கூம், சொல்லாம விட மாட்டேனாக்கும்.''

''அது... டிக்கட் சார்ஜா குறைவா இருக்கற பஸ்க்காக வெயிட் பண்ணிட்டிருந்ததுல அஞ்சு நிமிஷம் லேட்டாயிடுச்சு.''

''ஏன்?''

..............

''ஏன் அந்த பஸ்சுக்காக வெயிட் பண்ணி வந்த?''

உண்மையிலேயே புரியவில்லையா, அல்லது புரிந்தும் புரியாதது போலக் கேட்கிறானா என்று தன்யாவிற்குப் புரிந்திருக்கவில்லை.

''இல்ல... அம்மாவுக்கு மருந்து செலவு மாசா மாசம் அதிகமாயிட்டே போகுது, செலவுகளைக் குறைச்சா தான், சமாளிக்க முடியுங்கற நிலமை அதான்...''

''இந்த மாதிரி வேறென்ன முயற்சில எல்லாம் இறங்கியிருக்க?''

''அதெல்...''

''ம்கூம், சொல்லாம விட மாட்டேன்.''

''இதுவரைக்கும் இல்ல. ஆனா இனிமேல் தான் செய்யத் தொடங்கணும்.''

''சரிதான் என்ன செய்யலாம்னு இருக்க?''

''ஃப்ரூட்ஸ் வெஜிடபிள்ஸ் வாங்கறதப் பாதியா குறைச்சுக்கணும்.''

''ம்.''

''டி.வி. கனெக்ஷனைக் கட் பண்ணனும், பேப்பரையும் அவ்வளவுதான்.''

ஆனால் இதெல்லாம் முக்கியமான செலவுகளாயிற்றே இவற்றில் கை வைத்தால் எப்படி.

''இந்த மாதத்துலிருந்து உனக்கு சம்பளத்த உயர்த்தறது நான் வந்ததுமே முடிவு பண்ணிட்டேன்.''

ரகுநந்தன் நினைப்பது போலத்தான் நடந்தது.

சந்தோஷப்படுவதற்கு பதிலாக யோசனையுடன் பார்த்தாள் தன்யா.

''என்னமா?''

'ஏற்கனவே நான் நாலு பேரோட சம்பளத்த வாங்கிட்டிருக்கேன்' என்று தொண்டை வரை வந்திருந்த வார்த்தைகள் அதற்கு மேல் வரத் தயங்கின.

அதைச் சொன்னால் என்றோ சொன்னதை இன்னும் அப்படியே நினைத்துக் கொண்டிருக்கிறாளே என்று அவனுடைய மனம் வேதனைப்படுமே என்று பேசாமல் இருந்து விட்டிருந்தாள்.

தன்யா சொல்லா விட்டாலும் அதை ரகுநந்தனால் புரிந்து கொள்ள முடிந்தது.

இதே போன்ற சில நிமிடத் தாமதத்திற்காகத் தானே தான் அப்படிச் சொன்னோம் என்பதும்,

அதைக் கேட்க நேர்ந்த தன்யாவின் உள்ளம் எவ்வளவு வேதனைப் பட்டிருக்க வேண்டும்.



நாலு பேரென்ன, நாற்பது பேர் சம்பளத்தைக் கூட இவளுக்காகக் கொடுக்கலாமே.

அவளுடைய உழைப்பும், திறமையும் அப்படிப் பட்டதாயிற்றே.

அது மட்டுமா.

தனது உள்ளம் கவர்ந்தவளும் கூட அல்லவா.

டெய்லி ரிப்போர்ட்டை ரகுநந்தனின் டேபிளில் அவனிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வைத்தாள் தன்யா.

''என்னமா, எவ்வளவுன்னு கேக்க மாட்டியா?''

''எது, ஓ சம்பளத்தப் பத்திக் கேக்கறீங்களா?''

................

''எதுக்கு ரகு அதெல்லாம், ஏதாவது கஷ்டம்னா அப்ப நீங்க எனக்கு உதவி பண்ணாமப் போயிடுவீங்களா?''

''நான் முதல் நாள் சொன்னத நீ இன்னும் மறக்கல இல்ல?''

''அச்சச்சோ என்ன ரகு நீங்க. அப்ப உங்க இடத்துல நான் இருந்திருந்தாலும் அதத் தான் கேட்டிருப்பேன்...''

''நல்லாப் பேசறமா, சரிதான் உங்கிட்ட நான் எப்பவுமே குற்ற மனப்பான்மையோட தான் இருந்தாகணும். அந்த அளவுக்கு நானும் உன்ன வருத்தியிருக்கேனே.''

ரகுநந்தனின் அந்த வார்த்தைகளில் அவளையறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருந்தன தன்யாவிற்கு.

உதட்டைக் கடித்துத் தன்னை சமாளித்துக் கொண்டாள்.

''தன்யா...''

''ப்ளீஸ் ரகு கொல்லாதீங்க, யாராவது ஒரு சின்ன உதவி பண்ணிட்டாலே அவங்க செஞ்ச கெட்டதையெல்லாம் மறந்து போயிடணும்னு சொல்வாங்க.''

''அப்படியிருக்கும்போது லோகநாதன் ஸார், நீங்க எனக்கு கொஞ்சமா செஞ்சிருக்கீங்க. இன்னும் செஞ்சுட்டும் இருக்கீங்க. எல்லாத்துக்கும் மேல முன்ன பின்ன அறி முகம் கூடக் கிடையாது. உங்களோட உதவி மட்டும் கிடைக்காமப் போயிருந்தா நாங்க ரெண்டு பேரும் உயி ரோட கூட இருந்...''

''முட்டாள் மாதிரி உளறாத...''

''உண்மையான யதார்த்தத்த சொல்றேன் ரகு நெருப் புன்னு சொல்றதாலயே வாய் வெந்துடாது?''

''ஏதோ ஒண்ணு ரெண்டு வார்த்தை அதுவும் எம்.டி.யா கேட்டாக வேண்டிய கட்டாயத்துல கேட்டதையெல் லாம் தயவு செஞ்சு மறந்துடுங்க. அந்த மாதிரி இன்னும் ஆயிரம் மடங்கு கேட்டாக் கூட எனக்கு வருத்தமோ, கோபமோ வராது.''

''இவ்வளவு சொல்ற. ஆனா என்னப் புரிஞ்சுக்க... என் மனசப் புரிஞ்சுக்க முடியலையாமா?''

''ப்ளீஸ் ரகு. உங்க தகுதிக்கு ஏத்த...''

''போதும், போய் வேலையைப் பாரு.''

............

''தயவு செஞ்சு போயிடு தன்யா.''

ரகுநந்தனின் வேதனையை தன்யாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

கரும்பு தின்னக் கசக்குமா என்ன.

ரகுநந்தன் கிடைக்கத் தான் கொடுத்தல்லவா வைத் திருக்க வேண்டும்.

ஆனால் இப்பொழுது தான் இருக்கும் நிலையில் எப்படி.



வேதனையைத் தவிர வேறு எதுவுமே இப்பொழுது தன்னிடம் மிஞ்சியிருக்கவில்லையே.

தான் கஷ்டப்படுவது போதாதென்று இவனையும் அதற்குள் இழுத்துக் கொள்வதா.

''ஸாரி ரகு'' என்று மெல்லிய குரலில் சொல்லி விட்டுத் தன்னுடைய இடத்திற்கு வந்திருந்தாள்.

ஆனால் அதையெல்லாம் புரிந்து கொள்ளும் மனநிலை யில் அப்பொழுது ரகுநந்தன் இருக்கவில்லை.

ஏன் எதையுமே.

அந்த அளவிற்கு தன்யாவின் மறுப்பை அவனால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

## 12

மேலும் சில நாட்கள் சென்றிருந்தன.

தாயின் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வருவதைப் போல ஒரு எண்ணம் தோன்றி தன்யாவை மேலும் வருந்தச் செய்திருந்தது.

சற்றும் நிம்மதியில்லாமல் தவித்தாள்.

தன்னுடைய வேதனையை தனக்குள்ளேயே வைத்துக் கொண்டு மறுகினாள்.

தன்னிடம் வித்யாசம் தெரிந்திருக்குமோ என்னவோ, கேள்வியுடன் பார்த்த ரகுநந்தனிடம் மேலோட்டமாகத் தனது மனதிற்குத் தோன்றியதைச் சொன்னாள்.

அதற்கு அவன் சொன்ன ஆறுதல் வார்த்தைகள் உண்மையிலேயே அப்போதைக்கு மனதை சற்று நிம்மதியடையச் செய்திருந்தன என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் அதெல்லாம் வீடு வந்து சேரும் வரை தான்.

வீட்டிற்கு வந்ததும் மீண்டும் அவளை பயம் பிடித்துக் கொண்டு விட்டிருந்தது.

''வாங்கமா.''

''என்ன பொன்னம்மா.''

வாசலுக்கே வந்து வரவேற்ற பொன்னம்மாவிடம் பதட்டத்துடன் என்னவென்று கேட்டாள்.

''ஒண்ணுமில்ல...''

''அட என்ன பொன்னம்மா சொல்லு?''

''இல்ல இன்னைக்கெல்லாம் அம்மா ரொம்ப அமைதியாவே தூங்கிட்டிருக்காங்கமா, மதியமே உங்ககிட்டக் கூப்புட்டு சொல்லலாம்னுதான் இருந்தேன். சரிதான் மாத்திர மாத்திக் குடுத்ததுல வலி மறந்து தூங்கறாங்க போலிருக்குன்னு விட்டுட்டேன்.''

''இப்ப அப்படி இல்லேங்கறியா?'' என்று கேட்டுக் கொண்டே தாயைப் பார்க்க விரைந்தாள் தன்யா.

''அப்படிச் சொல்லலமா, எதுக்கும் சந்தேகத்தத் தெளிவு பண்ணிக்கலாமேன்னுதான்...''

தாயின் அருகில் சென்று அமர்ந்த தன்யா அவருடைய முகத்தையே பார்த்தாள்.

பொன்னம்மா சொல்வதைப் போலவே தாயின் முகத்தில் தெரிந்த அந்த அசாத்திய அமைதி அவளை நடுங்கச் செய்திருந்தது.

அம்மா என்று தொட்டு அழைக்க...



மீண்டும், மீண்டும் கூட,

ஆனாலும் அந்த நிலையே தொடர்ந்தது.

கண்களிரண்டும் கலங்கி விட்டிருக்க திரும்பிப் பொன்னம்மாவைப் பார்த்தாள்.

''அம்மா...''

''பயமா இருக்கு பொன்னம்மா'' என்றவளால் அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அப்படியே கதறி விட்டிருந்தாள்.

தன்யாவைப் பார்த்த பொன்னம்மாவும் அழத் தொடங்கி விட்டிருக்க, அவர்கள் மனதிற்குள் எண்ணி அஞ்சியதைப் போலத்தான் நடந்தது.

அன்றைய இரவை தன்யாவின் தாய் தாண்டியிருக்கவில்லை.

அன்று பொன்னம்மாவும் தன் வீட்டிற்குப் போகாமல் அங்கேயே இருந்து விட்டிருக்க, அதை முதலில் பார்த்து உறுதி செய்து கொண்ட பின் தன்யாவிடம் சொன்னதும் அவள் தான்.

அழக் கூடத் தோன்றாமல் அம்மா, அம்மா என்று அரற்றிக் கொண்டே தாயின் மேலேயே சாய்ந்து கொண்டு விட்டிருந்தவளைப் பார்த்த பொன்னம்மா பயத்தில் மேலும் நடுங்கி விட்டிருந்தாள்.

தாய் போய்விட்ட சோகத்தில் இந்தப் பெண்ணுக்கும் ஏதாவது மனம் பேதலித்து விடுமோ.

கடவுளே இப்பொழுது என்ன செய்வது.

சில வினாடிகள் தான்.

அடுத்து தான் என்ன செய்ய வேண்டுமென்பது புரிந்திருக்க எழுந்து சென்றாள்.

ஏதாவது அவசரமென்றால் அழைக்கச் சொல்லி தன்யாவின் முதலாளி கொடுத்த போன் நெம்பர் ஒரு துண்டுச் சீட்டில் அங்கிருந்த டேபிளுக்குள்ளேயே இருப்பது நினைவிற்கு வர சென்று தேடினாள்.

நல்ல வேலையாக அந்தத் துண்டுக் காகிதமும் கிடைத்து விட்டிருக்க, உடனே அந்த எண்ணிற்கு வீட்டு மொபைல் போனிலிருந்து அழைத்தாள்.

நிமிர்ந்து கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

நடு ஜாமம் பன்னிரெண்டு மணியெனக் காட்ட, இந்த நேரத்தில் போனை எடுக்கா விட்டால் என்ன செய்வதென்ற பயத்துடன் தான் அவள் அழைத்ததும்,

ஆனால் அந்த பயத்திற்கு அவசியமில்லாததைப் போல அடுத்த ரிங்கிலேயே இணைப்பு கிடைத்திருந்தது.

தன்யாவின் முதலாளியே பேச விஷயத்தைச் சொன்னாள்.

எதிர்முனையிலிருந்து வந்த பதிலில் ''சரிங்க'' என்று சற்றே நிம்மதியுடன் போனை வைத்திருந்தாள்.

அந்த அளவிற்கு என்ன செய்வதென்று தெரியாமல் பயத்தில் நடுங்கிப் போயிருந்தவள், பத்து நிமிடங்களில் வருகிறேனென்ற ரகுநந்தனின் பதிலில் பயம் நீங்கி அடுத்து செய்ய வேண்டியதைப் பற்றி யோசித்தாள்.

இப்பொழுதும் ''அம்மா, அம்மா'' என்று தன்யா அரற்றிக் கொண்டிருப்பது கேட்க, வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு தனது வீட்டிற்கு அழைத்தாள்.

ஆனால் பலமுறை அழைத்தும் இணைப்பு கிடைக்





அனைவரும் நன்கு உறங்கியிருப்பார்களாய் இருக்கும்.

சரிதான் வேகமாகச் சென்றால் ஐந்து நிமிட நடை சென்று வீட்டிலிருப்பவர்களையெல்லாம் எழுப்பி, முடிந்ததைச் செய்யச் சொல்ல வேண்டும்.

சொன்னது போலவே பத்து நிமிடங்களில் வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நிற்க, வெளியே எட்டிப் பார்த்தாள்.

தன்யாம்மாவின் முதலாளி தான்.

''வாங்கய்யா.''

''தன்யா...''

''உள்ள தான் இருக்காங்க. பாக்கவே என்னவோ மாதிரி எனக்கென்னவோ பயமா இரு...''

''நான் இருக்கேன். பயந்துக்க வேண்டாம்.''

''அப்ப நான் என் வீடு வரைக்கும் போய்ட்டு வந்துட்றேன்யா, இங்க பக்கத்துல தான் இருக்கு.''

''சரிதான், போய்ட்டு வா.''

தொடர்ந்து உள்ளே வந்தவன், தாயின் மேலேயே விழுந்து அரற்றிக் கொண்டிருந்த தன்யாவைத் தொட்டு அழைத்தான்.

''தன்யா...''

''இங்க பாரு தன்யா.''

மேலும் சில முறை அழைத்த பிறகே லேசாகத் தலை நிமிர்ந்து பார்த்தவளை ''என்னமா இங்க பாரு தன்யா'' என்று மீண்டும் சற்று சத்தமாக அழைத்தான்.

அந்த அழைப்பில் மயக்கத்திலிருந்து எழுந்தாற் போல தன்யா தானும் நடப்பிற்கு வந்திருந்தாள்.

''ரகு...''

..........

''ரகு... அம்மா...'' என்று தனது தாயை நோக்கிக் கை நீட்டியவளால் அதற்கு மேல் ஒன்றும் முடிந்திருக்கவில்லை.

ரகுநந்தனின் மார்பிலேயே விழுந்து கதறத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஆதரவாக அணைத்துக் கொண்ட ரகுநந்தனின் கண்களும் கலங்கி விட்டிருந்தன.

பத்து நாட்கள் சென்றிருந்தன.

செலவு, உழைப்பு என இரண்டையும் பொருட் படுத்தாமல் ரகுநந்தன் தானே முன்னின்று அனைத்து ஏற்பாடுகளையும் பொன்னம்மா மற்றும் சில தெரிந்தவர்களின் வார்த்தைகளுக்கிணங்க செய்து முடித்தான்.

பிறரின் கவனத்தை உறுத்தாத வண்ணம் தான்.

சொந்தங்கள் தெரிந்தவர்கள் அறிந்தவர்களென துக்கம் கேட்டு வந்த பெருங்கூட்டத்தை மனதிற்குள் சற்று ஆச்சரியத்துடன் பார்த்தான் ரகுநந்தன்.

இத்தனை பேர் இருந்தும் சிரமப்பட்ட போது உதவ ஒருவர் முன் வரவில்லையே என்ற ஆதங்கத்தை என்ன முயன்றும் அவனால் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

பணம் முக்கியம் தான்.

ஆனால் அதுவே வாழ்க்கையாகி விட முடியுமா என்ன?

''ஐயா.''

பொன்னம்மா அழைக்க திரும்பிப் பார்த்தான் ரகுநந்தன்.

''ம், சொல்லு.''



''ரெண்டு மூணு நாளாவே துக்கம் கேட்டு யாரும் வரலைங்கய்யா... தன்யாம்மாவும் எதுவும் சாப்பிடக் கூட மாட்டேங்கறாங்க. என்னாலயும் வற்புறுத்தி சாப்புட வெக்க...''

''சரிதான், இனிமேலும் தன்யா தொடர்ந்து இங்கிருக்கறது நல்லதில்ல. நான் பாத்துக்கறேன். அப்புறம் நீ இன்னுமொரு பதினஞ்சு நாளைக்கு இந்த வீட்லயே இரு. லேட்டா வர்றவங்களும் இருப்பாங்க.''

''சரிங்கய்யா.''

''தன்யாம்மா எங்க?''

''உள்ள அவங்க ரூம்ல இருக்காங்கய்யா.''

தன்யாவின் தாய் இறந்ததற்குப் பிறகு இப்பொழுது தான் இரண்டாவது முறையாக அவளைப் பார்க்கச் சென்றான் ரகுநந்தன்.

படுக்கையில் திரும்பியவாறு குறுகிப் படுத்துக் கொண்டிருந்தவளைக் கண்டான்.

உடல் பாதியாக மெலிந்து போயிருந்தது தெரிந்தது. படுக்கையில் அவளுக்கு அருகில் சென்று அமர்ந்தவன் ''தன்யா'' என்று மெல்லிய குரலில் அழைத்தான்.

தனது அழைப்பில் எழுந்து அமர்ந்திருந்தவளின் கண்கள் கலங்கியிருப்பது தெரிந்தது.

சில வினாடிகளில் தன்னை சமாளித்துக் கொண்டவள் படுக்கையை விட்டும் இறங்கியிருந்தாள்.

''வாங்க, இப்பதான் வந்தீங்களா?''

மிகவும் மெல்லிய குரலில் கேட்டவளைப் பார்த்த ரகுநந்தன், ''இல்ல நான் நேரத்துலயே வந்துட்டேன். பக்கத்துல நாம வாங்கியிருக்கற இடத்துல ஒரு சின்ன வேல அதான்'' என்றான்.

''காபி சாப்புட்றீங்களா?''

''உக்காரு...''

ரகுநந்தன் சொல்ல கட்டிலின் மறு ஓரத்தில் அமர்ந்திருந்தாள்.

''நீ என்ன சாப்ட?''

''பசிக்கல.''

''பின்ன, நேர நேரத்துக்கு கொஞ்சமாவது சாப்டா தான பசி உணர்வு வரும்.''

..................

''என்ன தன்யா சாப்புட ஏதாவது எடுத்துட்டு வரச் சொல்லட்டுமா?''

''ம்கூம்...''

''ஏன்?''

''வேண்டாம்.''

''என்னமா இது உனக்கும் இனி உடம்புக்கு ஏதாவது வரணுமா?''

''வரட்டுமே, நானெல்லாம் இனி உயிரோட இருந்து என்ன பண்ணப் போறேன்...''

''தன்யா'' என்ற ரகுநந்தனின் குரல் கோபத்தில் சற்று உரத்து ஒலித்தது.

''என்ன பேசறேன்னு யோசிச்சு தான் பேசறியா?''

............

''சொல்லு.''

''நீங்க போய் உங்க வேலையப் பாருங்களேன்.''

............

''தொடர்ந்து என்ன பண்றதுங்கறத நான் பாத்துக்கறேன்...''



''போடா வெளியன்னு சொல்ற அப்படித்தான?''

..............

தன்யாவின் மௌனம் ஆமாம் அப்படித்தான் என்று சொல்லாமல் சொல்வதைப் போலிருக்க, மனதளவில் சற்று ஆடித்தான் போய் விட்டிருந்தான் ரகுநந்தன்.

ஆனாலும் அதை அப்பொழுது வெளிக்காட்டிக் கொள்ள வில்லை.

அதே சமயம் தொடர்ந்து அங்கே அமர்ந்திருக்கவும் முடியாமல் போயிருக்க, எழுந்து வெளியே வந்திருந்தான்.

''ஐயா...''

காரில் ஏறப் போனவன் பொன்னம்மாவின் அழைப்பில் அவளைப் பார்த்தான்.

''என்னங்க...''

''ரொம்ப விரக்தில இருக்காங்க, கொஞ்சம் கொஞ்சமா தான் மாற முடியும். சாப்பிடலேன்னாலும் பரவாயில்ல ஜூஸ், பால், ஹார்லிக்ஸ்னு அப்பப்ப எதையாவது குடுத்துட்டே இரு.''

''சரிங்கய்யா.''

''என்ன உதவி வேணும்னாலும் உடனே கூப்புடு. எங்கயும் போகாத பக்கத்துலிருந்தே பாத்துக்கோ.''

''கொஞ்சம் கொஞ்சமா மாத்த முயற்சி பண்ணு. எனக்கும் போய்ப் பார்க்க என் குடும்பம் இருக்கேங்கற மாதிரி ஜாடையா, மனசப் புண்படுத்திடாத மாதிரி பேசு.''

''எக்காரணத்தக் கொண்டும் நீ பேசற வார்த்தைகள் எதிர்மறை விளைவுகள ஏற்படுத்திடக் கூடாதுங்கறதுல கவனமா இரு.''

சரியென்பதைப் போல பொன்னம்மா தலையை ஆட்ட காரில் ஏறிக் கிளம்பி விட்டிருந்தான் ரகுநந்தன்.

அந்த மாதிரியொரு நிலையை அதற்குமுன் சந்தித்திரா தவன் என்பதால், தொடர்ந்து மேலே என்ன செய்வ தென்று அவனுக்கும் புரிந்திருக்கவில்லை.

சற்றும் நிலை கொள்ளாமல் தவித்தான்.

வேலையிலும் கவனத்தைச் செலுத்த முடிந்திருக்க வில்லை.

இங்கே சுற்றி அங்கே சுற்றி மனம் மீண்டும் மீண்டும் தன்யாவிடமே வந்து நின்றது.

ஒரு சிறு பெண் தன்னை இந்தப் பாடு படுத்துகிறாளே என்ற எண்ணம் அவனுடைய வேதனையை மேலும் அதிகம்தான் செய்திருந்ததே தவிர சற்றும் குறைந்திருக்க வில்லை.

அடுத்து தான் செய்ய வேண்டிய வேலைகளையெல் லாம் மறந்து வீட்டிற்குச் சென்றிருந்தவன், தனது அறை யில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து தீர்த்தான்.

கடைசியில் கால்கள் ஓய்ந்து போக அமர்ந்து யோசித் தான்.

அவனுடைய நெஞ்சுக்குள் என்னென்னவோ ஆசை கள் இருந்தன.

தன்யாவை உயிருக்குயிராக விரும்பிக் கொண்டிருந் தான்.

அவளுக்காக எதைச் செய்யவும் தயாராக இருந்தான்.

ஆனால் அதற்கு முன் அவளை தனியறையில் அமர்ந்து தனக்குள் மறுகிக் கொண்டிருப்பதிலிருந்து வெளியே கொண்டு வர நினைத்தான்.

அதை செயல்படுத்தத் தான் அவன் தன்யாவின் வீட்டிற்குச் சென்றதும்,



ஆனால் அவள் சொன்ன வார்த்தைகள்,

என்ன முயன்றும் போனால் போகிறதென்று கூட அதை மறந்திருக்க அவனால் முடியவில்லை.

நாளுக்கு நாள் தன்னை விட்டு வெகு தூரம் சென்று கொண்டிருக்கிறாளோ,

அவளில்லாத வாழ்க்கையை எப்படித் தன்னால் வாழ முடியும்.

அதே நேரம் அவனுடைய கைப்பேசிக்கு அழைப்பு வர எடுத்துப் பார்த்தான்.

ஒரு முக்கியமான வேலையைச் செய்ய வேண்டியது நினைவிற்கு வர, அதற்கு மேல் வினாடியைக் கூட வீணாக்காமல் எழுந்து கிளம்பிச்சென்று விட்டிருந்தான்.

## 13

“அம்மா.”

பொன்னம்மா அழைக்க நிமிர்ந்து பார்த்தாள் தன்யா.

“சாப்புடுங்கம்மா.”

..............

“இட்லியும், சாம்பாரும் ரொம்ப நல்.....”

“வேண்டாம்.”

“என்னமா இப்படி சொல்றீங்க?”

“தயவு செஞ்சு என்ன விட்டுடு பொன்னம்மா வேணும்னா நானே கேப்பேன். நீ போய் சாப்டுட்டு வேலையப் பாரு போ.”

"இப்ப என் வேலையே உங்களப் பாத்துக்கறது தானம்மா."

..............

"நீங்க சாப்டதுக்கப்புறம், நான் சாப்புட்டுக்கறேன் விடுங்க."

"முட்டாள்த்தனமா உளறாத."

"இல்லமா, இருக்கறதச் சொல்றேன்."

"ஏன் பொன்னம்மா இப்படியெல்லாம் பேசிட்டிருக்க, நீயும் என்ன நிம்மதியா விடக் கூடாதுங்கறதுல உறுதியா இருக்கியா?"

"அப்ப ரெண்டு இட்லியாவது சாப்புடுங்கமா, அதுக்கு மேல தொல்லை பண்ணவே மாட்டேன் பேசாம போயிடுவேன்."

"ஐயோ என்னால முடியலையே, எனக்கு எதுவுமே பிடிக்கலை..."

"நீங்க இப்படிப் பண்றத உங்க அம்மா இருந்தா ஒத்துக்குவாங்களாம்மா?"

"அதுதான் கடவுள் கொடுத்து வைக்கலயே, எல்லாமே முடிஞ்சு போச்சே."

"அதெப்படி எல்லாமே முடிஞ்சதுன்னு சொல்ல முடியும், உங்களுக்கு இனிமேல் தானம்மா வாழ்க்கை..."

"குப்ப, தயவு செஞ்சு என்னக் கொல்லாத பொன்னம்மா. போ போயிடு..."

கண்களை மூடிக் கொண்டு கத்தினாள் தன்யா.

"சரிதான்மா, நீங்க இப்படி நடந்துக்கறதால இன்னும் எத்தன பேரை வதைச்சுட்டிருக்கீங்கன்னு உங்களுக்கெப்படி தெரியும் சொ..."



அப்படிச் சொன்னவளை நிமிர்ந்து பார்த்தாள் தன்யா.

என்ன சொல்கிறாள் இவள்.

தான் யாரை, எப்பொழுது...

"உங்கள நீங்க கவனிச்சுக்கிட்டிங்கன்னா நானும் கொஞ்சம் அப்பப்ப என் வீட்டயும் போய் ஒரு கண் பாத்துட்டு வருவேன்.

பழையபடி தொடர்ந்து வேலைக்குப் போகத் தொடங்கிட்டிங்கன்னா உங்களுக்கும் ஒரு மாறுதல் கிடைக்கும்."

கடவுளே,

தன்னால் அனைவருக்குமே துன்பம் தானோ.

அதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத முட்டாளாய் அல்லவா இருந்து கொண்டிருக்கிறோம்.

"இப்படியே கவலைப்பட்டுட்டே உக்காந்துட்டிருந்தீங்கன்னா இன்னும் எத்தனை நாளானாலும் மாறுதல் கிடைக்காதுமா?"

"நிலம இன்னும் மோசம் தான் ஆகும்."

"நீ கிளம்பிக்கோ பொன்னம்மா, தோணும் போது அப்பப்ப வந்துட்டு..."

"ஐயோ அம்மா, நான் எனக்காக சொல்லலமா. நீங்க இந்த துக்கத்துலிருந்து வெளிய வரணுங்கறதுக்காகத் தாம்மா பேசிட்டிருக்கேன்."

என்ன சொல்கிறாள் இவள்.

அது இந்தப் பிறவியில் நடக்கக் கூடியதா என்ன.

அனைத்தையுமே இழந்து விட்ட தனக்கும், தனது துக்கத்திற்கும் தான் இனிமேல் ஏது விடுதலை.

ஆனால் அதை எப்படி இந்தப் பொன்னம்மாவிற்குச் சொல்லிப் புரிய வைப்பது.

''அந்த ரகுநந்தன் தம்பியும் தினம் நாலு தடவை யாவது போன்ல கூப்புட்டுப் பேசறார்மா.''

''அப்படிப் பேசறப்பவெல்லாம் உங்களப் பத்தி தான் விசாரிக்கிறார்.''

சரிதான், தன்னால் அவனும் பாவம் சிரமப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறான்.

''அந்தத் தம்பி மட்டும் உதவலேன்னா என்னால எதையும் நினைச்சுக் கூடப் பாக்க முடியலைங்கம்மா.''

''ஏதோ கெட்ட காலம், எதிரே பாக்காததெல்லாம் நடந்துடுச்சு.''

''வாழும் போதும் ரொம்ப நல்லா வாழ்ந்தவங்க.''

''அந்த அந்தஸ்த்து குறையாம ஊர் சொந்தங்களுக்கு முன்னாடி எல்லாமே நல்லபடியா நடந்ததுமா.''

''நம்ம கஷ்ட நஷ்டங்கள் நம்மளோட. ஆனா வெளியில இருந்து பாக்கறவங்களுக்கு நிச்சயம் பரவாயில்லைன்னு தோணியிருக்கும்.''

''என் அப்பிடித்தான்னு துக்கம் கேக்க வந்தவங்கெல் லாம் பேசிட்டதுலிருந்தே தெரிஞ்சதே.''

''எப்படியும் இப்படியானா நம்மகிட்ட தான வரப் போறாங்கன்னு ஏளனமா நினைச்சுட்டிருந்திருப்பாங்களா இருக்கும்.''

''ஆனா அந்த ரகுநந்தன் தம்பி அந்த மாதிரி ஆளுங்க முகத்துலெல்லாம் கரியப் பூசிட்டார்மா.''

''அவரு நமக்கென்ன சொந்தமா இல்ல பழக்கமாம்மா.''

''தர்மம் தலை காக்கும்னு சொல்லுவாங்க. உங்க விஷ யத்துல அது சரியா தான் இருக்கு.''



''அதக்கூட அவர் தான் எல்லாப் பொறுப்புகளையும் ஏத்து செஞ்சாருங்கறது கூட யாருக்கும் தெரியாதுமா.''

''காட்டிக்கல.''

''எங்களையும் யார்கிட்டயும் சொல்ல வேண்டாம்னு சொல்லிட்டார்.''

''உங்கள யாராவது தப்பா ஒரு வார்த்தை சொல்லிடு வாங்களோன்ற பயம் தாம்மா, வேறென்ன.''

''இந்த அளவுக்குக் கூட நல்லவங்க இருக்காங்கம்மா.''

''இதையெல்லாம் ஏன் சொல்றேன்னா, நடந்ததெல் லாம் உங்களுக்கும் தெரியணும். அதே சமயம் எல் லாமே உங்க அந்தஸ்துக்குத் தகுந்தாப்புல நல்லபடியா நடந்ததுங்கறத நீங்க தெரிஞ்சுக்கணும்னுதான்.''

''போதும் பொன்னம்மா, அம்மாவே இல்லேன்னு ஆயிட்டாங்க. அதுக்கப்புறம் எது எப்படி நடந்தா என்...''

''அப்படிச் சொல்லாதீங்கம்மா...''

''ஐயோ கொஞ்சம் என்னைத் தனியா விடேன் ப்ளீஸ்...''

''சரிதான்மா அதுக்கு முதல்ல சாப்பிடுங்களேன்.''

''வேண்டாம்.''

...............

''மதியம் சாப்பிட்டுக்கறேன்.''

''அப்ப இப்பக் குடிக்கறதுக்கு என்...''

''ஒரு மண்ணும் வேண்டாம்.''

சில வினாடிகள் நின்று பார்த்து விட்டு வெளியே வந் திருந்தாள் பொன்னம்மா.

மதியம் சாப்பிடுகிறேன் என்கிறவளை மேலும் தான் ஏதாவது பேசி ஏன் உள்ளதையும் கெடுத்துக் கொள்ள வேண்டும் என்றிருந்தது.

பொன்னம்மா மதிய உணவு வேலைகளில் கவனத்தை செலுத்தத் தொடங்கி விட்டிருக்க, அவள் சொன்னதையெல்லாம் யோசித்துப் பார்த்தாள் தன்யா.

உண்மையிலேயே ரகுநந்தன் செய்தது மிகப் பெரிய உதவிதானோ,

ஒரு வாரம் தொடர்ந்து மூன்று வேளைகளும் வருகிறவர்கள் போகிறவர்கள் அனைவருக்குமே சாப்பாடென்றால்,

அது மட்டுமா அதற்கு மேலும் எத்தனை எத்தனை செலவுகள்.

வெறும் பணத்தோடு போகவில்லையே.

ஒவ்வொன்றைப் பற்றியும் யோசித்துப் பார்த்துப் பார்த்துச் செய்து...

அப்படிப்பட்டவனைத் தான் என்ன வார்த்தை சொல்லி விட்டிருக்கிறோம்.

அதைக் கேட்க நேர்ந்த ரகுநந்தனின் உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும்.

உதவி செய்தவனுக்கு... அதுவும் எப்படிப்பட்ட உதவி...

அப்படிச் செய்தவனுக்கு இதுதான் தான் செய்யும் கைமாறா.

தனக்குத் தெரிந்ததை மட்டுமே பெரிதாக எண்ணிக் கொண்டு...

நன்கு யோசித்துப் பார்த்தால் தானல்லவா முட்டாள்த்தனமாக நடந்து கொண்டிருக்கிறோம்.

அதுவும் எந்த...

''அம்மா.''

பொன்னம்மா வர நிமிர்ந்து பார்த்தாள்.



''யாரோ வர்றாங்கம்மா எனக்கு தான் யாருன்னு தெரி...''

''தன்யாம்மா.''

குரலிலேயே வந்தது லோகநாதன் ஸாரென்பது தெரிந்து விட்டிருந்தது தன்யாவிற்கு.

''சரி பொன்னம்மா நீ போய் வேலையப் பாரு'' என்றவள் உள்ளே வந்த லோகநாதன் ஸாரை வரவேற்றாள்.

''வாங்க ஸார்.''

''தன்யாம்மா'' என்றவரின் கண்கள் கலங்கி விட்டிருந்ததில் இப்பொழுது முழுமையாக உடைந்து போயிருந்தாள் தன்யா.

''அம்மா... அம்மா என்ன மட்டும் தனியா விட்டுட்டுப் போய்ட்டாங்க ஸார்'' என்று கைகளில் முகத்தை மூடிக் கொண்டு கதறி விட்டிருந்தாள்.

அதைப் பார்த்த லோகநாதனுக்கும் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாது போயிற்று.

விழியோரம் துளிர்த்த நீரை துடைத்தெறிந்து விட்டு தன்யாவின் தலையை வருடிக் கொடுத்தார்.

''வேண்டாம் கண்ணம்மா'' என்று குரல் தழுதழுக்கச் சொன்னார்.

அவருடைய வார்த்தைகள் மேலும் ஆதங்கத்தை அதிகம் தான் செய்திருந்தனவே தவிர துளியும் குறைத்திருக்க வில்லை.

மேலும் மேலும் கதறித் தீர்த்தாள்.

''போதுண்டாம்மா'' என்றவரின் குரலில் தான் மீண்டும் நடப்பிற்கு வந்திருந்தாள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு ''உக்காருங்க ஸார்'' என்று அங்கிருந்த இருக்கையைக் காட்டிச் சொன்னாள்.

''நீயும் உக்காருடாம்மா'' என்று சொல்லிக் கொண்டே தன்யா காட்டிய சேரில் அமர்ந்தார் லோகநாதன்.

''ஊர்ல இருந்து எப்ப வந்தீங்க ஸார்?''

''இப்பதாம்மா நேரா இங்க தான் வர்றேன். திடீர்னு காசி ராமேஸ்வரம்னு டூர் கிளம்பிட்டேம்மா. திரும்பின தக்கப்புறம் தான் விஷயமே தெரிஞ்சது. உடனே கிளம்பி வர்றேன்.''

தன் மேல் தான் எவ்வளவு அக்கறை.

''எப்படிடாம்மா, கடைசில ரொம்ப முடியாமப் போயிடுச்சா?''

லோகநாதன் கேட்க, நடந்ததைச் சொன்னாள்.

இடையிடையே கலங்கிக் கொண்டே இருந்த கண்களைக் கையிலிருந்த கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள்.

''சரிதான், பாவம் இன்னும் எத்தன நாளைக்கு நம்மால இந்த சின்னப் பொண்ணும் சிரமப்படணும்னு புண்ணிய வதி போய் சேந்துட்டாங்க போலிருக்கு...''

''என்னத் தனியா விட்டுட்டு அவங்க மட்டும்...''

''அப்படி சொல்லாதமா நாங்கெல்லாரும் இருக்கும் போது நீயெப்படி தனியாளாக முடியும்...''

''ஆனாலும்...''

''என்ன ஆனாலும் முதல்ல நீ இங்கிருந்து கிளம்பற வேலையப் பாரு.''

அப்படிச் சொன்னவரை அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்தாள் தன்யா.

''என்னமா பாக்கற. இந்த வீட்ல அதுவும் தனியாளா உக்காந்து யோசிச்சுட்டே இருந்தா நாளுக்கு நாள்



இன்னும் கீழ்வரம் தான் போக முடியுமே தவிர வேறெதுவும் நடக்காது.''

............

''அங்க நம்ம கடைக்குப் பக்கத்துல இருக்கற கெஸ்ட் ஹவுஸ்ல வந்து தங்கிக்கோ, பக்கத்துலயே தான் நம்ம வீடும். எந்நேரமும் செக்யூரிட்டி, ஆள் நடமாட்டம்னு பாதுகாப்போட, நடந்தத கொஞ்சம் கொஞ்சமா மறக்கவும் வாய்ப்பிருக்கு. கடைசிக்கு நடந்ததையே நனைச்சு மறுகிட்டிருக்க வேண்டாம் பாரு.''

''தொடர்ந்து வேலைக்கும் வரத் தொடங்கிட்டா பொழுதும் போயிடும். நடந்தத சுத்தமா மறக்க முடியாது தான்னாலும் மேல நடக்க வேண்டியதப் பார்க்கலாமில்லையா?''

''வேண்டாம் ஸார் நான் இங்கேயே இருந்துக்...''

''இந்த வீட்ல, தனியாவா?''

..............

''முடியுமாம்மா? யதார்த்தமா யோசிக்கணும் தன்யாம்மா...''

''அதனாலதான் ஸார் சொல்றேன், கஷ்டமெல்லாம் இருக்கத்தான் செய்யும். அதுக்காக...''

''ஏம்மா ரகுநந்தன்... சின்ன எம்.டி. ஏதாவது சொன்னாரா?''

''ஐயய்யோ என்ன ஸார்...''

''பின்ன என்னம்மா, யார் என்ன சொன்னா தான் என்ன? நான் சொல்றதக் கேளு. முதல்ல உனக்குத் தேவ ஒரு மாற்றம்...''

அதே நேரம் பொன்னம்மா ட்ரேயுடன் உள்ளே நுழைய ''ஸார்க்குக் குடு'' என்றவள் தானும் ''எடுத்துக்கோங்க ஸார்'' என்றாள்.

ஒரு கப்பை லோகநாதன் எடுத்துக் கொண்டதும் அடுத்ததாக தன்யாவிடம் வந்து நின்றாள் பொன்னம்மா.

''எனக்கு வேண்...''

''ஏன் தன்யாம்மா எடுத்துக்கோ.''

லோகநாதன் சொல்ல, வேறு வழியில்லாமல் எடுத்துக் கொண்டாள் தன்யா.

''சாப்டியா?''

''இல்ல ஸார்... நீங்க வந்த புண்ணியத்துல தான் இந்தப் பாலாவது இல்லன்னா அதுவுமில்ல.''

தானே முந்திக் கொண்டு பதில் சொல்லியிருந்தாள் பொன்னம்மா.

''தொடர்ந்து தனியாவே இப்பிடி உக்காந்துட்டிருந்தா பின்ன வேறென்ன நடக்கும். ஒருநாளோ ரெண்டு நாளோ டைம் எடுத்துக்கோம்மா. ஆனா அதுக்கு மேல காலங் கடத்தாத. அங்க வந்துட்டு திரும்பவும் வேலைக்கு வர ஆரம்பிச்சுடு.''

.............

''எதுக்கும் நான் இன்னும் நாலஞ்சு நாள் இங்க தான் இருப்பேன். ஏதாவது உதவி வேணும்னாலும் யோசிக்காம கேளு. நேர நேரத்துக்கு சாப்பிட்டுக்கணும். இல்லன்னா நேர்ல கிளம்பி வந்துடுவேன் சொல்லிட்டேன்.''

லோகநாதன் சொல்ல சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

''அப்ப நான் கிளம்பட்டுமா தன்யாம்மா.''

லோகநாதன் எழுந்திருக்க, ''சாப்டுட்டுப் போலாம் ஸார்'' என்று மெல்லிய குரலில் சொன்...



''அது சரி, கடைல ஏதோ பிரச்சனமா ரகுநந்தன் பேச்சக் கேட்டு நானும் செஞ்சிருந்தா பிரச்சனையே வந்திருக்காது தான்...''

''என்னாச்சு ஸார்?''

''லெதர் ஸெக்சன்ல அந்த ஸெல்லர் எல்லாத்தையும் டூப்ளிகேட்டக் குடுத்து வெச்சிருக்கானாம்...''

''அச்சச்சோ...''

''அத உங்க சின்ன எம்.டி. எப்பிடியோ கண்டு பிடிச்சுட்டார், சும்மாவே கோபம் வரும் அவனுக்கு இனி சொல்லவும் வேணுமா...'' என்று தனக்குத்தானே புலம்பிக் கொண்டவர் ''சரி நான் அதப் போய்ப் பாக்கறேன் தன்யாம்மா நீ ரெஸ்ட் எடு. நான் சொன்னத மறந்துடாத'' என்று கிளம்பி விட்டிருந்தார் லோகநாதன்.

## 14

ஒரு வாரம் சென்றிருந்தது.

லோகநாதன் ஸார் சொன்னதைப் போல அந்த வீட்டைக் காலி செய்து கொண்டு கெஸ்ட் ஹவுஸிற்கே வந்திருந்தாள் தன்யா.

அவ்வளவாக விருப்பமில்லா விட்டாலும் அந்தப் பெரியவரின் வார்த்தையைத் தட்ட அவளால் முடிந்திருக்கவில்லை.

அனைத்திற்கும் மேலாக அவசியமில்லாமல் ஏன் ...யிரம் வாடகையைக் கொடுக்க வேண்டும்.

ஆனாலும் பொன்னம்மாவிற்கு வேலையில்லாமல் போய் விட்டதில் தான் மனதிற்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது.

பாவம் எவ்வளவு அன்பான பெண்மணி என்றிருந்தது.

நிச்சயம் அவளுக்கு எதையாவது செய்து கொடுக்கத் தான் வேண்டுமென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

தாய் இறந்ததற்குப் பிறகு அன்று இரண்டாவது முறையாக வீட்டிற்கு வந்தபோது தான் ரகுநந்தனைக் கடைசியாகப் பார்த்திருந்தாள் தன்யா.

அதற்குப் பிறகும் ஒரு வாரம் கடந்து விட்டிருக்கிறதே என்று ஆச்சரியத்துடன் நினைக்கத் தோன்றியது.

அன்று அவன் வீட்டிற்கு வந்திருந்தபோது தான் அப்படிப் பேசியதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டுமோ,

அதெல்லாம் ஒன்....

அதெப்படி, பொன்னம்மாவே சொன்னதைப் போல அவன் செய்த உதவியும் அவ்வளவு சாதாரணமானதா என்ன.

முதலில் லோகநாதன் ஸார் சொன்னாரென்பதற்காகத் தான் இங்கே வந்திருக்கவே கூடாதோ.

அவர் பாட்டுக்கு சொல்லிவிட்டு ஊருக்குக் கிளம்பிச் சென்று விட்டார்.

ரகுநந்தன் தன்னைப் பற்றி என்ன நினைப்பான்.

பேசுவதற்கும், செய்வதற்கும் துளியும் சம்பந்தமே இல்லாமலிருக்கிறாளே என்று நினைக்க மாட்டானா.

ஏன் அதைவிடக் கூட இன்னும் எளனமாக...

அதெல்லாம் சில வினாடிகள் தான்.



உடனே தனது எண்ணம் போகும் போக்கில் தன்னையே நொந்து கொண்டாள்.

பிரதிபலன் பாராது உதவி செய்பவர்களைப் போய் தான் இப்படியெல்லாம் எண்ணலாமா,

லோகநாதன் ஸார் அப்படித்தான் என்றாலும் ரகுநந்தன்...

ஏனோ அதற்கு மேல் தன்யாவால் ஒன்றும் முடிந்திருக்கவில்லை.

எந்த எண்ண ஓட்டங்களுக்கும் இடம் கொடுக்காமல் பேசாமல் சென்று கண்களை மூடிப் படுத்து விட்டிருந்தாள்.

சும்மா இருக்கும் மனம் சாத்தானின் உலைக்களம் என்பது சரிதான் போலிருக்கிறது.

நாளையிலிருந்து மீண்டும் வேலைக்குச் செல்லத் தொடங்கிவிட வேண்டும்.

இன்னும் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் தந்தையும் மகனும் செய்திருக்கும் உதவிகளுக்குத் தன்னால் கைமாறு செய்துவிட முடியாதென்றாலும், முடிந்த அளவு அவர்கள் தனக்காக செலவு செய்த பணத்தையாவது திருப்ப முயல வேண்டும்.

''குட்மார்னிங் ஸார்.''

பதினைந்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் வேலைக்கு வந்திருந்தவள் வழக்கம் போல காலையில் வந்ததும் எம்.டி.ரகுநந்தனை வந்து சந்தித்தாள்.

காலை வணக்கம் சொன்னவள் ஒருவேளை தான் சொன்னது காதில் விழவில்லையோ என்று தோன்றியதில், மீண்டுமொரு முறையும் சொன்னாள்.

அதற்கு ரகுநந்தன் லேசாகத் தலையை மட்டும் ஆட்டியது தெரிந்தது.

ஏன்...

சில வினாடிகளின் யோசனையிலேயே அவனுடைய கோபத்திற்கான காரணம் புரிந்தது.

சரிதான் அவனுடைய இடத்தில்தான் இருந்தாலும் கோபம் கொள்வது இயல்பு தானே.

மன்னிப்புக் கேட்பதற்காக வாயைத் திறக்கப் போனவள், அதற்குள் ரகுநந்தனுக்கு அவனுடைய கைப்பேசியில் அழைப்பு வந்திருந்ததில் பேசாமல் தன்னுடைய இடத்திற்கு வந்து விட்டிருந்தாள்.

அப்படி வந்திருந்தவளால் என்ன முயன்றும் கவனத்தை வேலையில் செலுத்த முடிந்திருக்கவில்லை.

பேசாமல் அமர்ந்து விட்டிருந்தவள், சிறிது நேரத்திற்குப் பிறகு மீண்டும் ரகுநந்தனை நாடி வந்தாள்.

அவன் வேலையில் முனைப்பாக இருந்தது தெரிந்தது.

அருகில் சென்றாள்.

தயக்கத்துடன் தான்.

அரவம் உணர்ந்து தானும் நிமிர்ந்து பார்த்தான் ரகுநந்தன்.

''நான் அன்னைக்கு அப்படிப் பேசினது...''

''போய் வேலையப் பார்கறியா?''

...............

''யார் யார எங்கெங்க வெக்கணுமோ அங்கங்க வெச்சிருந்தா எந்தப் பிரச்சனையும் வந்திருக்காது. என்ன பண்றது பட்டா தான புத்தி வருது.''



என்ன சொல்கிறான்.

ஏனோ ரகுநந்தனின் கோபத்தையும், வெறுப்பையும் அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

வேதனையில் தொண்டை அடைத்திருந்தது.

''போய் வேலையப் பார்த்தா நல்லார்க்கும்னு நினைக்கறேன்'' என்றவனின் வார்த்தைகளில் அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் தன்னுடைய இடத்திற்கு வந்திருந்தாள்.

எதையுமே செய்யத் தோன்றாமல் அன்று முழுவதுமே பேசாமல் தான் அமர்ந்திருந்தாள் தன்யா.

ஏன் அதற்கு அடுத்த சில நாட்களும் கூட அப்படித் தான் சென்றன.

முதல் நாளைப் போல வெறுப்பை உமிழா விட்டாலும் கண்டும் காணாததைப் போல நடந்து கொண்ட ரகுநந்தனின் செய்கை அவளுடைய வேதனையை எந்த விதத்திலும் குறைத்திருக்கவில்லை.

மாறாக அதிகரிக்கச் செய்திருந்தது.

தனது டேபிளில் இருக்கும் இண்டர்காம் ஒலிக்க எடுத்துப் பேசினாள் தன்யா.

ரகுநந்தன் தான்.

''இதோ எடுத்துட்டு வர்றேன் ஸார்'' என்றவள் அவன் கேட்ட ஃபைல்களை எடுத்துக் கொண்டு ஓடினாள்.

அவன் மிகுந்த கோபத்திலிருந்தது தெரிந்தது.

ரகுநந்தன் நிமிர்ந்து பார்க்க, தயக்கத்துடன் கையிலிருந்த பைல்களை அவனுக்கு முன்பாக வைத்தாள்.

வைத்துவிட்டு இரண்டு எட்டு எடுத்து வைத்திருந்தவளை "என்ன இது" என்ற அவனுடைய குரல் நிறுத்தியிருந்தது.

நின்று திரும்பிப் பார்க்கவும், ரகுநந்தன் விசிறியடித்த ஃபைல்கள் தன்யாவின் முகத்தில் மோதி கீழே சிதறவும் சரியாக இருந்தது.

ரகுநந்தனின் செய்கையை நம்ப முடியாமல் அதிர்ச்சியுடன் பார்த்தாள் தன்யா.

"ஜாலிக்கு வேலைக்கு வந்துட்டிருக்கியா?"

...............

"போன மாசத்துக்கப்புறம் எதுவுமே அப்டேட் ஆகல. மாசா மாசம் சுளையா சம்பளத்த மட்டும் வாங்கிக்கத் தெரியுதில்ல வேலை செய்யறதுக்கு என்ன வந்தது."

"இன்னும் பத்து நிமிஷத்துல அப் டு டேட் பில்ஸ் ஃபைல் பண்ணி என் டேபிளுக்கு வந்தாகணும் இல்லைன்னா நடக்கறதே வேற..."

ரகுநந்தனின் கோபத்தில் கீழே சிதறிக் கிடந்த பேப்பர்களைப் பொறுக்கி ஃபைல்களில் வைத்துக் கொண்டு தன்னுடைய இடத்திற்கு வந்திருந்தாள்.

அப்படி வந்தவளுக்கு விசிறியடித்ததில் சிதறிப் போயிருந்த பேப்பர்களைப் பிரித்துத் தேதி வாரியாக அடுக்கி முடிக்கவே அரை மணி நேரத்திற்கும் மேலாகி விட்டிருந்தது.

அதற்கு மேலும் அவற்றை பைலுக்குள் இட்டு முடித்து விட்டுத் தான் விடுமுறையில் இருந்தபோது வந்திருந்த பில்களை சேகரித்துக் கொண்டு வருவதற்காகச் சென்றாள்.



அவள் மீண்டும் தன்னிடத்திற்கு வந்து சேரவும், இன்டர்காம் ஒலிக்கவும் சரியாக இருக்க எடுத்து காதில் வைத்தாள்.

மீண்டும் ரகுநந்தன் தான்.

"இதோ ஃபைல் பண்ணி முடிச்...."

.................

"சரி ஸார், இப்பவே எடுத்துட்டு வர்றேன்."

ஃபைலில் கூடத் திரும்பவும் இட்டுக் கொள்ளலாம் முதலில் எம்.டி. கேட்கும் பில்களைக் கொடுக்கலாமென்று தான் சேகரித்துக் கொண்டு வந்ததை எடுத்துக் கொண்டு ஓடினாள்.

அப்படித் தான் எடுத்து வந்திருந்தவற்றை ரகுநந்தனின் டேபிளில் வைத்தாள் தன்யா.

கைகள் நடுங்க தான் வைத்த பேப்பர்களின் மீது பேப்பர் வெயிட்டை எடுத்து வைத்தாள்.

"என்ன விளையாட்றியா?"

ரகுநந்தனின் கேள்வியில் பயத்துடன் பார்த்தாள் தன்யா.

"என்ன இதெல்லாம்?"

தான் வைத்திருந்தவற்றைக் காட்டிக் கேட்டவனிடம் "பில்ஸ் ஸார்" என்றாள்.

"இது தான் குடுக்கற லட்சணமா?"

"இல்ல... நீங்க அவசரமாக் கேட்டிங்க அதான்..."

"இதத் தவிர வேற என்ன வேல உனக்கு திரும்பவும் வேலைக்கு வந்து கூட நாலு நாளாச்சே என்ன கிழிச்சுட்டிருந்த?"

"பேசு..."

...............

"நீ ஒண்ணு பண்ணு, பேசாம உனக்குத் தகுந்த ஐம்பமா உக்காந்துட்டு செய்யற வேலை ஏதாவது இருந்தா பாத்துட்டுப் போயிடு... போ என் முகத்துல விழிக்காம போயிடு."

ரகுநந்தனின் வார்த்தைகள் தன்னை ஏதேதோ செய்திருக்க, பேசாமல் தன்னோட அறைக்கு வந்து விட்டிருந்தாள் தன்யா.

கடைசியாக அவன் சொன்ன வார்த்தைகள் தான் மீண்டும் மீண்டும் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன.

என்னதான் தான் செய்தது பெரிய தவறே என்றாலும் அதற்காக என்ன வார்த்தை சொல்லி விட்டான் என்றிருந்தது.

வேலை நேரம் முடிந்திருக்க தானிருக்கும் கெஸ்ட் ஹவுஸிற்கு வந்திருந்தாள்.

ஏனோ அவளால் ஒன்றுமே முடிந்திருக்கவில்லை.

எதுவுமே பிடிக்கவுமில்லை.

எந்தவொரு பிடிப்புமே இல்லாமல் இது என்ன வாழ்க்கை என்றிருந்தது.

எல்லையற்ற விரக்தி கண்ணீருக்கும் இடம் கொடுத்திருக்கவில்லை.

பேயறைந்தவளைப் போல எதையுமே செய்யத் தோன்றாமல் அமர்ந்து விட்டிருந்தாள்.



# 15

தன்யாவின் நிலை அப்படியிருக்க, ரகுநந்தனின் நிலை பற்றியோ சொல்ல வேண்டியதே இருக்கவில்லை.

அவனும் கிட்டத்தட்ட அவளுடைய நிலையில் தான் இருந்தான்.

அதை விடக் கூட மோசமாகவே,

அதற்குக் காரணமும் வேறு யாருமல்ல தன்யா தான்.

நாளுக்கு நாள் அவனுடைய மனம் தன்யாவிற்காக மிகவும் ஏங்கத் தொடங்கி விட்டிருந்தது.

வெட்கத்தை விட்டு அதை அதுவும் பலமுறை சொல்லியும் ஆயிற்று.

இனியும் தான் என்ன செய்ய முடியும்.

அதுவும் கடைசியாக தன்யாவைப் பார்க்கச் சென்ற போது அவளுடைய வீட்டில் வைத்து அவள் சொன்னதைத் தான் அவனால் சுத்தமாக மறக்க முடிந்திருக்கவில்லை. தாங்கிக் கொள்ளவும்,

தான் அவளிடம் எவ்வளவோ எதிர்பார்த்துக் கொண்டிருக்க, அவளானால் நாளுக்கு நாள் தன்னை விட்டுத் தூரமாக அல்லவா சென்று கொண்டிருக்கிறாள்.

வேண்டாம்.

இனியும் அவளை அருகில் வைத்து மறுகிக் கொண்டிருக்கத் தன்னால் முடியாது.

கடைசியில் பைத்தியம் பிடித்து அலைய நேர்ந்தாலும் நேர்ந்து விடும்.

முதலில் நடந்தவற்றையெல்லாம் மறக்க முடியாமல் தான் ரகுநந்தன் அப்படி நடந்து கொண்டதும்,

ஆனால் அப்படி நடந்து கொண்டதற்குப் பிறகு முன்னிலும் மனம் மோசமாகி விட்டிருக்க, செய்வதறியாது தவித்தான்.

தன்யாவிடம் சென்று பேசினால் என்ன.

இதற்கு ஒரு தீர்வு கிடைக்காமல் இனியும் கையைக் கட்டிக் கொண்டு பேசாமலிருக்கத் தன்னால் இயலாது.

நினைத்தவன், உடனே அதை செயல்படுத்தவும் முனைந்தான்.

அதாவது தன்யாவை நாடி அவள் தங்கியிருக்கும் வீட்டிற்குச் சென்றான்.

ஒரு முறை காலிங் பெல் ஸ்விட்சை அழுத்திய உடனேயே தன்யா வந்து கதவைத் திறந்திருக்க உள்ளே சென்றான்.

''வாங்க'' என்ற வார்த்தை தொண்டையைத் தாண்டி வந்திருக்கவில்லை தன்யாவிற்கு.

ஆனால் அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் ரகுநந்தனும் இருக்கவில்லை.

அது இரவு நேரமென்பதால் ஆள் நடமாட்டமும் சுத்தமாகக் குறைந்திருந்தது.

ஏன் இல்லையென்றே சொல்லலாம்.

''உங்கிட்டக் கொஞ்சம் பேசணும்.''

ரகுநந்தன் சொல்ல ''உள்ள வாங்க'' என்றாள் தன்யா.



அதெல்லாம் ஒன்னும் வேண்டாம் என்று சொல்ல நினைத்தவன் பிறகு ஏதோ தோன்ற தன்யாவைத் தொடர்ந்து உள்ளறைக்கு வந்திருந்தான்.

என்னவென்பதைப் போலத் தன்னைப் பார்த்தவளை அப்பொழுது தான் முழுமையாக கவனித்தான் ரகுநந்தன்.

பார்ப்பதற்குப் பாதியாக மெலிந்து போயிருந்தது தெரிந்தது.

முகமும் வாடிப் போய் ஏன் இப்படி...

சரிதான், அதெல்லாம் தனக்குத் தேவையில்லாதது.

கேட்டால் மட்டும் உடனே மனம் திறந்து பதில் சொல்லி விடப் போகிறாள்.

''என்ன முடிவு பண்ணியிருக்க?''

ரகுநந்தனின் கேள்வியில் புரியாமல் அவனைப் பார்த்தாள் தன்யா.

''உன்னத்தான், என்ன முடிவு பண்ணியிருக்க?''

எதைப் பற்றிக் கேட்கிறான்.

ஒருவேளை இன்று மாலை சொன்னதைத் தான் கேட்கிறானோ.

வேறு வேலையைப் பார்த்துக் கொண்டு கிளம்பச் சொல்லி விடுவானோ.

நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ள அது எங்கே அவனுக்குக் கேட்டு விடுமோ என்று பயந்து கூடப் போய் விட்டிருந்தாள். இவனைப் பிரிந்து எப்படி...

''பேசு... இன்னும் எத்தன...''

''...பக்கிக் கேக்கறீங்கன்னு புரியல.''

"ம், வேற வேலையப் பாத்துட்டுப் போறியான்னு கேக்கறேன்."

ரகுநந்தனின் திருத்தமான கேள்வியில் தன்னை யறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருந்தன தன்யா விற்கு.

"உங்கள விட்டுட்டு நான் எங்க போவேன் ரகு?"

தன்யாவின் வார்த்தைகளில் அவளைக் கூர்ந்து கவனித்தான் ரகுநந்தன்.

தனது காதுகளில் சரியாகத் தான் விழுந்ததா.

"உங்களத் தவிர எனக்கு யார் இருக்காங்க ரகு..."

ஓ அதற்காகத் தான் போக மாட்டாளாமா, மற்றபடி ஒன்றுமே இல்லையாமா.

ஆனாலும் அதை அப்படியே கேட்க முடிந்திருக்க வில்லை.

எதுவும் பேசாமல் பார்த்தான்.

"ரகு.... அப்படியே போக வழியே இருந்தாக் கூட உங்கள விட்டுட்டு எங்கேயும் போக மாட்டேன் ரகு, எனக்கு... எனக்கு நீங்க வேணும்..."

"தன்யா."

தன்யாவின் வார்த்தைகளைக் கேட்ட ரகுநந்தனுக்கு எல்லையற்ற ஆனந்தம், நிம்மதி... ஏன் இன்னும் கூடச் சொல்லிக் கொண்டே போகலாம்...

"ரகு...."

அழுகையில் உதடு துடிக்க நின்றவளை நோக்கித் தனது இரண்டு கைகளையும் நீட்டியிருந்தான் ரகுநந்தன்.

அவ்வளவுதான்.



அடுத்த வினாடி ஓடி வந்து ரகுநந்தனின் மார்பில் தஞ்சம் புகுந்திருந்தாள் தன்யா.

எங்கெங்கோ தேடியலைந்து முட்டி மோதிக் கடைசியில் தனது புகழிடம் வந்து சேர்ந்து விட்டாற் போல ஆனந்தத்தில் அவனுடைய மார்பிலேயே முகம் புதைத்துக் கதறி விட்டிருந்தாள்.

அவளுடைய நிலையோ இப்படியிருக்க ரகுநந்தனின் நிலை பற்றியோ கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

தன்னிடம் வந்து சேர்ந்து விட்டிருந்த தனது உயிரினும் மேலானவளை அப்படியே பூப்போல மென்மையாக அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

அப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ முதலில் தன்னிலை உணர்ந்து கொண்டிருந்தது ரகுநந்தனே.

"தன்யா..."

ரகுநந்தனின் அழைப்பில் சற்றும் மனமே இல்லாமல் நிமிர்ந்து பார்த்தாள் தன்யா.

"உண்மையிலேயே நான் பார்த்துட்டிருக்கறது நிஜம் தானா..."

"என்னால நம்ப முடியலைடா" என்றவன் அவளை இறுக அணைத்து அவளுடைய உதடுகளை நோக்கிக் குனிந்திருந்தான்.

ரகுநந்தனின் அன்பில் திக்கு முக்காடிப் போயிருந்தாள் தன்யா.

வெட்கத்தில் முகம் இரத்த நிறம் கொண்டு விட்டிருக்க, தன்னிலை மறந்து மீண்டும் அவனை இறுக அணைத்து அவனுடைய மார்பிலேயே முகம் புதைத்துக் கொண்டு விட்டிருந்தாள்.

தன்யாவின் அன்பைக் கண்ட ரகுநந்தனுக்கும் மனம் நிறைந்து போயிருந்தது.

தனக்காக வேறு வழியில்லாமல் இறங்கி வந்திருக்கிறானோ எனும் எண்ணம் மாறி விட்டிருந்தது.

அந்த வினாடியில் உலகத்திலேயே தன்னைப் பெரும் அதிர்ஷ்டசாலியாக உணர்ந்தான் ரகுநந்தன்.

தன் மனம் நிறைந்தவள் கிடைத்து விட்ட பிறகு அதற்கு மேல் சொல்லவும் தான் என்ன இருக்கிறது.

தன்யா.

''ம்.''

''அப்பா வர்றேன்னு சொல்லியிருக்கார்மா'' என்றவனின் குரலில் நடப்பிற்கு வந்து நிமிர்ந்து ரகுநந்தனின் முகத்தைப் பார்த்தாள் தன்யா.

''அவர் வரும்போது நான் உன் ரூமில் இருந்து வெளிய போனா எப்படியிருக்கும், அதுவும் இந்த நேரத்துக்கு...''

என் தந்தையிடம் உண்மையைச் சொல்ல வேண்டியது தானே என்று நினைத்தவள் பிறகு அப்படி நினைத்ததற்காகத் தன்னையே நொந்து கொண்டாள்.

எதற்கும் ஒரு நேரங்காலம் வேண்டாமா.

அதுவும் இந்த விஷயத்திற்கு...

''என்னடா?''

ரகுநந்தனின் பார்வையிலும் அருகாமையிலுமாக மீண்டும் சிவக்கத் தொடங்கி விட்டிருந்த முகத்தைக் குனிந்து மறைத்துக் கொண்டாள்.

''தன்யா...''



''வெளிய கார் வந்து நிக்கற சத்தம்...''

தன்யா சொன்னதில் தானும் கூர்ந்து கேட்டான்.

''இருக்கலாம் கிளம்பட்டுமாடா.''

''ம்கூம், வேண்டாம்.''

''அப்புறம் நிலம விபரீதமாயிடும்'' என்றவனின் பார்வையில் தொடர்ந்து அவனை நேருக்கு நேர் எதிர்கொள்ள முடியாமல் அங்கிருந்து ஓடி விட்டிருந்தாள் தன்யா.

''ஏய்...''

''ப்ளீஸ் ரகு, கிளம்பிக்கோங்களேன்...''

சரிதானென்று இரண்டு எட்டு எடுத்து வைத்திருந்த ரகுநந்தன் ''ஒரு நிமிஷம் இங்க வாயேன்'' என்று அழைக்க, முடியாதென்று மறுக்க முடியாமல் மீண்டும் அருகில் சென்றாள் தன்யா.

அவ்வளவுதான்.

அடுத்த வினாடி அவளை இறுக அணைத்து அவளுடைய உதடுகளில் தனது இதழ்களைப் பதித்து விட்டுப் பிறகு விடுவித்திருந்தான்.

லேசாகத் தள்ளாடியவளைப் பிடித்து நிறுத்தியவன் ''சரிதான் இதுக்கு மேல இங்கிருக்கறது நல்லதில்ல'' என்று வேகமாக வெளியே சென்று விட்டிருந்தான்.

எந்த அர்த்தத்தில் அப்படிச் சொல்லி விட்டுச் சென்றானென்று தன்யாவிற்குப் புரிந்திருக்கவில்லை.

அதைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் மனநிலையில் அவள் இருக்கவுமில்லை. அதற்குப் பிறகு வாழ்க்கையிலேயே முதன் முறையாக எதிர்காலத்தைப் பற்றிய இனிமையான கற்பனையில் மூழ்கிப் போய் விட்டிருந்தாள் என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

# 16

என்ன முயன்றும் அன்று தன்யாவால் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

இன்னும் ரகுநந்தனைப் பார்க்கவே இல்லை. இனி அவனைப் பார்க்கவும் நேர்ந்தால்,

''குட்மார்னிங் மேடம்.''

உடல் சிலிர்த்துப் போக குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினாள் தன்யா.

அங்கு ரகுநந்தன் நின்றிருந்தான்.

ஆறடிக்கும் அதிகமான உயரத்துடன் தனது இரண்டு கைகளையும் பேன்ட் பாக்கெட்டுக்குள் விட்டவாறு கம்பீரமாக நிமிர்ந்து நின்றவனை உள்ளுக்குள் காதலும், வெளியே பெருமையும் பொங்கப் பார்த்தாள் தன்யா.

''குட்மார்னிங் ரகு...''

''என்னடா?''

''ஒண்ணுமில்ல.''

''நைட்டெல்லாம் தூங்கினியா?''

''ம்.''

''நான் தூங்கவே இல்லையாக்கும், கூப்புடணும்னு நினைச்சேன் போன்ல. சரி தூங்கியிருப்பியோன்னு தான் கட்டுப்படுத்திகிட்டேன்.''

..............



''சாப்டியா?''

''ம், நீங்க?''

''ம்கூம்.''

''ஏன்?''

''ஏன்னா இன்னைக்கு லஞ்சுக்கு ரெண்டு பேரும் வெளிய போலாம்.''

''ஏன்?''

''அது சர்ப்ரைஸ். ஆனா அது என் ட்ரீட்.''

''எதுக்கு?''

''அப்ப சொல்றேன்.''

''நீங்க இன்னும் டிபன் சாப்புட்....''

''வேண்டாம்மா, மதியமே ஒரு வெட்டு வெட்டிக் கறேன் விடு'' என்றவன் ''இன்னைக்கு என்னவோ உங்கிட்ட ஸ்பெஷலாத் தெரியுது'' என்றான்.

''அப்படியெல்....''

''ம், கண்டுபிடிச்சுட்டேன்.''

''என்ன?''

''வெட்கம் தான் வேறென்ன?''

''அதெல்....''

''பொய் சொல்லக் கூடாது.''

ரகுநந்தனின் கேள்வியிலும், பார்வையிலுமாக தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடியாமல் தவித்தாள் தன்யா.

அதைக் கண்ட ரகுநந்தனும் தன்னைக் கட்டுப் ... கொள்ள சிரமப்பட்டுத் தான் போனான்.

''அப்பா வர்றார்'' என்று ரகுநந்தன் நகர, தன்யாவும் நடப்பிற்கு வந்திருந்தாள்.

அதற்குள் அவளுக்கு அருகிலேயே வந்திருந்தார் லோகநாதன்.

''குட்மார்னிங் தன்யாம்மா.''

தனக்கு முன் காலை வணக்கம் சொன்னவரை லேசான பதட்டத்துடன் பார்த்த தன்யா, பதிலுக்குத் தானும் சொன்னாள்.

''என்னமா, ஏன் ஒரு மாதிரியிருக்க?''

''அதெல்லாம் இல்ல ஸார்'' என்றவளால் எப்பொழுதும் போல அவரை முதலாளியாகப் பார்க்க முடியவில்லை.

''வீடு சவுகர்யமா இருக்காம்மா?''

''அதெல்லாம், ரொம்பவே வசதியா இருக்கு ஸார்.''

''இன்னைக்கு என்னாச்சு உனக்கு, அந்த முசுடு ஏதாவது சொல்லிட்டானோ.''

அவருடைய மகனைக் குறிப்பிட்டு அவர் கேட்பது புரிய ''அச்சச்சோ இல்ல ஸார்'' என்றாள்.

''ரொம்ப ஸ்பீடா சொல்ற, ஆனாலும் இன்னைக்கென்னவோ பையன் தலகால் புரியாத சந்தோஷத்துல தான் இருக்கான். என்ன காரணம்னு தான் புரியல.''

............

''பிறந்த நாளையெல்லாம் பெருசாவே எடுத்துக்க மாட்டாம்மா, அவங்கம்மா தவமிருந்து பெத்த புள்ளையாச்சேன்னு... என்ன பாக்கற எங்களுக்குக் கல்யாணமாகிப் பன்னிரெண்டு வருஷங்கழிச்சுப் பெ...



ரகு. அவங்கம்மா அதான் என் வீட்டுக்காரம்மா இவனோட பிறந்த நாளன்னைக்கு ஊருக்கெல்லாம் சாப்பாடு போடுவா, இவனுக்கும் அப்படித்தான் ஒரே விருந்து அது இதுன்னு சமைச்சு தடபுடல் பண்ணிடுவா.''

''அப்படியெல்லாம் செய்யறப்பக்கூட இவ்வளவு சந்தோஷப்பட்டு நான் பார்த்ததில்ல ஆனா இன்னை...''

''அப்ப ஸார்க்கு இன்னைக்கு பர்த்டேவா ஸார்.''

அப்படித்தான் என்பது தெரிந்து விட்டிருந்தாலும் தானும் எதையாவது பேச வேண்டுமென்பதற்காக அப்படிக் கேட்டிருந்தாள் தன்யா.

ஆனால் மனதிற்குள் வேறு எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது.

''ஓ! அதுதான் ட்ரீட்டா என்று நினைத்தவளுக்கு அப்பொழுதே ரகுநந்தனை வாழ்த்தியாக வேண்டும் போல மனம் பரபரத்தது.

சர்ப்ரைஸாமே, அதுவும் தன்னிடம் அவன் சொல்வதற்கு முன்பாகவே தான் அவனை வாழ்த்த வேண்டும்.

ஆனால் அதற்கு மதியம் வரை வாய்ப்பே கிடைத்திருக்கவில்லை தன்யாவிற்கு.

கிடைத்ததும் உடனே வாழ்த்தினாள்.

ஆச்சரியப்படுவதற்கு பதிலாக ''அப்பா சொல்லிட்டாரா?'' என்று கேட்டான் ரகுநந்தன்.

''ம்.''

''கிளம்பலாமா?''

''எங்க?''

''வெளிய லஞ்சுக்கு சொன்னத மறந்துட்டியா இல்ல செய்ய மாட்டேன்னு நினைச்சுட்டியா?''

''ஹலோ, சும்மா தான் கேட்டேன் போதுமா?''

''போதாது.''

''பின்ன?''

''நான் உனக்கு ட்ரீட் தரப் போறேன். பர்த்டே கிஃப்ட்டா நீ எனக்கு என்ன தரப் போற?''

''எது வேணும்னாலும்...''

''ஜோக்கடிக்காம உன்னால என்ன தர முடியும்னு சொல்லு?''

''நீங்க என்ன கேட்டாலும்.''

''சரிதான்.''

காரில் ஏறி அமர்ந்திருந்த ரகுநந்தன் தன்யா ஏறியதும் ஸ்டார்ட் செய்தான்.

''அப்ப நான் சொன்னதை செய்ய மாட்டேன்னு சொல் நீங்களா?''

''வேண்டாம்மா விட்டுடு.''

''ம்கூம், சொல்லுங்க.''

''உன்னால கொடுக்க முடியாதத நான் கேட்டா.''

''எங்கிட்ட இருக்கறதத் தான கேக்கப் போறீங்க. அப்படியிருக்கும்போது ஏன் குடுக்க முடியாமப் போகப் போகுதாம். அதோட உங்களுக்குக் குடுக்கக் கூடாததுன்னு எங்கிட்ட எதுவுமே இல்ல ரகு'' என்றாள்.

''உன்னால குடுக்க முடியாதுங்கறத நான் கேட்டா.''

''அட என்ன நீங்க திரும்பத் திரும்ப இப்படியே பேசிட்டிருக்கீங்க?''

அப்படிக் கேட்ட தன்யாவை ஒருவேளை வேண்டுமென்றே விளையாட்டாகப் பேசிக் கொண்டிருக்கிறாளோ என்பதைப் போலப் பார்த்தான் ரகுநந்



ம்கூம், பார்த்தால் அப்படியும் தெரியவில்லையே.

''என்ன ரகு பேசுங்க?''

''சரிதான்மா, அத அப்புறம் பாக்கலாம். இப்ப வேற ஏதாவது பேசலாமே.''

''சரிதான், ஆனா எங்கிட்டு இருந்து உங்களுக்குக் குடுக்கக் கூடாதுன்னு எதுவுமே இல்லங்கறத மட்டும் நீங்க தெரிஞ்சுக்கோங்க'' என்றாள்.

''அதயும் பாக்கலாம்.''

''தாராளமா லோகநாதன் ஸார் கிளம்பிட்டாரா.''

''காலைலயே, ஏன்?''

''சும்மாதான் கேட்டேன். நீங்க ஊருக்குப் போகலையா?''

''ம்கூம்.''

''ஏன்?''

''போகல அவ்வளவுதான்.''

''அதான் ஏன்னு கேக்கறேன்?''

## 17

''நேத்து வாழ்க்கையே வெறுத்துப் போயிருந்தேன். இன்னைக்கு ரொம்ப விரும்பறேன் அதனால தான்.''

''புரியற மாதிரி பேசுங்க ரகு.''

''நேத்து உம்மனசு தெரியாததால ஒட்டுமொத்த ... இருந்தேன். இன்னைக்கு நீ எங்கூட இருக்கற

தால தலகால் புரியாத சந்தோஷத்துல மிதந்துட்டிருக்கேன்.''

''ஓஹோ, சரி அதுக்கும் நீங்க ஊருக்குப் போகாததுக்கும் என்ன சம்பந்தம்?''

''என் அழகான அசடே காரணமெல்லாம் ஒண்ணே ஒண்ணு தான் அது உன்ன விட்டுப் பிரிய முடியலேங்கறது தான்.''

''சும்மா சொல்லாதீங்க.''

''நிஜம்மா.''

''சரிதான் நம்பிக்கிட்டேன்.''

''உன்னால புரிஞ்சுக்க முடியலையாடா...''

''புரியுது ரகு...'' என்றவளுக்கு அவளையறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருந்தன.

''ஏய், என்னடா...''

''நான் உங்கள ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன் இல்ல ரகு?''

''இல்லமா, நல்லது எதுவும் வாழ்க்கைல அவ்வளவு சுலபமாக் கிடைச்சுடாது. கொஞ்சம் காத்திருந்தேன்னு வேணும்னா சொல்லலாம்.''

''ஒரு விதத்துல நான் ரொம்ப லக்கி ரகு.''

''புரியலமா.''

''கடவுள் எனக்கிந்த கஷ்டத்தையெல்லாம் குடுத்தது கூட உங்கள சந்திக்கறதுக்காகத் தானோ.''

''சரிதான், எதையும் பாஸிட்டிவா எடுத்துட்டா நல்லது தான். ஆனாலும்...''

''என்ன ரகு, சொல்லுங்க?''



''மனசுக்குள்ள இவ்வளவு ஆசய வெச்சுக்கிட்டு எப்படி உன்னால அதக் காட்டிக்காம இருக்க முடிஞ்சது. கடைசியா அன்னைக்கு உங்க வீட்டுக்கு வந்திருந்தப்ப கூட ஏதோ சொன்னியே.''

''அதையெல்லாம் நீங்க இன்னும் மறக்கவே இல்லையா ரகு...''

''மறக்கறதா அப்படி நீ பேசினதுக்கப்புறம் தான் உன்னை நான் எவ்வளவு விரும்பறேங்கறது எனக்கே புரிஞ்சது. அந்தக் கோபம் தான் நேத்து என்னையே அறியாம அப்படி வெறித்தனமா நடந்துக்கவும் வெச்சது. ஸாரிடாம்மா.''

''அட அத விடுங்க ரகு. நீங்க மட்டும் அப்படி நடந்துக்கலேன்னா எனக்கு நானே ஒரு வட்டத்தப் போட்டுக்கிட்டு உங்களையும் வருத்திக்கிட்டு நானும் நிம்மதியில்லாம தினம் தினம் வருத்தப்பட்டுட்டு உக்காந்துட்டிருந்திருப்பேன்.''

''அதோட...''

''என்னமா?''

''ஒண்ணுமில்ல ரகு.''

''ம்கூம் என்னவோ இருக்கு என்ன அது சொல்லு?''

''உங்கள ஃபார்ஸ்ட் டைம் பாத்தப்பவே விழுந்துட்டேன் ரகு...''

''ம்கூம், இத மட்டும் நான் நம்பவே மாட்டேன்.''

''ப்ராமிஸ் ரகு.''

''இத எப்படி நம்ப முடியும் என்னால சொல்லு?''

''நிஜம், நான் மனசுக்குள்ள என் கற்பனை நாயகன் எப்படியிருக்கணும்னு நினைச்சேனோ, அதே போல நீங்க

இருந்தீங்க... ஏன் நூத்துக்கு நூறு பர்ஸன்ட் அப்படித் தான் இருந்தீங்களாக்கும். அதான்...''

''ம்.''

''எங்க என்ன அறியாமையே உங்கள விரும்ப ஆரம்பிச்சிடுவேனோன்னு எனக்கு நானே கடிவாளம் போட்டுக்கிட்டேன்னு கூடச் சொல்லலாம் என்ன ரகு...''

''நம்பற மாதிரியும் தான் இருக்கு.''

''எனக்கு பொய் சொல்லிப் பழக்கமில்ல ரகு. அதனால நான் சொல்றதத் தாராளமா நம்பலாம்.''

திரும்பித் தன்னைப் பார்த்த ரகுநந்தனின் பார்வையில் நெஞ்சு படபடக்கப் பார்த்தாள் தன்யா.

முகமும் இரத்த நிறம் கொண்டு விட்டிருக்க, உதட்டைக் கடித்துத் தன்னை இயல்பாக்கிக் கொள்ள முயன்றாள்.

அந்த வினாடியில் காரை ஒரு ஓரமாக நிறுத்தியிருந்தான் ரகுநந்தன்.

அதை உணர்ந்து தன்யா அவனைப் பார்க்க,

''ம்கூம் இப்படி பாக்காதடா அப்புறம் கஷ்டம்...'' என்று உல்லாசமாகச் சிரித்தான்.

...............

''என்னடா...''

''கிளம்பலா...ம் ரகு.''

''சரிதான், ஆனா...''

...............

''நான் கேக்கப் போற ட்ரீட்டக் குடுக்க நீ தயாரா இரு.''

''ஷ்யூர்...''



''நீ எவ்வளவு அழகு தெரியுமாடா?''

''ம், ம்...''

''ஒவ்வொரு வருஷம் பிறந்த நாள் வரும் போது வீட்ல பண்ற அமர்க்களத்துல கோபம் தான் வரும். ஆனா எனக்கு விவரம் தெரிஞ்ச நாள்ல இருந்து இந்த பர்த்டேவத்தான் ரொம்ப சந்தோஷமாக அனுபவிச்சுட்டிருக்கறேன்னு சொல்லலாம். உன்னால..'' என்று மீண்டும் காரை ஸ்டார்ட் செய்திருந்தான்.

''வீட்ல அம்மா. உங்கள மிஸ் பண்ண மாட்டாங்களா? நீங்க அம்மாவ...''

''சரிதான், ஆனா அவங்க இன்னைக்கு நிமிஷம் நிக்க நேரமில்லாத அளவுக்கு பிஸியா இருப்பாங்க...''

''ஏன்?''

''பின்ன ஊருக்குள்ள இருக்கற எல்லாருக்கும் விருந்து படைக்க வேண்டாமா...?''

''உங்க பிறந்த நாளுக்காகவா?''

''ம்.''

''மொத்தம் உங்க ஊர்ல எத்தன பேர் இருப்பாங்க.''

''ம்... ஆயிரம் பேருக்கு மேல தான் இருப்பாங்க.''

''அத்தன பேருக்கும் விருந்தா?''

''அது மட்டுமில்ல, வேஷ்டி சேல, பணம், என் அன்னைக்குப் பிறக்கற குழந்தைகளுக்கு தங்கத்துலயே ஏதாவது செய்வாங்க.''

''உங்க பேரண்ட்ஸுக்கு தான் உங்க மேல எவ்வளவு அன்பு ரகு...''

''சரிதான் கூடவே பணத்தையும் கரைக்க வேண்

''உங்களுக்கு அதெல்லாம் பிடிக்காது போலிருக்கு?''

''பின்ன, அதே பணத்துல அனாதக் குழந்தைக வருஷம் முழுக்க சாப்புட்றதுக்கு வழி பண்ணிக் குடுக்கலாம். வசதி இல்லாதவங்க படிக்க உதவலாம்... இப்படி இன்னும் உருப்படியா செய்ய எவ்வளவு வழியில்ல...''

''சரிதான். ஆனாலும் அவங்க செய்யறதும் தர்மம் தான...''

''அந்த வார்த்தை சொல்லாத.''

''ஏன்?''

''சரியான வார்த்தைல சொல்லணும்னா வெட்டி பந்தா தான் வேறென்ன.''

''ஏன் ரகு இப்படிச் சொல்றீங்க? அவங்...''

''அப்ப வசதியில்லாத பெத்தவங்களுக்கெல்லாம் அவங்க குழந்தைங்க மேல அக்கறையில்லேன்னு சொல்றியா?''

''அது அப்படியில்...''

''இப்படியே செஞ்சு செஞ்சு...''

''என்ன ரகு?''

''நானூறு, ஐநூறு ஏக்கருக்கு மேல விவசாய நிலம் இருந்ததுமா. எல்லாம் வழிவழியா வந்த சொத்து தான். இப்ப எல்லாமே காலி...''

''ஐயோ...''

''ஆனாலும் அம்மா சம்பாத்தியத்துல ஒரு நூறு ஏக்கர் நிலமிருக்கு. அத வெச்சுட்டு ஆட்டம் போட்டுட்டிருக்காங்க...''

''நான் தானம் செய்யறது தப்புன்னு சொல்ல மாட்டேன் எல்லாத்துக்கும் ஒரு



சொல்றேன் அவ்வளவுதான்.''

''சரிதான் ரகு. எது எப்படியோ நீங்க ரொம்ப லக்கி கூடவே ஊருக்கே செல்லப்...''

''அதெல்லாம் தெரியாது. ஆனா அவங்களோட தாராள குணத்துனால ஒரு நல்லதும் நடந்திருக்குன்னு வேணும்னா சொல்லலாம்.''

''அது என்ன?''

''அப்பாவோட உதவற மனப்பான்மை தான் உன்ன எனக்குக் குடுத்திருக்கு...''

''ஓ...''

''என்னமா?''

''சரிதான் என் வாழ்க்கைக்கும் திரும்பவும் ஒரு அர்த்தம் வந்தது.''

அன்றைய நாள் முழுவதுமே இருவருக்கும் வெகு இனிமையான நாளாக அமைந்து விட்டிருந்தது.

நெஞ்சு நிறைய இருந்த ஆசையை வெளிப்படுத்திக் கொண்டதோடு, மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள்.

மதியம் போய் மாலை வந்த பிறகும் கூட இருவருக்கும் திரும்ப மனம் வந்திருக்கவில்லை.

மனம் போன போக்கில் சுற்றியவர்கள் இரவு டிஃப்பனையும் வெளியே ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் முடித்துவிட்டு அதற்குப் பிறகே திரும்பியிருந்தார்கள்.

ஏனோ இப்பொழுது இருவருக்குமே மௌனமே பிடித்திருந்தது.

இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித கிறக்கத்தில் இருவருமே ஆழ்ந்திருந்தார்கள்.

இருவரும் தங்களுக்குள் எதை எதிர்பார்க்கிறோம் என்ற எந்த எண்ணமுமே அவர்களுக்கு இருக்கவில்லை.

ஏன் சுற்றியிருக்கும் உலகையே மறந்து போயிருந்தார்கள் என்று கூடச் சொல்லலாம்.

வீடு வந்திருக்க மனமே இல்லாமல் திரும்பி தன்யாவைப் பார்த்தான் ரகுநந்தன்.

அவளும்,

ஆனாலும் எதுவோ வழிநடத்தியதில் பார்வையிலேயே விடை பெற்றுக் கொண்டு இறங்கித் தனது இடத்திற்கு வந்திருந்தாள்.

அப்படி வந்தவள் அனிச்சை செயலாகச் சென்று குளித்து பிரஷ் செய்து விட்டு இரவு உடையை மாற்றிக் கொண்டு வந்தாள்.

ஏனோ இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத வண்ணம் மனம் கிடந்து தவித்தது.

தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பார்த்தாள்.

ரகுநந்தன் தான்.

உள்ளம் படபடக்க அட்டெண்ட் செய்து காதில் வைத்தாள்.

''தூங்கிட்டியா?'' ரகுநந்தன் கேட்க,

''ம்கூம்'' என்றாள்.

''ஏன்?''

..............

''தன்யா... சரி நான் அங்க வர்றேன்...''

ரகுநந்தன் சொன்னது அவளது உடலையும் உள்ளத்தையும் ஒருசேர பரபரக்கச் செய்து விட்டிருந்தது.



எதையும் செய்யத் தோன்றாமல் அப்படியே நின்று விட்டிருந்தாள்.

மூளையே மரத்துப் போய் விட்டதைப் போலிருந்தது.

அப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ யாரோ உள்ளே வரும் அரவம் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

ரகுநந்தன் தான்.

அதற்குள் அருகிலேயே வந்து விட்டிருந்தவனை செய்வதறியாது பார்த்தாள்.

கை கால்கள் அனைத்தும் தன் பேச்சைக் கேட்காதோ என்று சந்தேகம் வந்து விட்டிருந்தது.

வந்தவன் மீண்டும் சில வினாடிகள் எங்கோ சென்று விட்டுத் திரும்பி வந்தான்.

இப்பொழுது மூச்சுக் காற்று தன் மேல் விழுமளவிற்கு வந்து நின்றிருந்தவனை மிரட்சியுடன் நிமிர்ந்து பார்த்தாள்.

தனது இரண்டு கைகளாலும் தன்யாவின் முகத்தை ஏந்தி அவளுடைய கண்களைப் பார்த்தான் ரகுநந்தன்.

உடல் சிலிர்க்க கிரக்கத்துடன் பார்த்தவளிடம் இப்பொழுது முழுமையாகத் தன் வசமிழந்து போயிருந்தான்.

''என்னடா....''

............

''நான் என்ன கேட்டாலும் கொடுப்பியா?''

............

''என்னடா?''

''ம்.''

''நான் உன்னைக்கே...''

ரகுநந்தன் முடித்துக் கூட இருக்கவில்லை, அவனை அணைத்து அவனுடைய மார்பில் முகம் புதைந்திருந்தாள் தன்யா,

அவளுடைய நிலையே அப்படியிருக்க ரகுநந்தனின் நிலை பற்றியோ கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

அவளைப் பூப்போல மென்மையாக அணைத்துக் கொண்டவன், அவளுடைய கழுத்து வளைவில் தனது முகத்தைப் புதைத்திருந்தான்.

அடுத்த சில வினாடிகளில் இருவரும் முற்றிலுமாகத் தங்கள் வசமிழந்து போயிருந்தனர்.

அன்று இரவு ரகுநந்தன் தன்னுடைய அறைக்குச் சென்றிருக்கவில்லை.

அதிகாலை நேரத்தில் தான் மீண்டும் கண் விழித்திருந்தாள் தன்யா.

ரகுநந்தனின் தோள் வளைவில் தலை வைத்து அவனுடைய வெற்று மார்பில் முகம் புதைத்தவாறு படுத்திருந்த தன் நிலையில் குப்பென்று முகம் சூடாகிச் சிவந்திருந்தது.

இரவு நடந்ததெல்லாம் நினைவிற்கு வர அதைவிட அதிகமாகவே,

அனைத்திற்கும் மேலாகத் தான் இருக்கும் நிலை.

அசைவு உணர்ந்து தானும் கண் விழித்திருந்த ரகுநந்தன், தன்யாவின் அப்போதைய நிலையைக் கண்டான்.

''என்னடா...'' என்று எல்லையற்ற காதலுடன் அவளை



ஏனோ இருவருக்குமே விலகத் தோன்றியிருக்கவில்லை.

மேலும் இறுக அணைத்து அப்படியே பின்னிப் பிணைந்து போயிருந்தார்கள்.

இரவு நீண்டு கொண்டே போகாதா என்று ஏங்கினார்கள்.

ஆனாலும்...

முயன்று நடப்பிற்கு வந்தவனாய் சுற்றிலும் பார்த்தான் ரகுநந்தன்.

அதிகாலை நேரமென்பதால் மெல்ல இருள் விலகத் தொடங்கியிருந்தது தெரிந்தது.

தன்மேல் படர்ந்து கிடந்தவளை மீண்டும் ஒருமுறை இறுக அணைத்து அவளுடைய இதழ்களில் தனது இதழ்களைப் பதித்தான்,

''தன்யா...''

கடுகளவும் மனமே இல்லாதவனாய் மென்மையாக அழைத்தான்.

''ஏய்...''

''ம்.''

''என்....''

வாயைக் கூடத் திறந்திருக்கவில்லை. மீண்டும் அவனை இறுக அணைத்து அவனுடைய கழுத்தில் தனது சூடான இதழ்களைப் பதித்திருந்தாள் தன்யா.

ஏற்கனவே அவளை விட்டு விலக கடுகளவும் மனமில்லாதிருந்தவன் இப்பொழுது மீண்டும் தன் வசமிழந்து

ஆனாலும் அடுத்த சில நிமிடங்களில் முழுமையாக நடப்பிற்கு வந்திருந்தவன், தன்யாவையும் நடப்பிற்குக் கொண்டு வந்திருந்தான்.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் தன்னுடைய அறைக்கும் வந்திருந்தான்.

அந்த வினாடியில் உலகத்திலேயே தன்னை மிகுந்த அதிர்ஷ்டசாலியாக உணர்ந்தான் ரகுநந்தன்.

அந்த அளவிற்கு தன்யாவின் காதலிலும், ஆசையிலுமாக மனம் நிறைந்து போயிருந்தான்.

அவற்றோடு தன்மேல் எவ்வளவு நம்பிக்கை இருந்திருந்தால் இந்த அளவிற்கு அவளால் நடந்து கொண்டிருக்க முடியும்.

அப்படிப்பட்ட தனது உயிரினும் மேலானவளைத் தான் மிக விரைவில் திருமணமெனும் பந்தத்தின் மூலம் தனது வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்ள வேண்டுமென்று மனதார விரும்பினான்.

அந்த இனிய நாளை மிக விரைவில் தேர்ந்தெடுத்தாகவும் வேண்டும்.

அது குறித்து அன்றே தன்னைப் பெற்றவர்களிடமும் பேசிவிட வேண்டும்.

வழக்கத்திற்கு மாறாக மிகுந்த பரபரப்புடன் செயல்பட்டான் ரகுநந்தன்.

அப்பொழுதே தன்யாவை அழைத்துத் தனது எண்ணத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் போல மனம் பரபரத்தது.

ஆனாலும்...



வேண்டாம்.

பாவம் இனியாவது சற்று நேரம் தூங்கட்டும்.

தானும் இந்த விஷயத்தை இப்பொழுது தெரிவிக்காமல் இன்னும் சில நாட்களில் திருமண நாளையே அவளிடம் சொல்லலாம்.

எவ்வளவு சந்தோஷப்படுவாள்.

அப்பொழுது...

இப்பொழுதே அந்த நிமிடம் வராதா என்றிருந்தது ரகுநந்தனுக்கு.

இப்பொழுதே பெற்றவர்களை அழைத்துப் பேசினால் என்ன.

வேண்டாம் தோட்டத்திற்கு சென்று விட்டு இன்னும் தந்தை வந்திருக்க மாட்டார்.

அதோடு தனது பிறந்த நாளான முதல் நாளில் தான தர்மம் கோவில் குளமென்று சென்று விட்டு வெகு நேரம் கழித்துத் தான் தூங்கவும் சென்றிருப்பார்களாய் இருக்கும்.

அதே எண்ணப் போக்கில் சென்று கொண்டிருந்தவனுக்கு திடீரென்று ஒரு தயக்கம் தோன்றியது.

அவனுடைய தாயைப் பற்றியதே அது.

சிறுசிறு விஷயங்களில் கூட தான் நினைப்பதைத் தான் மகன் செய்தாக வேண்டுமென்று சொல்பவர், ஒரே மகனான தனது திருமணத்தைப் பற்றி எத்தனை கனவுகளை வளர்த்து வைத்திருப்பார்.

தந்தையைப் பற்றிக் கவலையே இல்லை.

அவர் தன் பேச்சுக்கு மறுப்பு சொல்ல மாட்டார் என்ப... ...வும் தயாராக இருப்பார்.

ஆனால் தாயிடம் அவ்வளவு எளிதாக சம்மதத்தைப் பெற்றுவிட முடியாதே.

அதற்காக சம்மதமே கிடைக்காது என்பது பொருளல்ல.

தான் நினைப்பதை விட சற்றுக் கால தாமதமாகலாம்.

அதையும் சற்று யோசித்து தந்தையின் உதவியுடன் செயல்பட்டால் தான் நினைப்பதை சாதிப்பது எளிதாகி விடும்.

என்ன ஒன்றை நினைத்து விட்டால் அடைந்தே தீர வேண்டுமென்ற தனது குணத்தையும் நன்கு அறிந்தவரென்பதால் போனால் போகிறது உனக்காக விட்டுக் கொடுக்கிறேன் என்பதைப் போலக் கடைசியில் தாய் இறங்கி வராமல் இருக்க மாட்டார்..

ஆனால் அதற்குக் கூட என்ன அவசியம்,

மேலும் சில நாட்கள் தானே ஆனால் ஆகட்டுமென்று பொறுமையாகக் காயை நகர்த்தினால் தனது தன்யாவைத் தாயையும் சந்தோஷமாகவே அரவணைத்து அழைத்துக் கொள்ளச் செய்யலாமே,

இப்படி ஏதேதோ எண்ணக் கோட்டைகளை நம்பிக்கையுடன் தனக்குள் கட்டிக் கொண்டிருந்த ரகுநந்தனுக்கு நடப்பு வேறு மாதிரி இருக்கப் போகிறது என்பது அப்பொழுது தெரிந்திருக்கவில்லை.

## 18

தான் மனதிற்குள் எண்ணியதைச் செயல்படுத்த முனைந்த ரகுநந்தன் மேலும் ஒரு மணி நேரத்திற்குப்



பிறகு தந்தையை அவருடைய கைபேசிக்கு அழைத்தான்.

அவன் எதிர்பார்த்தது போலவே அவர் தோட்டத்திலிருக்க, விஷயத்தைச் சொன்னான்.

தான் சொல்வதைக் கேட்டுத் தந்தை அவ்வளவு சந்தோஷப் படுவாரென்று அவன் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு அவருடைய சந்தோஷத்தையும் சம்மதத்தையும் வெளிப்படுத்தியதோடு வாழ்த்தவும் செய்தார்.

ஆனால் அதற்கு அடுத்ததாக அவர் சொன்னதுதான் ரகுநந்தனை யோசிக்க வைத்திருந்தது.

அவர் அதாவது லோகநாதன் சொன்னதும் இதைத்தான்.

அவருடைய மனைவி அதாவது ரகுநந்தனின் தாய் ஏற்கனவே மகனுக்கென சில சம்பந்தங்களைப் பார்த்து வைத்திருக்கிறார்.

அதில் எதைக் கடைசியாக முடிவு செய்வதென்பதைத் தான் அவர் மகனுக்காக மிச்சம் வைத்திருந்ததும்,

அப்படி அவர் அதாவது ரகுநந்தனின் தாய் பார்த்து வைத்திருந்த சம்பந்தங்கள் அனைத்துமே அந்தஸ்திலும் செல்வாக்கிலும் அவர்களை விடக் கூடப் பல மடங்கு உயர்ந்தவையாக இருந்தன.

திருமணமென்பது மகனின் மனம் சம்பந்தப்பட்ட விஷயம். மற்ற விஷயங்களைப் போல இந்த விஷயத்தில் நீ மனதிற்குள் எந்த ஆசையையும் வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது தான் நல்லதென்று லோகநாதன்

மனைவியிடம் யதார்த்தமாகத் தான் எடுத்துச் சொல்லவும் செய்திருக்கிறார்.

ஆனால் அப்படிச் சொல்ல நேர்ந்த போது தான் மகனின் திருமண விஷயத்தில் மனைவி எவ்வளவு ஆசைகளையும் எதிர்பார்ப்புகளையும் வளர்த்துக் கொண்டிருக்கிறாள் என்பது அவருக்குப் புரிந்திருக்கிறது.

அப்படிப் புரிந்து கொண்டதில் அப்பொழுதே அதாவது மகனின் காதல் விஷயம் தெரிவதற்கு முன்னரே மனதிற்குள் சற்றுப் பயந்து தான் போயிருக்கிறார் லோகநாதன்.

தாய் எட்டடி என்றால் குட்டி பதினாறடி என்பது பழமொழியாக இருக்க, தனது குடும்பத்தின் நிலையும் அதுவே அல்லவா. இதனால் ஏதாவது குடும்பத்தின் நிம்மதி குலைந்து விடுமோ என்று யோசித்திருக்கிறார்.

இதெல்லாம் இப்படியிருக்க அதை ஒட்டியே இப்பொழுது மகன் சொன்ன செய்தி அவரை மனதளவில் ஆடிப் போகச் செய்திருந்தது.

மற்றது எப்படியோ ஆனால் மகனின் திருமண விஷயத்தில் மனைவியின் எதிர்பார்ப்புகள் அத்தகையதாக இருந்ததே அதற்குக் காரணம்.

அது மட்டுமல்லாமல் மகனின் பிறந்தநாளான முதல் நாள் மனைவி அவனை வீட்டிற்கு அழைத்திருந்ததும் கூட அவனுடைய திருமண விஷயத்தைப் பற்றிப் பேசத் தான்.

அதாவது மகனே நேரில் வந்து எந்த சம்பந்தமென்பதை முடிவு செய்து கொடுத்து விட்டால் மேலே ஆக வேண்டியதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தான் அவர் மகன் வரவை எதிர்பார்த்துக் காத்தி



அதைக் கூடத் தானே முடிவு செய்து விடத் தான் அவர் விரும்பினார் என்றாலும், கணவன் சொன்னது அவரைச் சற்று யோசிக்க வைத்திருந்தது.

சரிதான்,

மகனோ கோபக்காரன், அழுத்தக்காரனும் கூட.

அவனிடம் சற்று விட்டுப் பிடித்துத் தான் போயாக வேண்டுமென்று மனதைத் தேற்றிக் கொண்டு காத்திருந்தார்.

நிலைமை இப்படியிருக்க மகனின் காதல் செய்தியைக் கேட்டு சந்தோஷப்படுவதா இல்லை கவலைப் படுவதா என்று லோகநாதனுக்குப் புரிந்திருக்கவில்லை.

ஆனாலும் ஏதோ தோன்றியவராக தனது கைபேசியை எடுத்து மகனுக்கு அழைத்தார்.

அப்படி அழைத்திருந்தவர் இப்போதைக்கு உன் தாயிடம் விஷயத்தைச் சொல்லாதே அவள் என்ன சொன்னாலும் அதை மறுக்கவும் செய்யாமல் ஒட்டியே பேசு. நான் கொஞ்சம் கொஞ்சமாக அவளுடைய மனதை மாற்றப் பார்க்கிறேன் என்று விட்டிருந்தார்.

இதைக்கூட ஏன் சொல்கிறேனென்றால் இப்பொழுதே இருப்பதைப் போட்டு உடைக்கப் போய் கடைசியில் நிலைமை விபரீதமாகி எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடக் கூடாது பார் என்றும்,

தந்தை சொன்னது ரகுநந்தனுக்கும் சரியென்று பட்டது.

அவர் முடிந்த அளவு பேசி வைத்தால், பிறகு தான் போய்த் தன் மனதை எடுத்துச் சொல்லி தாயின் மனதை மாற்ற முயற்சிக்கலாமென்று நினைத்துக் கொண்டான்.

என்ன. தான் நினைத்ததை விடவும் மேலும் சில நாட்கள் தாமதமாகலாம் பொறுத்துக் கொள்ள வேண்டியது தான் என்றும்.

சரிதான், ஆனால் தாமதிக்க வேண்டாமென்று மட்டும் சொல்லி விட்டு அழைப்பைத் துண்டித்திருந்தான் ரகுநந்தன்.

''வாங்க.''

''என்னமா, இன்னும் கொஞ்சம் நேரம் தூங்கியிருக்கலாமே.''

மனைவியைப் பார்த்துக் கேட்டார் லோகநாதன்.

''அது சரி, உங்க மகன் பண்றதுக்கு எனக்கு இனி அது ஒண்ணு தான் குறை...''

''என்னமா? என்னாச்சு?''

பதட்டத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு கேட்ட லோகநாதனுக்கு மகன் அழைத்துப் பேசியிருப்பானோ என்றிருந்தது.

ஆனால் மனைவி சொன்னது வேறாக இருக்க, எதுவும் பேசாமல் பார்த்தார்.

''என்னங்க நான் பாட்டுக்கு சொல்லிட்டிருக்கேன், நீங்க எதுவுமே பேச மாட்டேங்கறீங்க.''

''என்னமா பேசறது?''

''ம், எங்க மகளுக்கு வேற இடத்துல மாப்ள பாக்கறோம்னு கூப்புட்டு சொல்றாங்க.''

''பாக்கட்டுமே...''

''என்ன நீங்க...''

''பொறுமா, நான் சொல்றதக் கேட்டுட்டு அப்புறமாப் பேசு. ஒருத்தன் மனைவிய இன்னொ...



முடியாதுன்னு சொல்லுவாங்க, கடவுள் அந்தப் பொண்ணுக்கும் ரகுவுக்கும் முடிச்சுப் போட்டிருக்க மாட்டார் விட்டுடு.''

''எவ்வளவு சாதாரணமா சொல்றீங்க, அந்த சம்பந்தத்த தான் ரொம்பவும் எதிர்பாத்துட்டிருந்தேன்.''

''அந்த அளவுக்குப் பெரிய இடம், ஏன் அது நான் சொல்லி தான் உங்களுக்குத் தெரியணுமா என்ன...''

''அதுவும் தெரியும், உன் மகனப் பத்தியும் தெரியும்...''

''ஏன் அவனுக்கென்ன?''

''ம், நாம என்னதான் ஒரு கணக்கு வெச்சுட்டிருந்தாலும் அவன் வேற கணக்கல்ல வெச்சுட்டிருப்பான்...''

''ஏன் இப்படிச் சொல்றீங்க?''

''பின்ன அவன் உன்னயும் மீறுவான். நடுவுல உங்க ரெண்டு பேர் கிட்டயும் நான் மாட்டிக்கிட்டு முழிக்கணுமா?''

''என்ன நீங்க ஏதேதோ சொல்றீங்க...''

''அட என்ன நீ அதுக்குள்ள என்ன நடந்துடுச்சுன்னு இப்பக் கண்ணத் துடைச்சுட்டிருக்க?''

''எது வேணும்னாலும் எப்படி வேணும்னாலும் போகட்டும், ஆனா ரகுவோட கல்யாண விஷயத்துல நான் நினைக்கறது நடந்தாகணும்.''

மனைவியின் அந்தப் பிடிவாதமான குரல் லோகநாதனை மனதிற்குள் எரிச்சலடையச் செய்திருந்தது.

சிறுசிறு விஷயங்களில் கூட மகனிடம் மற்றவர்கள் சொல்வது நடக்காது. இவளானால்...

''என்னங்க, ஏன் மௌனமா இருக்கீங்க எதாவது

''நீயாச்சு, உன் மகனாச்சு, ரெண்டு பேரும் சேந்து என்ன முடிவெடுத்தாலும் எனக்கு சம்மதம் தான் விடு.''

''அது சரி, சரிதான் நான் அவங்கிட்டேயே பேசிக்கறேன்.''

''தாராளமாப் பேசு, ஆனா நான் சொல்றதத் தான் நீ செஞ்சாகணுங்கற மாதிரி பேசாத அவ்வளவுதான்.''

என்னதான் கிளம்பி வந்திருந்தாலும் ரகுநந்தனால் வேலையில் கவனத்தைச் செலுத்த முடிந்திருக்கவில்லை.

மனம் தன்யாவையே வட்டமிட்டது.

அவள் ஏன் இன்னும் வரவில்லை.

சரிதான்.

தனக்கே இப்படியிருக்கும் பொழுது பாவம் அவள்...

சரியாக அதே நேரம் தனது கைபேசி அழைக்க எடுத்துப் பார்த்தான்.

அழைப்பு தாயிடமிருந்து தான்.

தந்தை ஏதாவது பேசியிருப்பாரோ.

அதற்கு முன் அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தான் ரகுநந்தன்.

''சொல்லுங்கமா, எப்படியிருக்கீங்க?''

................

''ரொம்ப நல்லார்க்கேன், சொல்லுங்க என்ன விஷயம்?''

................

''சரிதான்மா நீங்க எந்தப் பொண்ணப் பாத்து வெச்சாலும் எனக்கு சம்மதம் தான்.''

................



''அப்படியெல்லாம் நீங்களா நினைச்சு கவலைப் பட்டுட்டிருக்காதீங்க. உங்களுக்குப் பிடிச்ச நீங்க பாக்கற பொண்ணு தான் எனக்கு மனைவியா வரப் போறாங்கறதுல உங்கள விடவும் நான் உறுதியா இருக்கேன்.''

................

''சரிதான் செலக்ட் பண்ணிட்டுக் கடைசியாக் கூப்புடுங்க அப்புறமா கிளம்பி வர்றேன். இங்கயும் எக்ஸ்டன்ஸன், புது கன்ஸ்ட்ரக்ஷன்னு வேல நிறைய இருக்கில்லையா?''

''நான் உங்க புள்ளமா, உங்க மனசுக்குப் பிடிக்காத எதையும் செய்ய மாட்டேன் போதுமா?''

................

''சரிதான் அந்தப் பொண்ணையே பாருங்க. கடைசில கூப்புடுங்க...''

''ம்ம். சரிதான்மா. ஆனா நானும் உங்ககிட்ட ஒண்ணு எதிர்பார்க்கறேம்மா... சொல்றேன் நீங்க பாத்து செலக்ட் பண்ற பொண்ண எனக்கும் பிடிச்சிருக்கணும். எனக்கு வரப் போறவ எப்படியிருக்கணுங்கற கற்பனையும் ஆசையும் எனக்கும் இருக்குமில்லையா? அதயும் நீங்க கொஞ்சம் நினைச்சுப் பார்க்கத்தான் வேணும்...''

''அப்ப சரிதான். எதுக்கும் வர்ற ஞாயித்துக்கிழமை ஊருக்கு வர்றேன். அப்பாவக் கேட்டதா சொல்லுங்க'' என்று விட்டு போனை வைத்திருந்தான் ரகுநந்தன்.

அப்படி வைத்திருந்தவனுக்கு இன்னதென்று சொல்ல முடியாத வண்ணம் மனம் வெறுப்படைந்திருந்தது. எரிச்சலாகவும்.

இது என்ன திருமண விஷயத்தில் கூட இப்படி வற்புறுத்துகிறார்கள் என்றிருந்தது.

தந்தை சொன்னது சரியாகத்தான் இருக்கிறது.

அதற்காக இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படி பூம்பூம் மாடு மாதிரி பிடிக்காததைச் செய்து கொண்டிருக்க முடியும்.

நிச்சயம் அது தன்னால் முடியாது.

ஆனாலும் தந்தையின் வேண்டுகோளுக்கிணங்க மறுக்காமல் தாயை ஒட்டியும் பேசியாயிற்று.

இதற்கு மேல் இப்படிப் பேசக்கூடாது, உண்மையைப் போட்டு உடைத்துவிட வேண்டியது தான்.

சரிதான்.

எதற்கும் சில நாட்கள் காத்திருக்கலாம்.

அதுதான் தனக்குப் பிடித்தால் தான் திருமணமென்று கடைசியில் ஒரு கொக்கியையும் வைத்தாயிற்றே.

காரணத்தைச் சொல்லாமல் சும்மா மறுப்பதை விட இது மேலல்லவா.

தாயும் தன்னுடைய இடத்திலிருந்து சற்று யோசிக்கட்டும்.

இந்த விஷயத்தில் அவருடைய ஆசையும் எதிர்பார்ப்பும் முடிவாகாது என்பதைத் தெரிந்து கொள்ளட்டும்...

மீண்டும் தனது கைபேசிக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினான்.

அலுவலக அழைப்பு தான்.

அதற்குப் பிறகு வேலையில் கவனத்தைச் செலுத்த வேண்டியதாகி விட்டிருக்க, மற்றதை மறந்து போனான் ரகுநந்தன்.

ஆனாலும் அவ்வப்பொழுது அனுமதியின்றி மனதிற்குள் தன்யா வந்து போனாள்.



அவளை நினைத்தாலே அவனையே அறியாமல் ஒருவித இன்ப வேதனை வந்து நெஞ்சைக் குறுகுறுக்கச் செய்ததோடு அவஸ்தையையும் கொடுத்துக் கொண்டிருந்தது.

ஆனால் போகப்போக அதற்கும் வழியில்லாமல் முற்றிலுமாக வேலையில் மூழ்கிப் போய் விட்டிருந்தான்.

மீண்டும் நடப்பிற்கு வந்து நேரத்தைப் பார்த்தவன் திகைத்துப் போய் விட்டிருந்தான்.

இவ்வளவு நேரமா கடந்து விட்டிருக்கிறது.

நேரம் மதியம் மூன்றாகியிருக்க, போதும் இனி மதிய உணவிற்குப் பிறகு வேலையைத் தொடர்ந்து கொள்ளலாமென்று அனைத்தையும் எடுத்து வைத்தான்.

அப்பொழுது தான் அது அவனுக்கு மனதில் பட்டது.

தன்யா எங்கே,

எப்படி அவளை மறந்தோம்.

உடனே அவளுக்கு அழைப்பதற்காகத் தனது கைபேசியை எடுத்திருந்தான்.

மீண்டும் என்ன தோன்றியதோ, நேரிலேயே சென்று பேசிக் கொள்ளலாமென்று அதைப் பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டு எழுந்தான்.

மிகுந்த ஆவலுடன் வந்தவன், தன்யாவை அவளுடைய இடத்திலும் காணாது திகைத்தான்.

சரிதான் சாப்பிடப் போயிருப்பாளாய் இருக்கும்.

ஆனால், தன்னிடம் சொல்லாமல் எப்படி...

முதலில் அன்று அவள் வேலைக்கு வந்தாளா.

காலையிலிருந்தே அவளைத் தான் பார்த்திருக்காதது நினைவிற்கு வர, இப்பொழுது யோசிக்காமல் அவளுடைய மொபைலுக்கு அழைத்திருந்தான்.

ஸ்விட்ச் ஆஃப் என்று வர, இப்பொழுது மேலும் அதிகமாகத் திகைத்துப் போனான்.

வேகமாக வெளியே வந்தவன், தனது வீட்டிற்கு அருகிலிருக்கும் தன்யாவின் வீட்டை நோக்கிப் போனான்.

முன்புறக் கதவு சும்மா மூடியிருக்க, தன்யா என்று அழைத்துக் கொண்டே உள்ளே போனான்.

அப்படியே அவளுடைய அறைக்கும் வந்திருந்தான். இரவு நடந்தது தான் நினைவிற்கு வந்தது.

ஆனால் தன்யா எங்கே...

கை கால்கள் அனைத்தும் விட்டுப் போவதைப் போலிருக்க, மனதிற்குள் குபீரென்றாகி விட்டிருந்தது.

ஒருவேளை...

இரவு நடந்ததை நினைத்து இப்படிச் செய்து விட்டோமே என்று ஏதாவது செய்து கொண்டாளோ,

அப்படி எண்ணியது தான் தாமதம் நடுங்கிப் போய் விட்டிருந்தான் ரகுநந்தன்.

ஆனால் உடனே மீண்டும் நடப்பிற்கு வந்தவனாய் அப்படியிருக்காது என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

அவளும் ஆசையாத்தானே...

அப்படியானால் இப்பொழுது அவள் எங்கே.

அப்பொழுது தான் அங்கு டேபிளின் மீதிருந்த அந்தக் காகிதத்தைக் கண்டான் ரகுநந்தன்.

தன்யாவின் கையெழுத்து தான்,

அதைவிட வேகமாகப் படித்தும் இருந்தான்.

அதில் எழுதியிருந்தது இது தான்.



'யோசிக்காமல் பெருந்தவறு செய்து விட்டேன். அதை நினைத்து இப்பொழுது மிகுந்த வெறுப்பும் வேதனையும் அடைகிறேன். இவ்வளவிற்குப் பிறகு என்னால் இனிமேல் இங்கு நிம்மதியாக ஏன் இங்கு இருப்பதைப் பற்றிக் கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை. அதற்கு மேல் சரிதானென்று இருக்க முயன்றாலும் என் மனசாட்சியே என்னைக் கொன்று விடும். அதனால் இங்கிருந்து செல்கிறேன். எந்தத் தவறான முடிவையும் எடுக்க மாட்டேன். ஆனால் என்னைத் தேட முயன்றால் அதையும் செய்யத் துளியும் தயங்க மாட்டேன் என்பதையும் மறந்துவிட வேண்டாம்...'

தன்யா.

அதைப் படித்து முடித்த ரகுநந்தனுக்குக் கோபத்தில் கண்கள் சிவந்து விட்டிருந்தன.

யோசிக்காமல் பெருந்தவறு செய்து விட்டாளாமே.

அதுவும் அதை நினைத்து இப்பொழுது வெறுப்பும் வேதனையும் அடைகிறாளாமா.

என்ன முயன்றும் ரகுநந்தனால் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியவில்லை.

வேதனையில் புழுவாய்த் துடித்தான்.

தேடக் கூடாதாமே.

தேடினால்...

கண்ணோரம் உணர்ந்த குளிர்ச்சியில் தான் கண்கள் கலங்கி விட்டிருப்பதையே உணர்ந்தான்.

நூறில் ஒரு பங்கு வேண்டாமென்று மறுத்திருந்தாலும் கூட அதற்குத் தான் மதிப்பளித்திருப்பேனே.

அவளும் விரும்பியதால் தானே...

ஏன் தன்னளவு அவளும் விரும்பத்தானே செய்தாள்.

அது தெரிந்ததால் தானே...

உடலும், உள்ளமும் ஒருசேர நடுங்கி விட்டிருக்க என்ன வார்த்தை எழுதி வைத்திருக்கிறாள் என்றிருந்தது.

மனம் ஆற மறுத்தது.

துளியும் நிம்மதியின்றித் தவித்தான்.

தன் மனதிற்குத் தோன்றிய அளவில் அவளிடம் தொடர்பு கொள்ளவும் முயன்றான்.

ஆனால் பலன் தான் இல்லை.

அதற்கு மேல் தேட தைரியமிருக்கவில்லை.

அதை எப்படியோ உணர்ந்து கொண்டு சொன்னதைப் போலச் செய்து விட்டால்.

அதற்காக அவன் வெறுமனே சும்மாவும் இருந்து விட வில்லை.



# 19

பெங்களூரில் ஒரு பெண்கள் விடுதியில் வந்து தங்கி விட்டிருந்தாள் தன்யா.

அவள் மென்பொருளில் நிறையப் படித்திருந்ததால் அது சம்பந்தமாக அங்கு பக்கத்திலேயே வேலையும் கிடைத்திருந்தது.

அதனால் பணத் தேவையும் பூர்த்தியடைந்திருந்தது.

தானுண்டு தனது வேலையுண்டு என்று இருக்க லானாள்.



அவசியமின்றி மனதை அலைபாய விட்டதின் பலனாக அனுபவிக்க நேர்ந்த வேதனை மனதைப் பசசை ரணமாக்கியிருக்க அதிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு விட்டிருந்தாள்.

ஆனாலும்,

எவ்வளவு பெரிய தவறைச் செய்து விட்டிருக்கிறோம்.

அதுவும் தாயை இழந்து முழுமையாக மாதம் கூட முடிந்திருக்காத நிலையில்,

நடந்து விட்டதையே எண்ணி எண்ணி மேலும் ஓடாய்த் தேய்ந்து கொண்டிருந்தாள்.

அவ்வளவிற்குப் பிறகும் கூட ரகுநந்தனை மறக்க முடிந்திருக்காதது தான் மிகப் பெரிய வேதனையாகி யிருந்தது.

மறக்க முடியாதது மட்டுமா.

அவனை அப்பொழுதே பார்த்தாக வேண்டும்போல,

அவனுடைய அணைப்பில் தனது வேதனை அனைத் தையும் மறக்க வேண்டும் போல,

இப்படியெல்லாம் வெட்கம் கெட்டு எண்ணிய மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளத் தெரியாமல் தனிமையில் கண்ணீரிலேயே கரைந்தாள்.

கண்காணாமல் ஓடி வந்ததற்குக் காரணமே அவனாக இருக்கும் பொழுது மீண்டும் அவனுக்காக ஏங்கும் மனதை என்னவென்று சொல்வது.

அவனானால் தாய் பார்க்கும் பெண்ணை மணந்து கொள்ளவே தயாராய் இருக்கிறான்.

தன் உடலுக்காக மட்டுமே...

ஐயோ தாங்க முடியவில்லையே அம்மா என்று கதறித் தீர்த்தாள்.

அழுகைக்கு எல்லையே இல்லாமல் இது என்ன வாழ்க்கை...

ஒருவேளை தான் கிளம்பி வந்திருக்கக் கூடாதோ,

அவனுடைய கையில் காலில் விழுந்தாவது தன்னை மணந்து கொள்ளச் சொல்லிக் கேட்டிருக்க வேண்டுமோ.

போனால் போகிறதென்று அவனும் இறங்கி வந்திருப்பானோ.

அப்படி எண்ணியவள் பிறகு அதற்காகத் தன்னையே நொந்து கொண்டாள்.

அப்படிக் கூட வாழ வேண்டுமா.

அதற்கு உயிரை விட்டு விடலாமே.

ஆனாலும் தனது ரகுநந்தன் எப்படிப் பொய்த்துப் போனான்.

என்னால் நம்ப முடியவில்லையே... ஏன் ஒன்றுமே முடியவில்லையே அம்மா... என்று மீண்டும் மீண்டும் கண்ணீர் வடித்தாள்.

இப்படியே கண்ணீரிலேயே கரைந்து கொண்டிருந்தது அவளுடைய வாழ்க்கை.

ஆனாலும் அவள் தங்கியிருந்தது ஒரு தரமான பெண்கள் விடுதியென்பதால் அங்கு நிறைய கட்டு திட்டங்களும் இருந்தன.

இதிதை இந்திந்த நேரத்திற்குச் செய்தாக வேண்டுமென்றிருக்க, அதுவே அளை நடத்திச் சென்றதென்று கூடச் சொல்லலாம்.



அவள் அந்த விடுதிக்கு வந்தும் கூட இரண்டு மாதங்கள் ஓடிப் போய் விட்டிருந்தன.

நாட்கள் மாதமாகி, பிறகு அதுவே வருடமாகிப் பிறகு இரண்டு வருடங்களும் ஆகி விட்டிருந்தன.

நாட்கள் இறக்கையைக் கட்டிக் கொண்டு பறப்பதைப் போலிருந்தது.

ஆனாலும் அவளுடைய வேதனை துளியும் குறைந்திருக்கவில்லை.

மாறாக அதிகமாகிக் கொண்டேதான் சென்றது.

இப்படியே போனால் கடைசியில் ஒருநாள் புத்தி பேதலித்து விடுமோ என்று கூட பயந்து போய் விட்டிருந்தாள்.

ரகுநந்தனுக்காக ஏங்கிய மனதை வழக்கம் போலக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் வேதனையிலேயே கரைந்தாள்.

தன்னுடைய அன்பும் காதலும் மட்டும் உண்மையாக இருந்து என்ன பலன்.

அவனும் அப்படி நினைத்திருந்தால் வேறு பெண்ணை மணந்து கொள்ளச் சம்மதித்திருப்பானா என்ன.

இந்நேரம் அவனுக்குத் திருமணம் நடந்திருக்கும்.

அது மட்டுமா?

ஒரு குழந்தைக்குக் கூடத் தந்தையாகி இருப்பான்.

தன்னை எப்போதாவது நினைத்துக் கொள்வானா.

அதெப்படி நினைத்துக் கொள்வான். அவனுக்கோ அவனுடைய தொழில், குடும்பம், அன்பான, ஆசையான மனைவி என எத்தனையோ இருக்குமே.

அதை கவனித்துக் கொள்ளவே நேரமில்லாமல் இறக்கை கட்டிக் கொண்டு பறந்து கொண்டிருப்பாளே.

திடீரென்று ஏதோ தோன்றியவளாய்க் கடிகாரத்தில் நேரம் பார்த்தாள் தன்யா.

வேலைக்கு நேரமாகிக் கொண்டிருப்பது தெரிய, சென்று கிளம்பினாள்.

கிளம்பி முடித்தவள் இனி கீழே சென்று டிபனை முடித்துக் கொண்டு கிளம்பினால் சரியாக இருக்குமென்று வெளியே வந்து தனது அறையைப் பூட்டி விட்டுப் படியில் இறங்கினாள்.

எதிர்ப்பட்டவர்களிடம் ஒரு புன்னகையை மட்டும் பதிலாகக் கொடுத்து விட்டு நடந்தாள்.

தேவையின்றிப் பேசாமல் எந்த வம்பிற்கும் போகாதவள் என்பதால் அவளுக்கு அங்கு நல்ல மதிப்பிருந்தது.

அதிலும் அவளுடைய அறிவிற்கும் அழகிற்கும் அங்கும் சரி வேலை செய்யும் இடத்திலும் சரி வலிய வந்தே பேசினார்கள்.

ஆனாலும் ஒரு சிறு புன்னகையுடன் அதற்கு இடம் கொடுக்காமல் தானுண்டு தனது வேலையுண்டு என்று சென்று விடுவாள்.

வழக்கம் போல அன்றும் தனது கம்பெனிப் பேருந்துக்காகக் காத்திருந்தாள் தன்யா.

வழக்கத்தை விடவும் கூட நேரம் அதிகமாகி விட்டிருக்க அந்த சிறு படபடப்பில் தன்னருகில் ஒரு கார் வந்து நின்றதைக் கூட அவள் கவனிக்கவில்லை.

தன்யாம்மா.



யாரோ தன்னை அழைப்பதைப் போலிருக்கத் திரும்பினாள்.

அப்படித் திரும்பியவள் அங்கு நின்று கொண்டிருந்த லோகநாதனைக் கண்டு அதிர்ச்சியும், ஆச்சரியமும் ஒருங்கே கொண்டாள்.

''ஸா....''

''நீ பேசாதமா.''

லோகநாதனின் அந்த வார்த்தையில் தன்யாவின் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

''நாங்கெல்லாரும் இன்னும் உயிரோட இருக்கோங்கறதாவது தெரியுமா உனக்கு?''

''ஐயோ ஸார்...''

''முதல்ல அந்த ஸார விடு, அதனால தான், கணக்கு தீர்ந்துடுச்சுன்னு கிளம்பி வந்துட்டியா?''

தீர்கின்ற கணக்கா இது.

அப்படி மட்டும் தீர்க்க முடிந்திருந்தால் தான் பரவாயில்லையே.

அதற்கு மேல் முடியாமல் கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு கதறி விட்டிருந்தாள் தன்யா.

அதைப் பார்த்த லோகநாதனுக்கும் லேசாகக் கண்கள் கலங்கி விட்டிருக்க ''வேண்டாம்மா, வா முதல்ல கார்ல வந்து உக்காரு'' என்று கார்க் கதவைத் திறந்து விட்டார்.

அவள் அமர்ந்து கொண்டதும் தானும் காரில் ஏறி அமர்ந்திருந்தார் லோகநாதன்.

வெகு நேரமாகியும் தன்யாவின் அழுகை அடங்கியிருக்காதது தெரிய பாவம் அவளும் ஒன்றும் நிம்மதி

யாக இல்லை போலிருக்கிறதென்று உள்ளம் உருகி விட்டிருந்தது.

''வேண்டாம் தன்யாம்மா'' என்று மீண்டுமொரு முறையும் சொன்னார்.

மேலும் சில நிமிடங்களில் தன்னை சமாளித்துக் கொண்டு நிமிர்ந்த தன்யா லோகநாதன் தன்னை கவனித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

''சொல்லுடாம்மா என்ன பிரச்சன, ஏன் அப்படி திடீர்னு கிளம்பி வந்த?''

அவருடைய கேள்வியில் பாவமாக அவரை நிமிர்ந்து பார்த்தாள் தன்யா.

இப்படி நேரடியாக விஷயத்திற்கே வந்தால் என்ன சொல்வது, எதைச் சொல்வது.

உங்கள் மகனிடம் ஏமாந்து போய் விட்டேன் என்றா.

ஆனால் அதைக் கேட்டால் இந்த வெள்ளை உள்ளம் கொண்ட மனிதர் மனம் துடித்துப் போய் விட மாட்டாரா.

முதலில் ஏமாந்து விட்டேனென்று சொல்வதே அநியாயமல்லவா.

அப்படியென்ன தன்னை பலவந்தப்படுத்தியா...

''என்னமா?''

.............

''உன் ஒருத்தியால அங்க மூணு பேர் தினம் தினம் துடிச்சுட்டிருக்கறது தெரியுமா உனக்கு?''

கடவுளே, என்ன சொல்கிறார் இவர்.

''நாங்க கூடப் பரவாயில்லமா, ரகுவத்தான் கண் கொண்டு பாக்க முடியல.''



''அப்படியானால்...

''என்ன பாக்கற? உன்ன விரும்பறதாவும் கல்யாணம் பண்ணிக்க ஆசப்பட்றதாவும் அவன் என்னக் கூப்புட்டு சொன்ன அன்னைக்கு தான் நீயும் கிளம்பி வந்திருக்க. நீ அப்படிக் கிளம்பி வந்ததுக்கு என்ன காரணமோ தெரியாது. ஆனா அவன் உன்னைத் தவிர வேற எந்தப் பொண்ணையும் மனசால கூட நினைச்சுப் பாக்க முடியாது. கல்யாணம்னு ஒண்ணு நடந்தா அது உன்னோட தான்னு முடிச்சுட்டான்...''

லோகநாதன் சொல்லச் சொல்ல அவளையறியாமலேயே மாலை மாலையாகக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது தன்யாவிற்கு.

''தவமிருந்து பெத்த ஒரே புள்ளமா, எனக்குக் கூடப் பரவாயில்ல அவங்கம்மா... உன் அத்தைக்கு மகன் அப்படிச் சொல்லிட்டதுல பைத்தியம் பிடிக்காதது தான் குறை.''

''தினம் தினம் கண்ணீரிலேயே கரைஞ்சுட்டிருக்கா, எந்தக் கடவுள் செஞ்ச புண்ணியமோ என் கண்ல பட்டுப் பால வார்த்த. எங்க இருக்க சொல்லு போய் எல்லாத்தையும் ஸெட்டில் பண்ணிட்டுக் கிளம்பலாம்...''

.............

''என்னம்மா?''

''அதுக்கு ரெண்டு மூணு நாளாகும்...''

''ஏன் அப்படி... சரிதான் எப்படியானாலும் உன்னக் கூட்டிட்டுத் தான் ஊர் திரும்பப் போறேன். அதனால நீயும் சீக்கிரம் கிளம்பற வேலையப் பாரு...''

சரி என்பதைப் போலத் தலையை ஆட்டினாள் தன்யா.

''அதுக்கு முன்னாடி ரகுகூடப் பேசிட்டியா?''

''என்னடாம்மா...''

''நேர்லயே.. பேசிக்கறேன்...''

''சரிதான். நான் மட்டும் கூப்புட்டு விஷயத்த சொல விட்டேன். பாவம் இனியாவது கொஞ்சம் நிம்மதியாத் தூங்கட்டும்...''

லோகநாதன் சொல்லச் சொல்ல, தன்யாவிற்கோ மனதிற்குள் வேறு எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

## 20

தொலைபேசியில் சொல்லியிருந்தது போல இரண்டு நாட்களில் தன்யாவுடன் ஊர் திரும்பியிருந்தார் லோகநாதன்.

என்னதான் தன்யாவை அழைத்து வந்து விட்டிருந்தாலும் உடனே பிரச்சனை தீர்ந்து விடாதென்பது அவருக்கும் தெரிந்தே இருந்தது.

மகனின் குணம் அறிந்தவரென்பதாலேயே அப்படி எண்ணினாரென்று சொல்லலாம்.

மகனிடம் போலவே மனைவிக்கு விஷயத்தை அழைத்துச் சொல்லியிருந்ததால் அவரும் தனது மருமகளைப் பார்ப்பதற்காக ஊரிலிருந்து கிளம்பி வந்திருந்தார்.

முன்பு போல இல்லாமல் அவரும் இப்பொழுது நிறைய மாறியிருந்தார்.



எப்படியோ இனிமேலாவது அனைத்துப் பிரச்சனைகளும் சரியாகி மகனுக்கு நல்வாழ்வு அமைந்தால் அதுவே போதுமென்று மனதார எண்ணினார்.

தனது மாமனாருடன் வந்து இறங்கியவளுக்கு பழைய நினைவுகளனைத்தும் முட்டி மோதிக் கொண்டு நினைவிற்கு வரலாயின.

நேற்று தான் கிளம்பிச் சென்றதைப் போல மனம் வலித்தது.

பச்சை ரணமாய்.

ரகுநந்தனை எப்படி எதிர்கொள்ளப் போகிறோமென்ற எண்ணமே நெஞ்சை நடுங்க வைத்திருந்தது.

ஒருபுறம் அப்படி எண்ணிய மனம், இன்னொரு பக்கம் அவனுக்காக அவனை மீண்டும் பார்க்கப் போகும் அந்த நிமிடத்திற்காக ஏங்கியது.

கோபம் கொள்வானோ.

அல்லது பேசாமல் சென்று விடுவானோ.

என்னவோ இரண்டாவதுதான் நடக்குமென்று தோன்றியது.

''பெட்டி படுக்கைகளையெல்லாம் ஆளுங்கல விட்டு எடுக்கச் சொல்லிடலாம். நீ வாடாம்மா.''

மாமனார் அழைக்க, அப்படித்தான் அழைக்க வேண்டுமென்று விட்டிருந்தார் லோகநாதன்.

அவருடன் அவரைப் பின் தொடர்ந்து நடந்தாள் தன்யா.

அவர் தங்களுடைய வீட்டிற்குச் செல்வது தெரிந்தது.

சற்று தொலைவில் தெரிந்த புதிய கட்டிடங்கள் [illegible] விரிவுபடுத்தப்பட்டு விட்டதை சொல்லாமல் சொன்னது.

அது மட்டுமா.

இன்னும் எத்தனை எத்தனையோ மாற்றங்கள் இதே போலத் தன்னுடைய ரகுநந்தனும் மாறியிருப்பானோ.

ஏனோ தொண்டையில் ஒரு பெரிய உருண்டை வந்து அடைத்துக் கொண்டதில் இயல்பாக மூச்சு விடக் கூட முடியாதது போலத் திணறினாள்.

கால்களிரண்டும் பின்னிக் கொண்டு விட்டது போல அவளால் தொடர்ந்து நடக்கக் கூட முடிந்திருக்கவில்லை.

"என்னமா?"

மாமனார் கேட்க "ஒண்ணுமில்ல மாமா" என்று அவரைத் தொடர்ந்தாள்.

மனமும் பாறையைப் போல கணக்க, அப்படியே திரும்பி ஓடி விடலாம் போலத் துடித்த மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"உன் அத்தையும் இருக்காங்க, கொஞ்சம் பாத்துப் பேசுடாம்மா..."

அத்தையுமா.

அவரையும் இப்பொழுதே எதிர் கொண்டாக வேண்டுமா.

"வாங்க."

முன்னே வந்து எதிர்கொண்ட மனைவியிடம் "வாறேம்மா" என்ற லோகநாதன் "நம்ம மருமகள்" என்று பின்னால் வந்த தன்யாவைத் தான் ஒதுங்கிக் கொண்டு கைகாட்டி அறிமுகப்படுத்தினார்.

அதேபோல "உன் அத்தைமா" என்று மனைவியை தன்யாவிடமும்,



பயமும் பதட்டமும் ஒன்றுக்கொன்று போட்டி போட மிகுந்த குற்ற உணர்ச்சியுடன் தனது அத்தையைப் பார்த்தாள் தன்யா.

மனதிற்குள் எப்படி எப்படியோ எண்ணி அஞ்சிக் கொண்டிருந்த கலைவாணிக்கு அதாவது ரகுநந்தனின் தாய்க்கு தன்யாவைப் பார்த்து எல்லையற்ற ஆனந்தம்.

இவ்வளவு அழகா தனது மருமகள்.

சரிதான், மகனின் தேர்வாயிற்றே பிறகு அதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்.

அது மட்டுமா.

அனைத்து வகையிலுமே மகனுக்குப் பொருத்தமான பெண்ணாக அல்லவா தெரிகிறாள்.

தோற்றத்தில் தானே எதிர்பார்த்திராத அளவிற்குப் பிரமாதம் தான். மற்றபடி...

"வாம்மா."

..............

"வேலைக்குப் போயிட்டிருந்தியா?"

கலைவாணி கேட்க "ஆமாம் அத்தை" என்றாள்.

தன்யா அத்தையென்று அழைத்தது அவரது மனதை லேசாக்கியிருந்தது.

"வாம்மா இங்க வந்து உக்காரு."

தனது அத்தை காட்டிய இடத்தில் அமர்ந்தாள் தன்யா.

"கட்டாயப்படுத்தி அழைச்சுட்டு வந்துட்டாரா?"

கலைவாணி கேட்க "இல்லில்ல அத்தை" என்று அவளையறியாமலேயே சொல்லியிருந்தாள்.

சில நிமிடங்களில் அத்தை கொண்டு வந்து கொடுத்த டிபனை அவருடைய வார்த்தைக்காக எடுத்துக் கொண்டாள். தன்யா ஆனாலும் கொஞ்சத்திற்கு மேல் முடிந்திருக்கவில்லை.

''என்னமா எடுத்துக்கோ.''

''இல்ல அத்தை போதும்.''

''காபியா டீயா குடிக்க என்ன குடுக்கட்டும்?''

''காபி அத்தை.''

தொடர்ந்து சில நிமிடங்களில் தனது அத்தை கொண்டு வந்து கொடுத்த காபியை வாங்கிக் கொண்டவள் ''உங்களுக்கு...'' என்று ஏதோ கேட்க வந்தாள்.

''நான் ஆச்சுமா.''

''மாமாவுக்கு...''

''அவர் தான் கடைக்குக் கிளம்பிட்டாரே. வரட்டும்.''

தன்யா காபியைக் குடிக்கத் தொடங்கியிருக்க அவள் முடிக்கும் வரை எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தார் கலைவாணி.

அவள் குடித்து முடித்ததும் ''நான் கேக்கற கேள்விகளுக்கு ஒளிவு மறைவில்லாம பதில் சொல்லுவேன்னு நினைக்கறேன்'' என்றார்.

தனது அத்தையின் வார்த்தைகளில் பதட்டத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தாள் தன்யா.

''என்னமா சொல்லுவியா?''

''சொல்றேன் அத்தை...''

''உனக்கும் ரகுவுக்கும் இடையில என்ன பிரச்சனை?''



..................

''என்னமா பேசு.''

..................

''அவனைப் பிடிக்காமத்தான் கிளம்பிப் போய்ட்டியா?''

''ஐயோ இல்ல அத்தை...''

''அப்புறம் ஏன் அப்படிக் கிளம்பிப் போன?''

..................

''நான் சும்மா பொழுது போகாம பேசிட்டிருக்கேன்னு நினைச்சுட்டிருக்கியாம்மா?''

''இல்ல அத்தை...''

''அப்புறம் பதில் சொல்லு ஒரே புள்ளமா அதுவும் எத்தன எத்தன எதிர்பார்ப்புகளோட இருந்தேன் தெரியுமா? ரகுவப் பிடிக்காமலோ இல்ல வேண்டாம்னோ தான் கிளம்பிப் போயிருக்க. அது புரியாம அவர் உன்னை வற்புறுத்தி அழைச்சுட்டு வந்திருக்கார்.''

''ஐயோ இல்ல அத்தை. இல்லவே இல்ல. ரகுவ நான் உயிருக்குயிரா விரும்பறேன், அவரில்லாத வாழ்க்கைல எனக்கும் ஒண்ணுமே இல்ல'' என்று சொல்லி முடிப்பதற்குள் கண்கள் கலங்கி விட்டிருக்க, உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''நம்பக் கொஞ்சம் கஷ்டமா இருக்கே, நீ சொல்றது தான் உண்மைன்னா பிரிஞ்சு போயிருக்க வேண்டிய அவசியமே இல்லையே...''

..................

''என்னமா?''

"நீங்க... நீங்க தேர்ந்தெடுத்த பொண்ணக் கல்யாணம் பண்ணிக்க அவர் போன்ல சம்மதம் சொல்லிட்டிருந் ததக் கேட்க நேர்ந்தது அதனால தான்..."

"ம்."

"அவரோட வாழ்க்கைக்கு நான் தடையா இருக்கக் கூடாதுன்னு..."

"அது மட்டும் தான் காரணமா?"

..................

"ம்..."

"எங்கூட சும்மா விளையாட்டுக்கு தான் பழகினா ரோன்னு..."

"அப்ப இப்ப அப்படியில்லேன்னு உறுதியாயிடுச்சா?"

"மாமா உண்மையைச் சொன்னார் அதான்..."

ஏனோ தன்யா சொல்லும் காரணத்தைக் கலைவாணி யால் ஏற்றுக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஒரு பக்கம் உயிருக்குயிராக விரும்புகிறேன் என்கிறாள். இன்னொரு பக்கம் சிறு காரணத்திற்காக சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிப் போயிருக்கிறாள்.

தான் நினைத்ததை அப்படியே கேட்டார் கலை வாணி.

"மாமாவும் அவரும் எனக்காக செஞ்ச உதவிகள் அவ் வளவு சாதாரணமானது இல்ல அத்தை. அதான் உங்க குடும்பத்து சந்தோஷத்துக்காக, அதுவும் அவரே தனது சம்மதத்தத் தெரிவிச்சதக் கேட்டதுக்கப்புறம் என் காதல தியாகம் பண்றது தப்பில்லன்னு மனசக் கல்லாக்கிக் கிட்டு தான்..."



அதைச் சொல்லும்போது, ஏன் அதை அப்படியே சொல்லக் கூட முடியாமல் சிரமப்படும் தன்யாவின் வேதனையை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

பரவாயில்லை, குணத்திலும் பிரமாதமான பெண் தான்.

இந்த விஷயத்திலும் கூட மற்றவர்களின் முக்கிய மாகத் தங்களுக்காக யோசித்திருக்கிறாளே,

"ஒருவேள ரகு வேற பொண்ணக் கல்யாணம் பண் ணிட்டிருந்திருந்தா..."

"அவரோட சந்தோஷத்துக்கும், நிம்மதிக்கும் முன் னாடி எனக்கு மத்ததெல்லாம் ரெண்டாம் பட்சம் தான், என் காதல் உட்பட..."

தன்யாவின் வார்த்தைகளில் நெஞ்சு உருகி விட் டிருக்க, "நீங்க ரெண்டு பேரும் இத்தனை நாளாப் பிரிஞ்சு ஆளுக்கொரு மூலைல கஷ்டப்பட்டுட்டிருந்த துக்கு நானும் கூட ஒரு விதத்துல காரணம் தாம்மா மன் னிச்சுடு" என்றார்.

"ஐயோ அத்தை..." என்றவள் இப்பொழுது சுத்தமாகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் கண்ணீர் வடிக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

"பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க அத்தை, உங்க எல்லாரோட குணத்துக்கும் முன்னாடி நானெல் லாம் நிக்கக் கூட முடியாது..."

"இல்லடாம்மா முன்ன நான் எப்படியிருந்தேன்னு உனக்குத் தெரியாது. என்னால கஷ்டப்பட்டது நீ மட்டும் இல்ல யாது. மாமா முக்கியமா ரகு..."

''ரகுவ நினைச்சா தாம்மா எனக்கு ரொம்ப பயமா இருக்கு. அவன் ஊருக்கு வந்து ஏன் எங்கூட மனை விட்டு நல்லாப் பேசிக்கூட எத்தன மாசங்களாச்சு தெரியுமா...''

கடவுளே இவரிடமே அப்படியென்றால் தன்னிடம்,

ஏனோ தன்யாவால் தொடர்ந்து நடக்கப் போவதைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

தாயிடமே கோபப்படுகிறானென்றால் தன்னிடம்...

சந்தேகமே இல்லை. தன்னை வெறுத்து ஒதுக்கி விடத் தான் போகிறான்.

அப்படி எண்ணத் தோன்றியது தான் தாமதம், மனம் மிகுந்த வேதனைக்குள்ளாகி விட்டிருந்தது தன்யாவிற்கு.

இத்தனை நாட்களுக்குப் பிறகும் அவனுடைய வெறுப்பு உமிழும் முகத்தைத் தான் தான் பார்க்க வேண்டுமோ.

முதலில் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி தனக்கு இருக்கிறதா.

இதற்குத் தான் வராமலே இருந்திருக்கலாமோ.

இந்த வேதனைக்கு அந்த வேதனையைக் கூட சமாளித்துக் கொண்டிருக்கலாம் போலிருக்கிறதே.

''என்னடாம்மா...''

தனது அத்தையின் குரலில் தான் மீண்டும் நடப்பிற்கு வந்திருந்தாள் தன்யா.

''அட, அதுக்குள்ள என்னாச்சு? அவனோட கோபமே உம்மேல அவனுக்கிருக்கற அபரிதமான அன்பாலதானமா. கவலைப்படாத எல்லாம் கூடிய சீக்கிரம் சரியாயிடும்.''



கலைவாணி சொல்ல, சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் தன்யா.

சரியாகி விடும் தான், ஆனால் அதற்கு முன் தான் ரகுவை எதிர்கொண்டாக வேண்டுமே.

ரகுநந்தனின் கோபத்தின் வலிமையை முழுமையாக அறிந்திருந்தவள் என்பதாலேயே மனதிற்குள் மிகவும் நடுங்கிக் கொண்டிருந்தாள் எனலாம்.

''சரிடாம்மா எழுந்து வா பாக்கவே ரொம்ப அசதியாத் தெரியற முதல்ல குளிச்சுட்டு வந்துடு.''

அத்தை அழைக்க, ''அப்புறமா...'' என்று ஏதோ சொல்ல வந்தாள்.

''இன்னும் கொஞ்ச நேரத்துல அவங்க ரெண்டு பேரும் வந்துடுவாங்கமா. இப்பவே வந்து குளிச்சுட்டு ரெஸ்ட் எடுத்துட்டிரு வா.''

மீண்டுமொரு முறையும் தனது அத்தை அழைக்க, எழுந்து விட்டிருந்தாள் தன்யா.

## 21

எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போலவே இரண்டு மணி நேரங்களில் ரகுநந்தனும் லோகநாதனும் வர, அப்படியே பூமிக்குள்ளேயே கால்களிரண்டும் வேரோடி விட்டாற்போல, உறைந்து நின்று விட்டிருந்தாள் தன்யா செய்வதறியாது.

அவளுடைய நிலையைக் கலைவாணியால் புரிந்து கொள்ள முடிந்தது. மனமும் உருகி விட்டிருந்தது.

''சாப்புட்லாமா?'' என்று வந்த கணவனிடம் ''எல்லாம் தயாரா இருக்கு வாங்க'' என்றவர் ''ரகு எங்க?'' என்று கேட்டார்.

''அவன் ரூமுக்குப் போனான் குளியல் போட்டுட்டு வருவான்னு நினைக்கறேன், அப்புறம் மருமக எங்க?''

''உள்ள இருக்கா'' என்றவர் ''பாவம் ரகு என்ன சொல்லிடுவானோன்னு ரொம்பவும் பயந்து போயிருக்கா'' என்றார்.

மனைவியின் வார்த்தைகளுக்கு லோகநாதன் பதிலெதுவும் சொல்லியிருக்கவில்லை.

அதை அவள் தான் எதிர்கொண்டாக வேண்டுமென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

''சாப்பிட ஏதாவது கொடுத்தியா?''

''ம், ரகு வந்துட்டான் சரி வாங்க டிபன் எடுத்து வைக்கறேன்'' என்று மனைவி நகர,

''டிபன் சாப்பிடலாம் வாப்பா'' என்று மகனை அழைத்தார் லோகநாதன்.

''மருமகளயும் கூப்புடு'' என்று சொல்லிக் கொண்டே முதலில் அவர் வந்து அமர்ந்திருக்க, தொடர்ந்து ரகுநந்தனும் வந்திருந்தான்.

''வாப்பா எப்படியிருக்க?''

தாய் கேட்க ''நல்லார்க்கேம்மா, நீங்க எப்ப வந்தீங்க?'' என்று கேட்டான் ரகுநந்தன்.

''சாயங்காலம் அப்பதான் நீ கடைக்குக் கிளம்பிப் போனதா சொன்னாங்க'' என்றவர்



''என் கண்ணா இப்படி ஆளே மெலிஞ்சு போயிட்ட?'' என்று ஒரு தாயாக அக்கறையுடன் கேட்டார்.

''எனக்கென்ன, நான் பிரமாதமா இருக்கேன். உங்க கண்ணுக்கு அப்படித்தான் தெரியும்'' என்ற மகனிடம் ''சரிதான்...'' என்று உள்ளே சென்றார்.

உள்ளே வந்தவர் அங்கு செய்வதறியாது உறைந்து போய் நின்றிருந்த மருமகளை'' சாப்பிடலாம் வாம்மா'' என்று அழைத்தார்.

''நான் அப்புறமா...''

தன்யாவின் குரல் அவளுக்கே கேட்டிருக்கவில்லை.

''ம்கூம், அப்புறம் எப்ப எல்லாரும் ஒண்ணா உக்காந்து சாப்புட்றது தான் இங்க வழக்கம் வா'' என்று அதட்டி அழைத்தார்.

அப்படி அழைக்கா விட்டால் நிச்சயம் நகர மாட்டாள் என்பதால் தான் அவர் அப்படி அழைத்திருந்ததும்.

அது வேலை செய்திருக்க, அவரைப் பின் தொடர்ந்து டைனிங் ஹாலுக்கு வந்தாள் தன்யா.

கை கால்களனைத்தும் சில்லிட்டுப் போயிருக்க, நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்வது எங்கே அனைவருக்குமே கேட்டு விடுமோ என்று கூட பயந்து போனாள்.

''வா இப்படி வந்து உக்காரு.''

மீண்டும் சற்று அதட்டலுடன் அழைத்த அத்தை காட்டிய இடத்தில் அமர்ந்திருந்தாள்.

ஏனோ நிமிர்ந்து பார்க்கக் கடுகளவும் தைரியம் வந்

முன்பு தான் கற்பித்துக் கொண்ட காரணங்களெல்லாம் அந்த நேரத்தில் ஆடிக்காற்று இலவம் பஞ்சாய்ப் பறந்து போய் விட்டிருந்ததை ஒருவித வெறுமையுடன் உணர்ந்தாள்.

அது மட்டுமல்லாமல் தான் செய்ததெல்லாம் மிகப் பெரிய தவறுதான் என்பதைப் போலக் கூடத் தோன்றி அவளை மிகுந்த வேதனையடையச் செய்து கொண்டிருந்தன.

தன்யாவின் தட்டிலும் பரிமாறியிருந்த கலைவாணி, முதலில் தான் வாயைத் திறந்திருந்தார்.

''உன் கோபம் நியாயமானது தான் ரகு. அத நான் ஒத்துக்கறேன். அதுக்காக தன்...''

''நான் இப்ப சாப்டவா, வேண்டாமா?''

எரிச்சலுடன் கேட்ட மகனை, ''ஏம்பா இப்படிச் சொல்றே?'' என்று பார்த்தார்.

''உங்க யார் மேல தப்பிருக்கு. இல்ல யார் மேல தப்பு அதிகமா இருக்குங்கற ஆராய்ச்சியெலலாம் எனக்கு அவசியமில்லாதது. நினைச்சா கிளம்பிப் போறதுக்கும், விரும்பினா திரும்பி வர்றதுக்கும் இது ஒண்ணும் சத்திரம் கிடையாது. தயவு செஞ்சு நீங்க காலைல நேரத்துல ஊருக்குக் கிளம்பப் பாருங்க...''

மகனின் வார்த்தைகளில் ஒன்றும் புரியாது பார்த்தார் கலைவாணி.

''ஏம்பா இப்படிச் சொல்ற?''

''நீங்க மனசுக்குள்ள நினைக்கறதெல்லாம் நடக்காது. அத முதல்ல புரிஞ்சுக்கோங்க. ஊருக்குப் போனா உங்க வேலையாவது பார்க்கலாம்...''



இப்படிச் சொன்னால் என்ன செய்வது என்பதைப் போலத் தனது கணவனைப் பார்த்த கலைவாணிக்கு தன்யாவைப் பார்க்க இன்னும் பாவமாக இருந்தது.

குனிந்த தலை நிமிராமல் அமர்ந்து கொண்டிருந்தவளிடம் ''சாப்புடுமா'' என்றார்.

''இல்ல நானென்ன சொல்றேன்னா...''

மீண்டும் ஏதோ சொல்ல வந்த தாயிடம்,

''ம்கூம் வேண்டாம்மா விட்டுடுங்க, நானும் ஒண்ணும் அவ்வளவாப் பொறுமசாலி கிடையாது பாருங்க'' என்றான்.

அந்தக் குரலில் தெரிந்த அழுத்தம் அதற்கு மேல் அவரைப் பேச விட்டிருக்கவில்லை. ஏன் யாரையுமே.

தொடர்ந்து சில நிமிடங்கள் மௌனமாகக் கழிந்தன.

மகன் உண்டு முடித்து எழுந்திருக்க, ''மருமகள்ட்ட ஒரு வார்த்தை கூடப் பேசலையேப்பா...'' என்றார் லோகநாதன்.

''பேச இனியும் என்ன இருக்கு. அதுதான் எல்லாம் முடிஞ்சதே.''

''ஐயோப்பா. என்ன வார்த்தை சொல்லிட்ட?'' என்று பதட்டத்துடன் கலைவாணி ஏதோ சொல்ல வர, ''சரி இனி எதுவானாலும் நாளைக்குப் பாத்துக்கலாம் போங்க எல்லாரும் சாப்டுட்டுப் போய்த் தூங்குங்க'' என்று மகனைத் தொடர்ந்து உண்டு முடித்து கைகளைக் கழுவிக் கொண்டு தானும் நகர்ந்தார் லோகநாதன்.

கணவனும் மகனும் சென்றிருக்க, திரும்பி தன்யாவைப் பார்த்தார் கலைவாணி.

அவளுடைய கண்கள் கலங்கி விட்டிருப்பது தெரிந்தது.

"சாப்புடுடாம்மா... என்னாச்சு ஏன் அதுக்குள்ள எழுந்துட்ட?"

"போதும் அத்தை..."

"கவலப்படாதமா, சினனச் சினன விஷயங்கள்லயே அவன் மத்தவங்க சொல்றதக் கேக்க மாட்டான். அப்படியிருக்கும்போது..."

"புரியுது அத்தை. அவரு கோபமும் நியாயமானது தான..."

சிறிது நேரத்தில் படுக்கைக்கு வந்திருந்தாள் தன்யா.

ஏனோ இன்னதென்று சொல்ல முடியாத வண்ணம் அவளுடைய மனம் வேதனையில் ஆழ்ந்திருந்தது.

ஏதேதோ எண்ணங்களின் தாக்கத்தில் இரவெல்லாம் தூங்காமல் அதிகாலை நேரத்தில் தான் சற்று கண்ணயர்ந்திருந்தாள்.

## 22

காலையில் கண் விழித்து எழுந்தபோது வெளிச்சக் கோடுகள் அறையெங்கும் தனது கோலத்தை வரைந்திருந்ததைக் கண்டாள்.

வேகமாகச் சென்று காலைக் கடன்களை முடித்தவள், அப்படியே குளித்தும் முடித்திருந்தாள்.



குளித்து விட்டு அவள் வெளியே வரவும், கலைவாணி அறைக்குள் வரவும் சரியாக இருந்தது.

"எழுந்துட்டியாம்மா?"

"ஆமாம் அத்தை, கொஞ்சம் லேட்டாயிடுச்சு."

"அது பிரச்சனையில்லமா, நானும் மாமாவும் ஊருக்குக் கிளம்பறோம்மா."

............

"என்னடாம்மா, என்..."

"ஒண்ணுமில்ல அத்தை."

"தேவையில்லாம மனசப் போட்டுக் குழப்பிக்காதடாம்மா, திரும்பவும் இன்னிலிருந்து வேலைக்குப் போ, ரகு என்ன சொன்னாலும் எதுவும் பேசாத, ஒரு சில நாள்ல எல்லாப் பிரச்சனைகளும் சரியாயிடும். என்னமா..."

"நிச்சயமா அத்தை நீங்க சொல்ற மாதிரியே செய்யறேன், எல்லாமே சரியாயிடுங்கற நம்பிக்கை எனக்கும் இருக்கு."

"நல்லதுமா, அதுதான் வேணும். பழையபடி கெஸ்ட் ஹவுஸ்லயே தங்கிக்கோ. சரிதான் உனக்கே எல்லாம் தெரியுமே நான் வேற போரடிச்சுட்டு" என்று கலைவாணி மீண்டுமொரு முறையும் விடைபெற்றுக் கொண்டு கிளம்ப லோகநாதன் தானும் வந்து சொல்லிக் கொண்டு கிளம்பினார்.

அத்தையும், மாமாவும் கிளம்பி விட்டிருக்க நடுக்காட்டிற்குள் தனித்து விடப்பட்டதைப் போலத் திகைத்து நின்றாள்.

அது மட்டுமல்லாமல் உண்மையிலேயே தான் செய்தது மன்னிக்க முடியாத குற்றமல்லவா என்றும் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

அவர்கள் இருவரும் கிளம்பி விட்டதற்குப் பிறகு ஏனோ அவளால் வினாடி கூட அந்த வீட்டில் இருக்க முடிந்திருக்கவில்லை.

தான் முன்பு தங்கியிருந்த கெஸ்ட் ஹவுஸிற்கு வந்திருந்தாள்.

ஏதேதோ நினைவிற்கு வர, தொண்டை அடைக்க அப்படியே நின்று விட்டிருந்தாள்.

அனைத்தையும் தானே கெடுத்துக் கொண்டு விட்டோமே,

பெயருக்குக் காலை டிபனை எடுத்துக் கொண்டவள், அத்தை சொன்னது போல வேலைக்குக் கிளம்பத் தயாரானாள்.

அதாவது ரகுநந்தனைப் பார்க்க,

மனதைக் கல்லாக்கிக் கொண்டு வெளியே வந்து கதவைப் பூட்டினாள்.

நேராகக் கடையை நோக்கி நடந்தாள்.

விரிவு படுத்தப்பட்ட கட்டிடம் பார்க்கவே பிரமாண்டமாக இருந்தது.

சரிதான், ரகுநந்தனின் முன்னேற்றத்திற்கு எல்லையேது.

சொன்னதை அப்படியே செய்திருக்கிறான்.

அவனைப் பொறுத்தவரை செய்யாமல் விட்டால் அல்லவா ஆச்சரியப்பட வேண்டும்.

ரிஷப்ஸனில் ஒரு பெண் இருக்க அருகில் சென்று எம்.டி.யைப் பார்க்க வேண்டுமென்றாள்.

''உங்க பேரு?''



''தன்யா.''

''நீங்க என்ன வேணும் எம்.டி.க்கு...''

''தெரிஞ்சவர்...''

''முக்கியமான வேலையெதுவும் இல்லேன்னா யாரையும் அனுப்ப வேண்டாம்னு இப்பதான் இன்டர்காம்ல கூப்புட்டுச் சொன்னார், ஒண்ணு செய்ங்க ஒரு ஃபீ அவர்ஸ் வெயிட் பண்ணுங்க. கடைக்குள்ள எம்.டி. ரவுண்ட்ஸ் வருவார் அப்பப் பார்த்துக்குவீங்களாம்...''

''எதுக்கும் ஒரு தடவ ஸார்கிட்டக் கேட்டுப் பாருங்களேன்...''

தன்யாவின் வார்த்தையில் மனமே இல்லாமல் அதே சமயம் மிகுந்த பணிவுடன் எம்.டி.யை அழைத்துப் பேசினாள் அந்த ரிஷப்ஸனிஸ்ட்.

''ஓ.கே. ஸார்'' என்று ரிஸீவரை வைத்தவள், ''நீங்க போய் ஸாரப் பார்க்கலாம்'' என்றாள்.

அவ்வளவு விரைவில் அனுமதி கிடைக்குமென்று எதிர்பார்த்திராதவளுக்கு இப்பொழுது மனதிற்குள் திக்கென்று ஆகிவிட்டிருந்தது.

ஆனாலும் தாமதிக்க வழியின்றி ''சீக்கிரம் அனுப்பச் சொன்னார் அவருக்கின்னும் நிறைய அப்பாயிண்ட்மெண்ட்ஸ் இருக்கு'' என்று துரிதப்படுத்தினாள் ரிஷப்ஸனிஸ்ட்.

அனுமதி பெற்றுக் கொண்டு உள்ளே சென்ற தன்யாவிற்கு, தூக்குக் கயிற்றுக்குள் தலையை விடுவதைப் போலிருந்தது.

என்ன முயன்றும் முகத்தை இயல்பாக வைத்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை. ஆனாலும் இயன்ற மட்டும் முயன்றாள்.

''வா.''

அந்த ஒற்றை வார்த்தையில் தெரிந்த அழுத்தமே அவளை நம்பிக்கையை இழக்கச் செய்து விட்டிருந்தது.

''எங்க வந்த?''

..................

''உன்னத்தான்.''

''நான் வேணும்னு அப்பிடி...''

''எனக்கு நிறைய வேலையிருக்கு. உன் வாயையே பாத்துட்டிருக்க முடியாது.''

''யார்கிட்டத் திரும்பவும் வந்திருக்கேன்னு தெரிஞ்சு தான் வந்தியா?''

......................

''என்னவோ அப்ப ரொம்பவும் வெறுப்பும் வேதனையும் அடைஞ்சதா சொன்னியே. அப்ப இப்ப அப்படியில்லையா?''

..................

''நான் எப்ப வேணும்னாலும் தயார். எப்ப எங்கன்னு மட்டும் சொல்லு...''

''ஐயோ போதும்...''

''ஓ அதுதான் உன் பாஷைல சொல்றப்பப் பெரிய தப்பாச்சே.''

''ஐயோ போதும் ரகு. நான் சொல்றதயும் கொஞ்சம் கேளு...''



''உன் அனுபவத்த நீ எழுதி வெச்சுட்டுப் போய்ட்ட. ஆனா எனக்கு அந்த அனுபவம் ரொம்பவும் பிடிச்சிருந்ததுப்பா.''

''முன்ன எப்படிப் பழகினேன்னு தெரியாது. ஆனா இனிமேல் இதுக்காக மட்டுமே உங்கூடப் பேசவும் பழகவும் தயார். ஆனா அதுக்கு மேல எந்தக் கற்பனைய நீ வளத்துக்கிட்டாலும் அதுக்கு நான் பொறுப்பாக முடியாது சொல்லிட்டேன்.''

''ஏன்னா உன்ன மாதிரிப் பொண்ண அந்தக் கண்ணோட்டத்துல மட்டும் தான் பாக்க முடியும் பாரு...''

''ஐயோ, கொல்லாதீங்க ரகு தயவு செஞ்சு நான் ஏன் அப்படிச் செஞ்சேங்கற...''

''அத நீ சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கணுமா. என்ன விடவும் பணக்காரன் எவனாவது கிடைச்சிருப்பான் போ...''

ரகுநந்தனின் வார்த்தைகளில் கத்தி கொண்டு நெஞ்சிலேயே சொருகினாற் போலத் துடித்துப் போய் விட்டிருந்தாள் தன்யா.

அதற்கு மேலும் அங்கிருந்தால் கதறி விடுமோ என்று தோன்றி விட்டிருக்க எழுந்து விட்டிருந்தாள்.

''பரவாயில்ல கிடைச்ச இடம் ரொம்பப் பெருசு தான் போலிருக்கே. பாக்க முன்னைக்கு இப்ப இன்னும் மெருகேறி நல்லாத்தான் தெரியற. ஆனாலும் அந்த விஷயத்துல எப்படி...''

''போதும் ரகு.....''

''அங்கிருந்தும் ஏன் கிளம்பி வந்துட்ட. அதுவும் போரடிச்சுடுச்சா...''

அவ்வளவு நேரமும் போல அப்பொழுது தன்யாவால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்க வில்லை, கண்கள் கலங்கப் பார்த்தாள்.

''சுயநலமா யோசிக்க முடியாமப் போயிடுச்சு ரகு. நீங்க அத்தை கூட போன்ல அவங்க பாத்த பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறதுக்கு சம்மதம் சொல்லிட்டிருந் ததக் கேக்க நேர்ந்தது. அத அப்ப இருந்த நிலைமைல உங்களால எங்கிட்ட எப்படி சொல்லியிருக்க முடியும்...'' கண்கள் நிரம்பி விட்டிருக்க சற்றே குனிந்து தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்டவளாய் ''நீங்க எல்லாரும் எனக்கு செஞ்ச உதவிக்கு நான் இதக்கூட...''

''தியாகம் செஞ்சுட்டுப் போய்ட்ட, அடடா எம்மேல எவ்வளவு நம்பிக்கை உனக்கு...''

''ஐயோ இல்ல ரகு, அப்படியெல்லாம் அப்ப நான் யோசிக்கவே இல்ல. உங்களுக்கு நல்லது செஞ்சாப் போதுங்கறதுக்கு மேல நான் எதை...''

''உன் விளக்கமெல்லாம் தேவையே கிடையாது. அதனால எம்மனசு மாறப் போறதும் இல்ல. எல்லாமே முடிஞ்சு போச்சு. இனி பேசவோ யோசிக்கவோ எதுவுமே இல்ல...''

இப்படிச் சொன்னால் எப்படி என்பதைப் போல ரகுநந் தனைப் பார்த்தாள் தன்யா.

அந்தக் கண்களில் தெரிந்த ஏக்கம், எதிர்பார்ப்பு உதட்டைக் கடித்து அவள் தன்னை இயல்பாக வைத்துக் கொண்ட விதம் என அனைத்தும் தன்னை என்னவோ செய்ய, திரும்பி வேறு வேலையில் கவனத்தைச் செலுத் துவதைப் போலத் தனது முகபாவனையை மறைத்துக் கொண்டான்.



சில வினாடிகளில் அந்த வேலை முடிந்து விட்டது போல நிமிர்ந்தவன், தனக்கு எதிரே அமர்ந்திருந்த வளைப் பார்த்தான்.

''இனியும் என்ன கிளம்....''

''எனக்குத் திரும்பவும் வேல வேணு....''

''சொல்லாமக் கொள்ளாம ஓட்றவங்க வேலைக்கு மட்டுமில்ல எதுக்குமே லாயக்கில்ல....''

''ப்ளீஸ் ரகு. நீங்க என்ன பேசினாலும் ஏன் அடிச்சாலும் உதைச்சாலும் கூட உங்கள விட்டு இனிப் போகவே மாட்டேன்... ஐ மீன் வேலைய விட்டு தியாகம் பண்றதா நினைச்சுட்டுப் போயிட்டியான்னு நீங்க கேட்டது கூட ஒரு விதத்துல சரிதான். ஆனா அப்படிப் போய்ட்டு அதுக்கப்புறம் நானும் ஒண்ணும் நிம்மதியா இருக்கல... ஏன் தினம் தினம்...''

''போதும், இது ஆபீஸ் டைம். எனக்கு ஆயிரம் வேலை யிருக்கு. உனக்காக ஒரு விரல அசைக்கற சிரமத்தக் கூட இனிமேல் நான் எடுக்கத் தயாரில்ல. அப்பாவோட வார்த்தைக்காக மட்டும் வேணும்னா இருக்கற வேலயப் போட்டுத் தாச்சொல்றேன்'' என்றவன் தனது டேபிளில் இருக்கும் இண்டர்காமின் வாயிலாக யாரையோ அழைத் தான்.

தொடர்ந்து சில வினாடிகளில் ஒரு பெண் வந்து நிற்க, புன்னகையுடன் வரவேற்றான்.

அனுமதி கூடப் பெறாமல் அவள் பாட்டுக்கு உள் ளேயே வந்திருக்க, அது தன்யாவின் கவனத்தில் விழத் தவறவில்லை.

''வா மாயா, பிஸியா இருந்தியா?''

''இல்லில்ல ஸார், டீ ப்ரேக் எடுக்கலாம்னு இருந்த வேளைல தான் நீங்க கூப்புட்டிருக்கீங்க, சொல்லுங்க ஸார்.''

''உக்காரு.''

''பரவாயில்ல சொல்லுங்க.''

''இவங்க தன்யா அப்பாவுக்கு வேண்டிய பொண்ணு'' என்று அந்தப் பெண் மாயாவிற்கு ரகுநந்தன் தன்யாவை அறிமுகப்படுத்த ''அப்படியா ஸார் சொல்லுங்க நான் என்ன செய்யணும்?'' என்றாள் அவள்.

''என்ன வேல இப்ப ஃப்ரீயா இருக்கு?''

''கூட்டற, துடைக்கற வேலைலிருந்து எல்லாத்துக்குமே இப்பத்துக்கு நமக்கு ஸ்டாஃப்ஸ் தேவதான், இவங்க என்ன வேலை செய்வாங்கன்னு தெரிஞ்சா அதுக்குத் தகுந்த மாதிரி இருக்கறத சொல்லுவேன்.''

அந்தப் பெண் மாயாவின் வார்த்தைகளில் அயர்ந்து போனாள் தன்யா, ஆனாலும் அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''சூப்பர்வைஸர், டிப்பார்ட்மெண்ட் இன்சார்ஜ் மாதிரி.''

''அதுக்கெல்லாம் அனுபவம் வேணுமே ஸார்.''

''முன்னாடி இங்க வேல செஞ்சவங்க தான் ஓரளவுக்கு எல்லாம் தெரியும். ஒண்ணு செய்...''

''சொல்லுங்க ஸார்.''

''கடைய ஒவரால் இன்சார்ஜ் எடுத்துக்கட்டும். ஸ்டோரயும் பாத்து, ஒட்டு மொத்த கட வேலைகளையும் பாத்து உனக்கு சிரமம் தான. வேலயப் பாதியாப் பிரிச்சுக்கோங்க...''



''சரிதான் ஸார்.''

ஏற்கனவே தன்யாவின் பிரமாதமான தோற்றத்திலும் அழகிலுமாகப் பொறாமையுடன் பார்த்த மாயாவிற்கு எம்.டி. ரகுநந்தன் அப்படிச் சொல்லி விட்டதற்குப் பிறகு இப்பொழுது அவள் மீது எல்லையற்ற வெறுப்பும் வந்திருந்தது.

ஆனாலும் அது வெளியே தெரியாதவாறு தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாள்.

என்னதான் ஏற்கனவே இங்கு வேலை செய்திருந்தாலும் திடீரென்று வந்து முளைத்தவளுக்கு இவ்வளவு பெரிய வாய்ப்பா என்றிருந்தது.

அதுவும் அப்படி வந்தவள் தன்னுடைய வேலைக்கே உலை வைத்து விட்டாளே.

ஸ்டோர் இன்சார்ஜ் வேலை யாருக்கு வேண்டும்.

எப்பொழுது பார்த்தாலும் இருப்புகளைக் கணக்கெடுத்து, இல்லாதவற்றிற்கு இண்டென்ட் போட்டு ஆர்டர் செய்து, அதை மெயிண்டெய்ன் செய்து எப்போதும் தலைவலி தான்.

எப்படியாவது அந்த ஸ்டோர் இன்சார்ஜ் வேலையை யாருடைய தலையிலாவது கட்டி விட்டுத் தான் பந்தாவாக ஒட்டு மொத்தக் கடையையும் தனது கைகளுக்குள் கொண்டு வந்து விடவேண்டுமென்று கண்டு கொண்டிருந்த கனவு பொய்த்துப் போய் விட்டதே.

அது மட்டுமா.

நாமும் கூட இனி இவளுடைய மேற்பார்வையின் கீழ் அல்லவா வேலை செய்ய வேண்டி வரும்.

எல்லாம் தன்னுடைய பேராசையால் வந்த வினை வன்றி வேறென்ன.

எம்.டி. கேட்ட உடனேயே இந்த ஸ்டோர் கீப்பர் வேலையை நாம் சொல்லியிருந்தால் அவர் பேசாமல் அதை அவளுக்குக் கொடுத்து விட்டுப் போயிருப்பாராய் இருக்கும்.

ஆனால் முக்கிய வேலையான அந்த இரண்டையுமே இவளுக்குக் கொடுக்கக் கூடாதென்று தான் எண்ணியதன் விளைவு, கடைசியில் இப்படியாகி விட்டதே.

தனக்கே எதிராக அல்லவா முடிந்து விட்டிருக்கிறது.

## 23

எம்.டி.யே சொல்லி விட்டதற்குப் பிறகு மாயாவால் ஒன்றும் பேச முடிந்திருக்கவில்லை.

தன்யாவுடன் வெளியே வந்திருந்தாள்.

''உன்... உங்க பேரு... ஓ தன்யா இல்ல...''

''ஆமா பாக்கவே பணக்காரி மாதிரி தெரியறீங்க. நிஜமாவே இங்க வேலைக்கு தான் வந்தீங்களா?''

''அதக் கூட விடுங்க, எம்.டி. தான் இவ்வளவு பெரிய வேலையக் குடுத்திருக்கார்னா நீயாவது வேண்டாம்னு சொல்ல வேண்டாம்.''

ஒருமையிலும், பன்மையிலுமாக மாறி மாறிப் பேசிக் கொண்டு கேள்வி மேல் கேள்விகளை அடுக்கிக்



கொண்டே போனவளை எதுவும் பேசாமல் பார்த்தான் தன்யா.

''எங்கிருந்து வந்...''

''இப்ப என்ன தெரியணும் உனக்கு?''

தன்யா நேரடியாக விஷயத்திற்கே வர ''இல்ல உங்களால இவ்வளவு பெரிய பொறுப்ப எடுத்துச் செய்ய முடியுமான்னு சந்தேகமா இருந்தது அதான்.''

.........

தனது படிப்பையும், இதற்கு முன் தான் செய்து கொண்டிருந்த வேலையையும் அதற்குத் தான் வாங்கிக் கொண்டிருந்த சம்பளத்தையும் சொன்னாள் தன்யா.

அதற்கும் மற்றபடி சலுகைகளைக் கூட அவள் சொல்லியிருக்கவில்லை.

ஆனால் அதற்கே ஆச்சரியத்தில் வாயடைத்துப் போய் நின்று விட்டிருந்தாள் மாயா.

ஆனாலும் அதைத் துளியும் வெளியே காட்டிக் கொள்ளாமல் மேலே யோசித்தாள்.

இவள் சொல்வது உண்மையென்றால், பார்த்தால் பொய் சொல்கிறாற் போலத் தெரியவில்லை தான்.

கணக்கிட்டுப் பார்த்தால் இவள் வாங்கிய ஒரு மாத சம்பளம் தனது ஒரு வருட சம்பளத்தையும் விடக்கூட இன்னும் அரை மடங்கு அதிகமாக அல்லவா இருக்கிறது.

''அப்புறம் ஏன் அந்த வேலைய விட்டுட்டு வந்...''

''லுக், இதுதான் உன் லிமிட். வேலை சம்பந்தமா ஏதாவது இருந்தாப் பேசலாம், மத்தபடி நான் எதயும் விரும்பல.''

தன்யாவின் வார்த்தைகளில் ''அப்ப வேலைல ஏதாவது தப்பிருந்தாக் கூட சொல்ல வேண்டாமா?'' என்று கேட்டாள் மாயா.

அவளுடைய கேள்வியில் அந்த நேரத்திலும் சிரிப்பு வந்து விட்டிருந்தது தன்யாவிற்கு.

ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் ''சரிதான் அத அப்பப் பார்க்கலாம். இப்ப வேலையப் பாக்கலாமா?'' என்றாள்.

சில நாட்கள் சென்றிருந்தன.

அன்று அவனுடைய அறையில் வைத்துப் பார்த்ததற்குப் பிறகு தன்யா மீண்டும் ரகுநந்தனைப் பார்த்திருக்கவில்லை.

முன்பு எப்படியோ ஆனால் இப்பொழுது தன்யாவிற்கு அந்த வேலை சுத்தமாகப் பிடித்திருக்கவில்லை.

போனால் போகிறது என்று கூட வேலையில் கவனத்தைச் செலுத்த முடிந்திருக்கவில்லை.

பேசாமல் ரகுநந்தனிடம் சென்று சொல்லி விட்டால் என்னவென்று தோன்றிய மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

சொல்லி விடுவது எளிதுதான்.

ஆனால் அதற்குப் பிறகு அவன் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லியாக வேண்டுமே,

ஏற்கனவே கிளம்புகிறாயா என்று கேட்டவனாயிற்றே.

இப்பொழுது என்ன சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அது மட்டுமா.



அவனைப் பெற்றவர்களை அழைத்து ஏதாவது சொன்னாலும் சொல்லி விடுவான்.

தன்னால் ஏற்கனவே அவர்கள் பட்டுக் கொண்டிருக்கும் சிரமம் போதாதா என்ன.

ஏற்கனவே நிலைமை இப்படியிருக்க, இடையில் அந்த மாயா வேறு பெரும் தொல்லையாக இருந்தாள்.

என்னதான் வார்த்தைகளில் குட்டினாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் திரும்பத் திரும்ப வந்து விடுகிறாளே என்ன பெண்ணிவள் என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

முன்பு வேலை செய்தபோது இருந்தவர்களைப் பார்க்க நேரும் போதும் மனதிற்குள் சற்று இதமாக உணர்ந்தாள்.

ஆனாலும் பழைய நினைவுகள் ஏதேதோ செய்ததில் முன்னிலும் அதிகமாகத் தொய்ந்து போனாள்.

## 24

அன்று மாலை வேலை முடிந்து வந்தவள் பேசி நீண்ட நாட்களாயிற்றே என்று பொன்னம்மாவிற்கு அழைத்துப் பேசினாள்.

சில நிமிடங்கள் பேசியவளுக்கு அவள் சொன்ன செய்தி அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது.

அவளிடம் போனில் சொன்னது போலவே முன்பு தானும், தாயும் இருந்த வாடகை வீட்டிற்குக் கிளம்பினாள்.

பொன்னம்மா சொன்ன அதிர்ச்சியான செய்தியும் இதுதான்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு வரை தாயுடன் தான் வசித்த வீடு இன்னும் காலி செய்யப்படவில்லை என்பதே அது.

வாங்கம்மா எப்படியிருக்கீங்க?!

வீட்டு வாசலில் நின்று சந்தோஷமாக வரவேற்ற பொன்னம்மாவிற்கு பதில் சொன்னவள் தானும் நலம் விசாரித்துப் பேசினாள்.

''ஏம்மா ரெண்டு வருஷமா வராமலே இருந்துட்டிங்க?'' என்று கேட்டுக் கொண்டே கையிலிருந்த சாவியால் வீட்டின் கதவைத் திறந்தாள் பொன்னம்மா.

''வேல அந்த மாதிரி பொன்னம்மா, அப்புறம், உன் மகனுக்குக் கல்யாணம் பண்ணிட்டயா?''

''ஆச்சுமா ஒரு பொன் குழந்தகூட பொறந்திருக்குமா. காலம் தான். யாருக்காகவும் காத்திருக்காம இறக்கையக் கட்டிட்டுப் போயிட்டிருக்கே.''

அது சரிதான்.

எவ்வளவு நிதர்சனமான வார்த்தைகள்.

நேற்று தான் அனைத்துமே நடந்ததைப் போலிருக் கிறது. ஆனால் இடையில் இரண்டு முழு வருடங்கள் ஓடிப் போய் விட்டிருக்கின்றனவே.

பொன்னம்மா வீட்டைத் திறந்து மின்சார விளக்கு களைப் போட்டிருக்க உள்ளே வந்த தன்யாவிற்கு முட்டி மோதிக் கொண்டு வந்த பழைய நினைவுகளில் மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.



வீட்டிற்குள் சென்று அனைத்தையும் ஒரு முறை நோட்டமிட்டாள்.

முன்பு தான் இருந்த போது இருந்ததைப் போலவே எந்த மாற்றமும் இல்லாமல் வீடு அப்படியே இருப் பதைக் கண்டாள்.

''என்னமா?''

''ஏன் பொன்னம்மா இப்படி?''

''எதுமா?''

''ஏன் இன்னும் வீட்டக் காலி பண்ணல?''

''அது எப்பிடிமா முடியும். அதோட அது ஒண்ணும் என் கைல இல்லையே...''

அப்படிச் சொன்னவளை எதுவும் பேசாமல் பார்த்தாள் தன்யா.

''என்ன பொன்னம்மா சொல்ற?''

''ரகுநந்தன் ஐயா தானுங்கம்மா காலி பண்ணக் கூடா துன்னு சொல்லிட்டாங்க.''

..................

''நீங்க வந்து என்ன சொல்றீங்களோ அப்படிப் பண் ணிக்கலாம்னு சொல்லிட்டாருங்கமா.''

''நான்தான் சொல்லிட்டுப் போய்ட்டேனே. வீட்ட காலி பண்ணிட்டு இருக்கற சாமானையெல்லாம் உன்ன எடுத் துக்கச் சொல்லிட்டேனே. இல்லன்னா போற விலைக்கு வித்துடுன்னு...''

''அது சரிதானுங்கம்மா ஆனா அந்த ஐயாவே சொல்ற மாதிரி அத நீங்க இல்லாதப்ப எப்பிடிமா செய்ய முடியும் சொல்லுங்க?''

''அதுக்காக தேவையில்லாம மாசம் அஞ்சாயிரம் வாடகையா? கூடவே ரெண்டு லட்சம் அட்வான்சும்...''

''இப்ப வாடக எட்டாயிரம் ஆயிடுச்சுங்கமா.''

''என்ன சொல்ற?''

''ஆமாங்கம்மா. ஏரியா நாளுக்கு நாள் டெவலப் ஆயிட்டே போகுதில்லையா. பக்கத்துலயே பெரிய டிபார்ட்மெண்ட் ஸ்டோர் வேற...''

பொன்னம்மா சொல்ல அது சரிதான். காலம் மாறிக் கொண்டிருக்கிறதல்லவா. ஆனாலும் யாரும் வசிக்காத வீட்டிற்கு ஏன் தண்டமாக...

''நான் ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டிங் கல்லமா...''

''என்ன பொன்னம்மா சொல்லு?''

''இல்ல ரகு ஐயாவோட குடும்பமும் ரொம்பப் பெரிய இடம் போலிருக்குமா...''

''ம். சொல்லு.''

''குறைஞ்சது வாரத்துக்கு ரெண்டு முறையாவது அந்தத் தம்பி இங்க வராம இருக்க மாட்டார், வந்து இந்த வீட்டப் பாக்கும் போதெல்லாம் அவர் முகத்துல தென் பட்ற ஏக்கமும் எதையோ பறி கொடுத்துட்ட மாதிரிப் பார்வையும்...''

''அத நீங்களே பாத்தா தாம்மா புரியும்.''

என்ன சொல்ல வருகிறாள் இவள்.

''அந்த ஐயாவுக்கு உங்க மேல ரொம்ப இஷ்டம் போலிருக்குமா. எம்மா நீங்க அவரையே...''



''நான் கொஞ்சம் தனியா யோசிக்கணும் பொன்னம்மா நீ வேணும்னா போய்ட்டு அப்புறமா வாயேன்.''

''சரிதானுங்கம்மா, உங்களுக்கு சாப்புட்றதுக்கு குடிக் கறதுக்கு...''

''இப்ப எதுவும் வேண்டாம் நைட்டுக்கும் டிபன் நானே எடுத்துட்டு வந்துட்டேன். போய்ட்டு பத்து மணிக்கு மேல வா எதுக்கும் போன்ல கூப்புடு சொல்றேன்.''

''சரிங்கம்மா.''

''சரி நீ கிளம்பிக்கோ, என்ன...''

''இல்ல தனியா எப்பிடிமா இருப்பீங்க?''

''என்ன ஜோக்கடிக்கிறயா?'' என்று சிரித்த தன்யா ''அப்பிடி பயமா இருந்தா உன்னப்போகச் சொல்லவே மாட்டேனே...''

''சரிங்கம்மா பேத்தி கூட இந்நேரம் தூங்கி எழுந் திருப்பா நான் வேணும்னாப் போய்ப் பாத்துட்டு அப் புறமா வர்றேன்...''

''ஒரு நிமிஷம் பொன்னம்மா'' என்ற தன்யா தனது ஹேண்ட் பேக்கைத் திறந்து அதிலிருக்கும் பணத்தை எடுத்து ''இந்தா வெச்சுக்கோ'' என்று கொடுத்தாள்.

''எனக்கு எதுக்குங்கம்மா இவ்வளவு பணம்.''

''அட வாங்கிக்கோ பொன்னம்மா நீ செஞ்சுட்டிருக்கற உதவிக்கு இதெல்லாம் தூசு இந்தா புடி.''

தன்யா மீண்டும் ஒரு முறையும் சொல்ல, வாங்கிக் கொண்டாள் பொன்னம்மா.

''சரிங்கம்மா நான் போய்ட்டு அப்புறமா வர்றேன்.''

''சரிதான், வர்றதுக்கு முன்னாடி எதுக்கும் போன் பண்ணு.''

பொன்னம்மா கிளம்பியதும் கண்களால் வீட்டை ஒரு முறை அளந்தாள் தன்யா.

பழைய நினைவுகள் நெஞ்சைக் கசக்க அப்படியே மற்ற அறைகளையும் சுற்றிப் பார்த்தாள்.

வீட்டை விட்டு வெளியே வந்த பொன்னம்மா புதிதாக கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கும் இடத்தைக் கடக்கும் முன்பாக ஒரு கார் வந்து நிற்க நின்றாள்.

தொடர்ந்து சில வினாடிகளில் அதிலிருந்து ரகுநந்தன் இறங்க பணிவுடன் குறுகி நின்றாள்.

''என்ன இங்க வீட்டுக்குப் போய்ட்டுப் போற போலிருக்கு?''

ரகுநந்தன் கேட்க, ''ஆமாங்கய்யா தன்யாம்மா வந்திருக்காங்க. கொஞ்சம் தனியா இருக்கணும்னு சொன்னாங்க. அதான் போய்ட்டு அப்புறமா வரலாம்னு கிளம்பினேனுங்கய்யா'' என்றாள்.

''இப்ப அவங்க எங்க?''

''வீட்ல தான் இருக்காங்கய்யா.''

''சரி நீ கிளம்பு'' என்ற ரகுநந்தன் கட்டிட வேலை நடக்குமிடத்திற்குச் சென்று சில நிமிடங்கள் நின்று பார்த்து விட்டுப் பிறகு தன்யாவை நாடிச் சென்றான்.

அனைத்து அறைகளையும் பார்த்துக் கொண்டே அப்படியே தாயின் அறைக்கு வந்திருந்த தன்யாவிற்கு அவளையறியாமலேயே கண்களில் கண்ணீர் குளம் போலத் தேங்கி விட்டிருந்தது.

சுத்தமாகத் தாங்கிக் கொள்ள மாட்டாதவளாய் முன்பு தாய் உபயோகித்துக் கொண்டிருந்த வெற்றுக் கட்டிலில் விழுந்து ''அம்மா... அம்மா...'' என்று அரற்றத் தொடங்கி விட்டிருந்தாள்.



ஏற்கனவே மனம் இருந்த நிலைக்குப் பழைய நினைவுகளும் சேர்ந்து கொள்ள, தாய் உடல் நலமில்லாமல் இருந்தது. மறைந்தது என அனைத்துமே நேற்று நடந்ததைப் போல மனம் மிகுந்த பாரமாகி விட்டிருந்தது.

தன்யாவை நாடி வீட்டிற்குள் வந்திருந்த ரகுநந்தன் அனைத்து அறைகளையும் பார்த்து விட்டுக் கடைசியாகத் தான் தன்யா இருந்த அறைக்கு வந்தான்.

வெளியே நல்ல வெளிச்சத்திலிருந்து வந்ததாலோ என்னவோ, அறை முழுவதும் இருட்டாகத் தெரிந்தது.

சில வினாடிகள் எடுத்துப் பார்வை பழக்கப்பட்ட பிறகு தான் அங்கு படுக்கையில் இருந்த தன்யா கண்களுக்குப் புலப்பட்டாள்.

அவள் படுக்கையில் குறுகிக் குப்புறப் படுத்துக் கொண்டிருப்பது தெரிய, தான் உள்ளே வந்ததைக் கூட உணர மாட்டாதவளாய் இப்படிப் படுத்துக் கொண்டிருக்கிறாளே என்று ரகுநந்தனுக்குத் தான் பக்கென்று விட்டிருந்தது.

அதற்குள் அருகிலேயே சென்றிருந்தவன் ''தன்யா... தன்யா இங்க பாரு'' என்று தொட்டு அழைத்தான்.

மேலும் ஒரு முறையும் அவன் அழைத்த பிறகே திரும்பிப் பார்த்தாள் தன்யா.

அப்படித் திரும்பியவளின் முகத்தைப் பார்த்த ரகுநந்தனுக்கு அந்த முகத்தில் தென்பட்ட ஏக்கமும், ஆதங்கமும் எதையெதையோ எண்ண வைத்து விட்டிருந்தன.

''என்னமா, என்னாச்சு? தன்யா இங்க பாரு...'' என்று அவளது தோளை சற்று அழுத்தமாகத் தொட்டு ரகுநந்தன் கேட்க, அதற்கு மேல் அவளால் சுத்தமாக முடிந்திருக்கவில்லை.

''ரகு...'' என்று அவனுடைய மார்பிலேயே விழுந்து கதறி விட்டிருந்தாள்.

அப்படி அழத் தொடங்கியவளால் ஏனோ நிறுத்தவே முடிந்திருக்கவில்லை.

எதெதெற்கோ சேர்த்து வைத்து அழுதாள்,

தன்யாவின் நிலையைக் கண்ட ரகுநந்தனுக்கும் மனம் முற்றிலுமாக இளகி விட்டிருக்க, வேண்டாம்மா போதும்... என்று அவளை இதமாக அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

சில நிமிடங்களில் தன்னிலை உணர்ந்து கொண்டிருந்த தன்யா ரகுநந்தனிடமிருந்து விலக தானும் தனது பிடியிலிருந்து அவளை விடுவித்திருந்தான் ரகுநந்தன்.

தொடர்ந்து சில வினாடிகள் மௌனத்தில் கழிந்தன.

முதலில் பேசியது ரகுநந்தன் தான்.

''தனியா இங்க என்ன பண்ணிட்டிருக்க?''

..............

''உன்னத்தான் தன்யா... பேசு...''

''இங்க நைட் இருக்கலாம்னு வந்தேன்.''

''இங்கயா... ஏன்?''

''உன்னத்தான்.''



''நான் எங்க இருந்தா தான் உங்களுக்கென்ன? இனியும் பேச என்ன இருக்கு. அதான் எல்லாம் முடிஞ்சு போச்சே...''

''எத எதோட முடிச்சுப் போட்ற. அது வேற இப்ப நீ இங்க தனியா இருக்கக் கூடாது கிளம்பி வா.''

''ம்கூம் மாட்டேன்.''

''எனக்குக் கோபம் வர வெக்காத...''

''அதத் தவிர ஏதாவது இருந்தா சொல்லுங்க.''

ஓ அப்படியானால்...

''நீங்க எவ்வளவு நேரம் வெயிட் பண்ணினாலும் நான் வரப் போறது கிடையாது. அதனால நேரத்த வேஸ்ட் பண்ணிட்டிருக்காம கிளம்பிக்கோங்க.''

தன்யாவின் வார்த்தைகளில் சில வினாடிகள் நின்று பார்த்த ரகுநந்தன் பிறகு கோபத்துடன் கிளம்பி விட்டிருந்தான்.

வெளியே வந்தவன் பொன்னம்மாவிற்கு அழைத்து அவளை இரவு வந்து, முடிந்தால் உடனே வந்து தன்யாவிற்குத் துணையாக இருக்கச் சொல்லி விட்டுக் காரை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டிருந்தான்.

என்னதான் கிளம்பி வந்திருந்தாலும் சற்று முன் தன்யா அழுததை அவனால் துளியும் மறந்திருக்க முடியவில்லை.

அவளை அங்கே தனியாக விட்டு விட்டுத் தான் வந்திருக்கக் கூடாதோ.

கிளம்பிச் சென்று அழைத்து வந்து விட்டாலென்ன.

பார்க்கவே மிகவும் ஒரு மாதிரி. எதையோ பறிகொடுத்தாற் போல என்று சொல்வதை விட அனைத்

துமே முடிந்து விட்டாற் போல என்று சொல்வது சரியாக இருக்கும்.

அந்த மாதிரி இருந்தவளை... ஏன் அப்படித் தானே அவளும் சொன்னாள்.

மனம் கேட்காமல் மீண்டுமொரு முறையும் பொன்னம் மாவிற்கு அழைத்துச் சொல்லியிருந்தான் ரகுநந்தன்.

ஏனோ நீண்ட நாட்களுக்குப் பிறகு சற்றும் நிம்மதி யில்லாமல் தவித்தான்.

என்ன முயன்றும் அன்று இரவு முழுவதும் அவனால் வினாடி கூடக் கண்ணயர முடிந்திருக்கவில்லை.

தன்யாவின் இடத்திலிருந்து யோசித்தான்.

அவள் சொல்வதை அப்படியே ஒப்புக் கொள்ள முடிய வில்லையென்றாலும், அதிலிருக்கும் நியாயம் புரிந்தது.

ஆனாலும் அதற்குச் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிச் சென்று விடுவது ஒரு தீர்வாகுமா என்று நினைத் தவனுக்குச் சற்றே இளகத் தொடங்கியிருந்த மனம் மீண்டும் இறுகி விட்டிருந்தது.

அவள் ஒருத்தி செய்த முட்டாள் தனத்தினால் எத்தனை பேருக்கு வேதனை.

அவள் மட்டும் அந்த மாதிரி செய்யாமல் தன்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருந்தால்,

அனைத்தும் எவ்வளவு சுமுகமாக நடந்திருக்கும்.

மனம் மீண்டும் பாறையைப் போல இறுகி விட்டிருந்தது ரகுநந்தனுக்கு.



# 25

இரவு முழுவதும் தூங்காததாலோ என்னவோ தலை வலியில் விண்விண்ணென்று தெறித்துக் கொண் டிருந்தது ரகுநந்தனுக்கு.

சரியாக அதே நேரம் அனுமதியுடன் உள்ளே வந்த வளைப் பார்த்தான்.

வந்தது தன்யா.

தனக்கு முன்பாக வந்து நின்றிருந்தவளை என்னவென் பதைப் போலப் பார்த்தான்.

''பேசு, காலைல செய்ய உருப்படியா எத்தனையோ வேலையிருக்கு. உன் திருவாயப் பாத்துட்டு உக்காந் திருக்கற மன்நிலைல நானில்ல...''

''நான் இனிமேல் வேலைக்கு வரல.''

அப்படிச் சொன்ன தன்யாவை எதுவும் பேசாமல் பார்த் தான் ரகுநந்தன்.

''மனசுக்குப் பிடிக்காதத ஒரு நாள் ரெண்டு நாள் செய்யலாம் தொடர்ந்து முடியாது.''

''அப்புறம் என்ன செய்யப் போற?''

அப்படிக் கேட்டவனை ஏக்கம் கண்களில் நிறையப் பார்த்தாள் தன்யா.

''அத நீங்க தான் சொல்லணும் ரகு.''

''நான் சொல்ல என்ன இருக்கு. அதுவும். உன் விஷயத்துல...''

''ஏன் இப்படிப் பிரிச்சுப் பேசறீங்க?''

''இருக்கறத சொல்றேன், உன் மனசுக்கு அப்படித் தோணினா அதுக்கு நானென்ன செய்ய முடியும்?''

''ஏற்கனவே ரொம்பவும் முடியாம தான் வந்திருக்...''

''அதெல்லாம் உன் பிரச்சன கண்டவங்களுக்காகவெல்லாம் நான் கிடந்து கவலப்பட்டுட்டிருக்க முடியாது. கிளம்பு எதுவானாலும் உன் மனசுக்கு என்ன படுதோ அதுப்படி செஞ்சுக்கோ.''

''என் இடத்துலிருந்து கொஞ்சம் யோசிச்சுப் பாருங்களேன் ரகு.''

''அது எனக்கு அவசியமில்லாதது.''

''இப்படி சொன்னா நான் என்ன...''

''கிளம்புன்னு சொல்றேன்...''

''முடியாது. மாட்டேன்...''

''என்ன நீ...''

''உங்கள விட்டு எங்கயும் போற எண்ணம் எனக்கு இனிமேல் கிடையாது.''

''ஏன், என்னளவுக்குப் பணக்காரன் கிடைக்க மாட்டான்னு தெரிஞ்சு போயிடுச்சா?''

அப்படிக் கேட்டவனை கண்கள் கலங்கப் பார்த்தாள் தன்யா.

''ஏன் ரகு இப்படியெல்லாம் பேசறீங்க?''

''ஏன், பதில் சொல்ல முடியலையா?''



மீண்டுமொரு முறையும் தன்னிடத்திலிருந்து, தனது நியாயத்தைக் கண்கள் கலங்கினாலும் முயன்ற அளவு இயல்பான குரலில் விளக்கினாள் தன்யா.

பேச்சை இடைமறிக்காமல் தான் சொன்னதை ரகுநந்தன் கேட்டுக் கொண்டதில் சற்று நம்பிக்கை கூட வந்திருந்தது.

ஆனால், அடுத்த வினாடியே அந்த நம்பிக்கை தவிடு பொடியாகி விடப் போகிறது என்பதைப் பாவம் அதற்குப் பிறகுதான் தன்யாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

''அவ்வளவுதானா, இல்ல இனியும் இருக்கா?''

...............

''உன் கதையெல்லாம் பிரமாதம் தான். ஆனா அதக் கேட்டு மயங்க நான்தான் தயாரில்ல. நீ வேணும்னா ஒண்ணு செய்யேன், என்ன மாதிரி இன்னொரு...''

''போதும் ரகு.''

''ஓ. ரோஷம் வருதோ...''

''இந்தப் பிறவியில்ல இன்னும் எத்தன பிறவிகள் எடுத்தாலும் உங்க இடத்துக்கு இன்னொருத்தனக் கொண்டு வர, ஏன் நினைச்சுப் பாக்கக்கூட என்னால முடியாது.''

''உங்க இடத்துலிருந்து பாக்கும்போது உங்க கோபமும் நியாயமானது தான். அதத் தாங்கிக்கற சக்தி எனக்கு இல்லேங்கற ஒரே காரணத்துக்காக அதத் தப்புன்னு சொல்லிட முடியாது...'' என்றவளால் அதற்கு மேல் தொடர்ந்து பேச முடிந்திருக்கவில்லை.

சில வினாடிகள் எடுத்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டு மீண்டும் நிமிர்ந்து பார்த்தாள்.

ஏனோ அந்தப் பார்வையை ரகுநந்தன் இயல்பாக எதிர்கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இனியும் என்ன என்பதைப் போலப் பார்த்தான்.

அந்தப் பார்வையில் முற்றிலுமாக நம்பிக்கையிழந்து போயிருந்த தன்யா, மேலும் அதிகமாக மனம் நொந்து போய் விட்டிருந்தாள்.

"அப்ப என்ன மன்னிக்கவே முடியாதா ரகு..."

"எத்தன தடவ சொல்றது உனக்கு. இப்ப நீயாவே கிளம்பறியா இல்ல கழுத்..."

என்னதான் ரகுநந்தன் பாதியில் நிறுத்தி விட்டிருந் தாலும் அவன் என்ன சொல்ல வந்தான் என்பதைத் தன்யாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஏனோ அதுவரை ஒட்டிக் கொண்டிருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் இப்பொழுது இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய் விட்டிருக்க, அதற்கு மேல் ஒரு வினாடி அங்கு நிற்க நேர்ந்தாலும் கதறி விடுவோமோ என்று வெளியே வந்து விட்டிருந்தாள்.

அப்படிக் கிளம்பிய தன்யா நேராகச் சென்றது தாயும், தானும் வசித்த அந்த வீட்டிற்கே.

என்னதான் அப்படியெல்லாம் பேசி விட்டிருந்தாலும் அதற்குப் பிறகு ரகுநந்தனாலும் இயல்பாக இருக்க முடிந்திருக்கவில்லை.

ஏன் ஒன்றுமே முடிந்திருக்கவில்லை.

அதிலும் கடைசியாகத் தான் சொல்லி விட்டிருந்த வார்த்தைகள் அவனை எல்லையற்ற வேதனைக்குள் ளாக்கி விட்டிருந்தன.



சொன்ன தனக்கே இப்படியிருக்கிறதென்றால், அதைக் கேட்க நேர்ந்த தன்யாவிற்கு எப்படி இருந் திருக்கும்.

அதிலும் கடைசியாக அவள் பார்த்த பார்வை.

அனைத்துமே முடிந்து விட்டாற் போல... இனி வாழ்க் கையில் ஒன்றுமே இல்லாததைப் போல...

அதே போக்கில் தொடர்ந்து யோசித்தவனால் ஏனோ சில நிமிடங்களுக்கு மேல் முடிந்திருக்கவில்லை.

இருக்கையை விட்டு எழுந்திருந்தான்.

கடவுளே என்ன வார்த்தை சொல்லி விட்டோம்.

வேகமாக வெளியே வந்தவன் காரில் ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்திருந்தான்.

ஏதோ தோன்ற உடனே தனது கைபேசியை எடுத்து தன்யாவிற்கு அழைத்திருந்தான்.

ஸ்விட்ச் ஆஃப் என்று வர காரணமே இல்லாமல் நடுங்கி விட்டிருந்தான்.

வேகமாகக் காரைச் செலுத்தியவன் வழியெங்கும் தேடினான்.

தன்யாவை எங்கும் காணாது போக இயல்பாக மூச்சு விடக் கூட மறந்து உறைந்து போய் விட்டிருந்தான்.

அடுத்த சில நிமிடங்களில் தன்யாவின் வீட்டை வந்தடைந்திருந்தவன், அதுவும் பூட்டியிருக்கக் கண் டான்.

மனம் கேட்காமல் மீண்டுமொரு முறையும் தன்யா வின் கைபேசிக்கு அழைத்தான்.

அதே பதில் தான் வந்தது.

இப்பொழுது என்ன செய்வது என்று நினைத்தவனுக்கு அவனையறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருந்தன.

கையருகில் வந்த சொர்க்கத்தை நாமே காலால் எட்டி உதைத்து விட்டோமே.

அவளில்லாத வாழ்க்கையில் தனக்கும் தான் என்ன இருக்கிறது.

மனமும் உடலும் ஒருசேர நடுங்கி விட்டிருக்க செய்வதறியாது அப்படியே இருக்கையின் பின்னால் அப்படியே சாய்த்தவாறு கண்களை மூடி அமர்ந்து விட்டிருந்தான் ரகுநந்தன்.

தொடர்ந்து சில வினாடிகளில் தன்னருகில் ஏதோ ஆட்டோ ஒன்று வந்து நிற்கும் ஒலியில் கண்களைத் திறந்து பார்த்தான்.

அப்படிப் பார்த்தவனுக்கு வினாடி கூட ஒதுங்க நிழலில்லாமல் கடுமையான வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்த பயங்கரமான பாலைவனத்தில் திடீரென்று எங்கிருந்தோ வந்த பூங்காற்று இதமாகத் தாலாட்டியதைப் போல மனமும் உடலும் ஒருசேரத் தொய்ந்து போய் விட்டிருந்தன.

கூடவே எல்லையற்ற நிம்மதியும்.

ஏனென்றால் அந்த ஆட்டோவில் வந்து இறங்கியது வேறு யாருமல்ல, தன்யாவே.

சரியாக அதே நேரம் அவளும் ரகுநந்தனைத் திரும்பிப் பார்க்க அவனும் காரை விட்டு இறங்கியிருந்தான்.

தன்யாவின் அந்தப் பார்வையில் நம்பிக்கை, ஏக்கம், பயம்... என இன்னும் என்னென்னவோ உணர்ச்சிகள்



தென்பட்டாலும் அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் அப்பொழுது ரகுநந்தன் இருக்கவில்லை.

ஆட்டோவை அனுப்பி விட்டு வந்த தன்யா நேராகச் சென்று வீட்டின் கதவைத் திறந்திருக்க, அவளைத் தொடர்ந்து தானும் உள்ளே வந்திருந்த ரகுநந்தன் திரும்பி தன்யா திறந்திருந்த கதவுகளை உள்பக்கமாகத் தாழிட்டிருந்தான்.

ரகுநந்தனின் செய்கை புரியாது தன்யா அவனைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் தானும் திரும்பி அவளைப் பார்த்தான் அவன்.

அவ்வளவுதான்.

அடுத்த வினாடி அவளைத் தன்னருகில் இழுத்திருந்தவன் அவளுடைய கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

ரகுநந்தனின் அந்தப் பார்வையைத் தொடர்ந்து எதிர்கொள்ள முடியாது தன்யாவின் பார்வை தாழ்ந்திருக்க, தனது இரு கரங்களாலும் அவளுடைய முகத்தை ஏந்தியிருந்தான் ரகுநந்தன்.

"நீ ஜெயிச்சுட்டடா..."

"ரகு..."

அடுத்த வினாடி அவளை மேலும் அருகில், இழுத்திருந்த ரகுநந்தன் தனது மார்போடு அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

ஏதேதோ கேட்கத் தோன்றினாலும் ரகுநந்தனின் அந்த அணைப்பில் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை மறந்து கொண்டிருந்த தன்யாவால் ஒன்றும் முடிந்திருக்கவில்லை.

உடலும் மனமும் ஒரேயடியாகத் தொய்ந்து போய் விட்டிருக்க, தொடர்ந்து வந்த சில வினாடிகளில் ரகுநந் தனின் அணைப்பில் முற்றிலுமாகத் தன்னை மறந்து போயிருந்தாள்.

ஏன் இருவருமே,

முதலில் தன்னிலை உணர்ந்து நடப்பிற்கு வந்திருந் தது தன்யாவே.

தன்யாவிடம் அசைவை உணர்ந்த ரகுநந்தன் அடுத்த சில வினாடிகளிலேயே தானும் நடப்பிற்கு வந்திருந் தான்.

''என்னடா?'' ரகுநந்தன் கேட்க,

''எப்பிடி... இத என்னால நம்பவே முடியலையே...'' என்று அவனுடைய அருகாமையிலும் பார்வையிலு மாகத் திக்கித் திணறி முகம் சிவக்கக் கேட்டாள் தன்யா.

அவளுடைய அவஸ்தையை ரசித்த ரகுநந்தன் ''எத?'' என்று வேண்டுமென்றே கேட்டான்.

''எம்மேல... இப்ப உங்களுக்குக் கோபமில்லையா?''

தன்யாவின் கேள்வியில் சற்று முன் நடந்ததையெல் லாம் மீண்டும் நினைவு கூர்ந்தவனாய் சில வினாடிகள் யோசித்து விட்டுப் பின் நடப்பிற்கு வந்திருந்தவன் ''கோபம், இருக்கிற கொஞ்சம் நல்லதையும் மறைச்சுடு துமா, அதோட நாளுக்கு நாள் வெறுப்பையும், வேதனை யையும் அதிகமாக்கிட்டே போகுதே தவிர குறைக்கற தில்ல. அதனால இனி வாழ்க்கைல அவசியமில்லாம முக்கியமா உங்கிட்டக் கோபப்பட்ற சக்தி எனக்கு இல் லமா'' என்று உணர்ந்து சொன்னான்.



''ஏன் சிரிக்கற?'' ரகுநந்தன் கேட்க,

''பேசவே காசு கேப்பீங்க, சின்னக் கேள்விக்கு இப்ப இவ்ளவவு பெரிய பதிலா?''

''ம், அப்புறம்?''

கண்களும் சிரிக்கக் கேட்டவனின் பார்வையில் தனது பழைய ரகுநந்தனைக் கண்டாள் தன்யா.

''என்னடா?''

''இது நிஜமா ரகு?''

''பின்ன? போதும்மா இனிமேலும் என்னால உன்ன தூரத்துல வெச்சுப் பாக்க முடியாது. ரெண்டு வருஷப் பிரிவே போதுன்டா அதுல அனுபவிச்ச வேதனையும்...''

அதைச் சொல்லும்போது ரகுநந்தனின் வார்த்தை களிலும், முகத்திலும் தொனித்த உண்மையான வேதனை யில் ''ரகு'' என்று அவனை இறுக அணைத்து ''வேண் டாம் ரகு'' என்று கண்கள் கலங்கச் சொன்னாள் தன்யா.

''போய் மூட்ட முடிச்சுகளக் கட்ற வேலையப் பாரு'' என்று தன்னைப் புரியாமல் பார்த்தவளிடம் ''ஊருக்குக் கிளம்பலாம் உன்ன விட்டுட்டு நான் கிளம்பி வந்துட் றேன்'' என்றான்.

''ஏன்... எதுக்கு?''

''ம், இன்னும் ஒரு வாரத்துல நமக்குக் கல்யாணம். எல்லா வேலைகளும் ஊர்ல ஜரூரா நடந்துட்டிருக்கு. இனியும் நீ இங்க இருந்தா...''

அதற்கு மேல் ரகுநந்தனைப் பேச அவள் விட்டிருக்க வில்லை.

எல்லையற்ற காதலுடன் ''ரகு...'' என்று அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கினாள்.

அவ்வளவுதான்.

அடுத்த வினாடி ரகுநந்தனின் கைகளில் பச்சை மண்ணாகிப் போயிருந்தாள் தன்யா.